பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 04 சனிக்கிழமை (19.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 023

# அகதிகள் சகலரும் சொந்த மண் மீண்டு வாழ வழிசெய்ய உறுதி அளிக்கிறார் சரத்

## கண்டியில் நேற்றுக் கொள்கைப் பிரகடனம்

கண்டி, டிசெம்பர் 19

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த அகதிகள் அனைவரும் தத்தமது சொந்த இடங்களுக்கு மீண்டு, அங்கு சுதந்திரமாகவும், சகல வசதிகளுடனும் வாழ்வதற்கான வழிவகைகளைத் தாம் ஜனாதிபதியானதும் உறுதியாகச் செய்துகொடுப்பார் எனச் சூளுரைத்திருக்கின்றார் எதிர்க் கட்சியின் சார்பில் இந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறங்கியிருக்கும் சரத் பொன்சேகா.

நேற்று முற்பகல் 11.30 மணிக்கு கண்டி ஸ்ரீபுஷ்பதான கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் தனது கொள்கைப் பிரகடனத்தை மக்கள் முன் வாசித்து உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

அந்த நிகழ்விலேயே மேற்படி விடயம் உட்பட்ட பத்து அம்சங்கள் அடங்கிய உறுதிமொழியை அவர் வழங்கினார்.

பௌத்த பீடாதிபதிகள் மற்றும் பல்வேறு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் முன்னிலையில் இந்த சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றது. (17ஆம் பக்கம் பார்க்க)

## உலக வங்கி 7 கோடி டொலர் நிதி உதவி வழங்கும்

கொழும்பு, டிசெ. 19

உலக வங்கி, இலங்கைக்கு 7 கோடி 70 லட்சம் டொலர்களை உதவியாக வழங்கும் ஒப்புதலை அளித்துள்ளது. இந்த ஒப்புதல் நேற்றுமுன்தினம் வாஷிங்டனில் வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற நலத்திட்டங்களுக்காக 6 கோடி 50 லட்சம் டொலர்கள் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் அத்தியாவசிய (20ஆம் பக்கம் பார்க்க)

## வருங்காலச் சந்ததியினரின் வாழ்வை வளமாக்குவேன் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த



கொழும்பு, டிசெ. 19

இந்த நாட்டில் பயங்கரவாதத்தை எவ்வாறு இல்லாது ஒழித்தேனோ அவ்வாறே இந்த நாட்டின் வருங்காலச் சந்ததியின் வாழ்வை வளமாக்குவேன் - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அநுராதபுரம் சல்காது விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைக் கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு—வவுனியா பஸ் பயணிகள் நேற்றுச் சோதனை எதுவுமின்றிப் பயணம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா மற்றும் கொழும்புக்கு ஏ-9 பாதையூடாக பொதுமக்கள் செல்வதற்கு இருந்த கட்டுப்பாடுகள் நேற்று தளர்த்தப்பட்டிருந்தன.

போக்குவரத்துச் சபை பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் எந்தச் சோதனைகளும் (20ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் இருந்தும் வவுனியாவுக்கு இன்று பஸ் சேவை ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம், டிசெ.19

பருத்தித்துறையில் இருந்து வவுனியாவுக்கு போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை இன்று முதல் ஆரம்பமாகின்றது. பருத்தித்துறை டிப்போ அதிகாரி இத்தகவலைத் தெரிவித்தார்.

பருத்தித்துறையில் இருந்து அதிகாலை 5 மணிக்குப் புறப்படும் பஸ், நெல்லியடி, கொடிகாமம் ஊடாக வவுனியாவைச் சென்றடைந்து, அன்றையதினமே அங்கிருந்து பருத்தித்துறைக்குத் திரும்புமென அவர் மேலும் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தொடர்ந்தும் அங்கம் வகிக்கும் என்கிறார் செல்வம்

கொழும்பு, டிசெ. 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டாலும் ரெலோ அமைப்பு தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கு வாக்குச் சாவடிகள்; இன்று கொழும்புக் கூட்டத்தில் ஆராய்வு

கொழும்பு, டிசெ. 19

வடக்கு, கிழக்கில் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பிற்கான வாக்குச்சாவடிகளை அமைப்பது குறித்து ஆராய்வதற்கான முக்கிய கூட்டம் இன்று கொழும்பு, இராஜகிரியவிலுள்ள தேர்தல் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.எஸ்.பி. வரிச் சலுகை ரத்துக் குறித்து வேட்பு மனுத் தாக்கலன்று அறிவித்ததேன்?

### பக்கச்சார்பானது என்று அரச தரப்பில் சீற்றம்

கொழும்பு, டிசெ. 19

இலங்கைக்கு 'ஜி.எஸ்.பி.பிளஸ்' என்ற வரிச்சலுகை வழங்குவதைத் தற்காலிகமாக இடைநிறுத்துவது என்று ஐரோப்பிய ஆணைக்குழு எடுத்த முடிவு பக்கச்சார்பானது. இது தொடர் பில் இலங்கைக்கு அநீதி இழைக்கப்பட் டிருந்தால் ஐரோப்பிய ஆணைக்குழு விற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து தீவிரமாக ஆலோசிக்கப்படும் என் றும் அரசு சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட அன்றைய தினம்தான் 'ஜி.எஸ்.பி.' சலுகையை நிறுத்துவதென ஐரோப்பிய ஆணைக்குழு' தீர்மானம் வெளியிட்டுள்ளது.இதன்மூலம் ஐரோப்பிய ஆணைக்குழு பக்கசார்பாகச் செயற்படுகின்றது என்பது புலனாகின்றது (19ஆம் பக்கம் பார்க்க)

## விளக்கமறியலில் இருக்கும் கைதியை தடுப்புக் காவலுக்கு மாற்ற முடியாது

### உயர்நீதிமன்றம் நேற்றுக் கண்டிப்பான உத்தரவு

கொழும்பு, டிசெ. 19

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, பின்னர் நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட கைதிகள் தொடர்பில் வழக்குத் தொடர முடியுமே தவிர, அவர்களை புதிய உத்தரவின்பேரில் சிறையிலிருந்து தடுப்புக்காவலுக்கு மாற்ற முடியாது.

- இவ்வாறு அரசுத் தரப்புக்குக் கண்டிப்பான உத்தரவு ஒன்றை உயர்நீதிமன்றம் விடுத்தது.

வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்ட தியாகராஜா மோகனரூபன் (வயது - 33) என்ற இளைஞர் தொடர்பாகத் (17ஆம் பக்கம் பார்க்க)

அறிமுகப்படுத்துகிறோம்
யாழ் நகரிலும், கொழும்பிலும்
ஒரே சுவை, ஒரே தரம், ஒரே விலை

Cosy Hotel & Restaurant
Open 06.00am to 11.00pm
விசேட வடஇந்திய காலை உணவு
பூரி, சப்பாத்தி, பரோட்டா, நாண், சைவ, அசைவ கறிவகைகளும் மற்றும்
Indian, Chinese, Panjabi & Jaffna Foods
கொசி உணவகம்
Feel like home

இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. HOTLINE: 0112504020
இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். HOTLINE: 021-2225899

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேர்தல் வன்முறைகள் இப்போதே இருபது!

கொழும்பு, டிச. 19

நாட்டின் பல்வேறு பகுதிகளில் தேர்தலுக்கு முன்னரான - தேர்தலுடன் தொடர்புடைய - சிறு தாக்குதல் சம்பவங்கள் உட்பட இருபது வன்முறைச்சம்பவங்கள் சம்பந்தமான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்கள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன எனத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.


## தவறிவிட்டது

UM 7200 எனும் இலக்கத்தையுடைய மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு யாழ்ப்பாணத்துக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பிற்கு

T.P.:- 0778694896

## விற்பனைக்கு

உருக்கு அலுமாரி பெரியது, சிறியது, முதிரைக்கட்டில்கள், குழந்தைத்தொட்டில், பெரிய மேசை மற்றும் சமையலறைப் பொருள்கள், உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 69, மடம் வீதி, யாழ்ப்பாணம்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் 2010 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

18.12.2009ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளியான மீள் கேள்வி அறிவித்தலின் திருத்தம்

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி: 2009.12.23 பி.ப 1 மணி வரை (புதன்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 2009.12.24 நண்பகல் 12 மணிவரை (வியாழன்)

கேள்வி திறக்கும் திகதி : 2009.12.24 பி.ப 2 மணி (வியாழன்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம், மானிப்பாய். 18.12.20009

(C/563352)

திருமதி .பு. சிவலிங்கம்
செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## சேவை நலன் பாராட்டும் 60 ஆவது பிறந்ததின வாழ்த்தும்



### நல்லதம்பி பத்மநாதன்
(பல நோக்கு கூட்டுறவு சங்கம், காரைநகர்)

இன்று (19.12.2009) சனிக்கிழமை தனது 60ஆவது பிறந்ததினத்தில் தனது சேவையை பூர்த்தி செய்யும் அவரை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

இலகடி, காரைநகர்.

வாழ்த்துவோர். குடும்பத்தினர்.

## NEW YARL HOSPITAL
## தேவை

1. தாதியர் (பயிற்றப்பட்டவர்கள்) தகுதியானவர்களுக்கு அதிகூடிய வேதனம் வழங்கப்படும். (இரவு - பகல்)
2. தாதி பயிலுனர் (பயிற்சிக்காலத்தில் 6 மாதத்திற்கு மாதாந்தம் 1500/= வழங்கப்படும்) (இரவு/பகல்)
3. வரவேற்பாளர் (கணனி அனுபவம் - பெண்கள்)
4. கணக்குப் பதிவாளர்

நேர்முகத் தேர்வு: ஞாயிற்றுக்கிழமை : 20.12.2009 காலை 10 மணிக்கு
குறிப்பு - தகுதிச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

நியூ யாழ் வைத்தியசாலை,
315, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
T.P - 021 222 3533, 021 222 1011

(91550)

## தென்னம்பிள்ளை விற்பனைக்குண்டு

நல்லின தென்னம்பிள்ளைகளும், குறைந்த காலத்தில் பயன்பெறும் தென்னம் பிள்ளைகளும் உண்டு.

தொடர்பு - 0776592044

## வேலையாள் தேவை

K.R.COMPLEX கணனி மல்ரி சென்ரருக்கு கணனி அனுபவமுள்ள பெண் வேலையாள் தேவை.

* சுன்னாகம் பிரதேச சபைக்குட்பட்டவர் விரும்பத்தக்கது.

20.12.2009 ஞாயிற்றுக்கிழமை 9 - 5 மணிக்கு நேரில் வரவும்.

K.R.COMPLEX 0771726642
அம்பலவாணர் வீதி, உடுவில், சுன்னாகம்.

## காணி விற்பனைக்கு

கொடிகாமம் ராமா கோயிலுக்கு அருகாமையில் உயர்மேட்டு நிலக் காணி 12 பரப்பு விற்பனைக்குண்டு.

தொடர்பு: தம்பிஐயா, சந்தை வீதி, கொடிகாமம், T.P 0770759634

## விற்பனைக்கு

புத்தம் புதிய HARA 5550 (JUKI) OVER LOCK ரக தையல் இயந்திரங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும், விற்பனைக்குண்டு.

குறிப்பு: தையல் வேலை தெரிந்தவர்கள் தேவை.

தொடர்பு: சிற்றி சன் போய்ஸ் செலக்ஷன் அன் ரேயிலறிங் இல.1, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம். T.P.:0776143301

## விற்பனைப்பிரதிநிதி (BUSINESS REPRESENTATIVE)

யாழ்.நகரில் இயங்கும் Durdans (டேடன்ஸ்) ஆய்வு கூடத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. மும்மொழிகளிலும் பரீட்சையம், சரளமாக பேசும் பழக்கம் அவசியம். வைத்திய வட்டாரங்களில் அனுபவம் இருப்பது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

T.P - 0718138884, 0714456950

## கஜன் வீடியோ சென்ரர்

ஒரிஜினல் ஐங்கரன் VCD வெளியீடு



01.ஆதவன்
02.பேராண்மை
03.கண்டேன் காதலை
04.வாமனன்
05.ஜகன் மோகினி
06.அழகர் மலை
07.சூரியன்
08.திருத்திரு துருதுரு
09.வண்ணத்துப் பூச்சி
10. 94 VCD அடங்கிய மகாபாரத வெளியீடு
11. 56 VCD அடங்கிய இராமாயாணம் வெளியீடு
12. திருக்குறள் - 1330 அடங்கிய ஒடியோ - CD
13. கிறிஸ்மஸ் சோங் CD கள் வெளியீடு

50 CENT AUDIO CD கள் வெளியீடு

ORIGINAL பிரதிகள் பெற்றுக் கொள்ளலாம்.

கஜன் வீடியோ
பலாலி வீதி, தபால் பெட்டிச் சந்தி, திருநெல்வேலி
T.P - 021 222 6086


## மரண அறிவித்தல்கள்

### விசுவநாதர் தம்பிராசா ஆச்சாரியர்
(சிற்பக்கலாபூசணம், சிற்பக்கலைமாமணி, சிற்பக்கலாபதி)

அராலிதெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட விசுவநாதர் தம்பிராசா நேற்று (18.12.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் குறித்த விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

### க.இ. குமாரசாமி J.P.
(ஓய்வு பெற்ற அதிபர், கூட்டுறவாளர், தமிழர் ஆசிரிய சங்க முன்னாள் செயலாளர்)



கோப்பாய் மத்தியைச் சேர்ந்த க.இ. குமாரசாமி நேற்று (2009.12.18) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை, நாவலர் பாடசாலை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் திருமதி இந்திரகுமாரி - சிவானந்தம் (ஓய்வுபெற்ற உப.அதிபர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), காலஞ்சென்ற திருமதி. அரவிந்தகுமாரி - லோகேஸ்வரன் (முன்னாள் ஆசிரியை, யா/அத்தியார் இந்துக் கல்லூரி), திருமதி கிருஜகுமாரி - ஜெயரத்தினம் (Accountant - U.K.), Dr. திருமதி வசந்தகுமாரி மகேசன் (U.K.), உருத்திரகுமார் (Director. K.R. Accounting Services) ஆகியோரின் அன்புத் தந்தையும், இ.சிவானந்தன் (ஓய்வுபெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர்), காலஞ்சென்ற லோகேஸ்வரன் (Attorney-at-law), ஜெயரத்தினம் (U.K. Chemical consultant), மகேசன் (U.K. Solicitor), திருமதி சுகந்தினி ருத்திரகுமார் (ஆசிரியை, கொ/விவேகானந்தாக் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுகிந்திரன், ஜனத்தன், ஜெயராம், ஜெயஹரி, பிரகதீஸ், செ[illegible]கா ஆகியோரின் பாட்டனாரும், லோகேசின் பூட்டனாரும் ஆ[illegible]ர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (21.12.2009) திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இரத்தின வாசா
நிலாவரை ஒழுங்கை, கோப்பாய் மத்தி,
கோப்பாய். தொ.பே. - 0213214279.

(சி/563364)

தகவல்:
இ. சிவானந்தன் (மருமகன்)
திருமதி. சி. இந்திரகுமாரி (மகள்).

### முருகர் சின்னத்துரை

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் நகுலேஸ்வர வீதி, கீரிமலையை வதிவிடமாகவும், தற்போது இளவாலையில் வசித்து வந்தவருமான முருகர் சின்னத்துரை 17.12.2009 (வியாழக்கிழமை) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், இராசாத்தி, இராசேஸ்வரி, தர்மலிங்கம் (கொழும்பு), புவனேஸ்வரி, சண்முகலிங்கம் (ஜேர்மனி), நகுலேஸ்வரி, காலஞ்சென்ற நாதர்லிங்கம் மற்றும் சிவனேஸ்வரி ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

(சி/563363)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

### மாணிக்கவாசகர் கந்தசாமி
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)



சங்கரத்தை, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் கந்தசாமி 16.12.2009 சங்கரத்தையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் சித்தன்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இன்ஸ்பெக்டர் இராசையா - நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கோகுலராணியின் அன்புக் கணவரும் கலாவல்லி, பாலமுருகன், மயூரமுருகன், நிமலமுருகன், செல்வமுருகன், அன்னச்செல்வி, மாணிக்கவல்லி ஆகியோரின் அன்புத் தந்தையும் அபுசாலி, காலஞ்சென்ற சிவசக்தி மற்றும் மைதிலி, தணிகை (வேணி), சுகன்யா, சிவரூபன், நேமிநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆஷா, ஆசீவ், பிரணவன், சனோஜா, சாயினியா, கஸ்தூரி, பிரவின், நிருஷன், ரூபினி, சாரங்கன், ஜயனி, றிஸ்வானி, றக் ஷன், கிருஷான், லதுஷன் ஆகியோரின் அன்புப் பேர னும் செல்வராணி, சுகுமாரன், கமலராணி, தனபாக் கியம், ஈஸ்வரகுமாரன், வடிவாம்பிகை, பராசக்தி, காங் கேசன், காலஞ்சென்ற அருணகிரி ஆகியோ ரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.12.2009) சனிக்கிழமை மாலை 4 மணி முதல் நாளை ஞாயிறு இரவு வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளுக்காக லண்டனுக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(91605)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை மகேஸ்வரன்



கச்சாய் பாதாள வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை மகேஸ்வரன் 17.12.2009 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - பாறுப்பிள்ளை தம்பதியினரின் புத்திரனும், காலஞ்சென்ற மூத்ததம்பி - சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும், உமாபதியின் அன்புமிகு கணவரும், சாயித்தியன், டிலக்சிகா, கலையரசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரன், மகேஸ்வரி, மனோகரி, மகேந்திரன், மனோராணி, மகாநிதி, மகாதேவன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அல்லாரை கொற்புலவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கன் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

(சி/563367)

தகவல்: குடும்பத்தினர்,
தொ.பே.எண் - 0772336229

# நாட்டில் பரவலாக மழை பெய்யும்

கொழும்பு, டிசெ. 19

கிழக்குக் கடற்கரையோரப் பகுதிகளில் மழை பெய்யும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலத் திணைக்களத்தின் கொழும்புத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக இடி முழக்கத்துடன் கூடிய மழை பெய்யும் என்றும் கடும் காற்று வீசும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் பொதுமக்களை மின்னல் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தாராளமாகச் சூட்டப்படும் 'தேசத்துரோகி' என்ற பட்டம்

இந்த இலங்கைத் தீவில் இலகுவாக யாருக்கும் சூட்டி விடக் கூடிய பட்டம் ஒன்று இருக்குமானால் அது 'தேசத்துரோகி' பட்டம்தான்.

முதலில் தமிழ் மக்களின் உரிமைக்காக - நீதி, நியாயம் வேண்டி - போராடியவர்களைத் தேசத்துரோகிகள் என்றார்கள். பின்னர் அவர்களுடன் சமரசம் பேசி, சமாதானம் காண முயன்ற தென்னிலங்கைத் தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க போன்றோருக்குத் தேசத் துரோகப்பட்டம் சூட்டினர்.

இப்போது, தென்னிலங்கை மக்களுக்காக விடுதலைப் புலிகளுடன் போர் நடத்திய - அந்தப் போரை அவர்கள் சார்பில் வெற்றிகரமாக முன்னெடுத்த - இராணுவத் தளபதிக்கே தேசத்துரோகி பட்டமளித்து விட்டார்கள்.

இந்த அரசுத் தலைமைக்கு எதிராகக் கருத்து வெளியிடுபவர்கள் எல்லோருக்கும் தேசத் துரோகிப் பட்டம் இலகுவாக வழங்கப்பட்டு விடுகிறது என்பதுதான் விந்தையானது.

அவர்கள் எதிர்க்கட்சித் தரப்பினராக இருக்கலாம், ஊடகவியலாளர்களாக இருக்கலாம், மனித உரிமை ஆர்வலர்களாக இருக்கலாம் அல்லது தொண்டுப் பணியாளராக இருக்கலாம். யார் என்றாலும் நீதி, நியாயம்பற்றிப் பேசினால் - அதுவும் சிறுபான்மையினர் நலனுக்காகக் குரல் எழுப்பினால் - அவர் 'காட்டிக் கொடுத்தவர்' ஆகிவிடுகின்றார் என்பதே தென்னிலங்கையின் இன்றைய அரசியல் சித்தாந்தமாக இருக்கின்றது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஒரு தடவை ''நீங்கள் ஒன்றில் எங்கள் பக்கத்தில் இருக்கவேண்டும். இல்லையேல் எதிரி பக்கத்தில் இருக்கின்றீர்கள் என்றுதான் அர்த்தம்'' - எனப் பகிரங்கமாக உலக நாடுகளைப் பார்த்துக் கூறினார். அதாவது, அமெரிக்காவின் பக்கம் சாயாத எல்லோரையும் - எல்லா நாடுகளையும் - அமெரிக்காவின் எதிரிகளாகவே கருதுவோம் என்று சர்வ தேசத்தையும் பார்த்து எச்சரிக்கை செய்தார் புஷ்.

அதுபோலத்தான் இலங்கையிலும். தமிழர் தாயகப் பகுதி மீது தொடுக்கப்பட்ட கொடூரப் போருக்கு முழு ஆதரவளித்து, அதை நியாயப்படுத்த வேண்டும். அப்படிச் செயற்படாமல் இருக்கும் அனைவரும் தேசத்துரோகிகள் என்ற நாமகரணம் சூட்டப்படும் விசன நிலையே இங்கு காணப்படுகின்றது.

இந்த இனப்பிரச்சினையிலே பெரிதும் பாதிக்கப்பட்ட - அவலப்பட்ட - தரப்பு சிறுபான்மையினரான தமிழர்கள்தான். அவர்களின் பக்கத்தில் உள்ள நீதி, நியாயங்களை எடுத்துரைக்க முனைந்தால் அவர் தேசத்துரோகியாகி விடுவார்.

இந்த வரிசையிலே இப்போது எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிடும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்குத் தேசத்தைக் காட்டிக் கொடுத்த துரோகி என்ற பட்டம் இலகுவாகச் சூட்டப்பட்டுள்ளது. அதன் பின்னணியில் புதைந்து கிடக்கும் தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் கருத்து நிலைப்பாடு ஆழ்ந்து நோக்கத்தக்கது.

யுத்தத்தின் இறுதி நாள்களில் வெள்ளைக்கொடி தாங்கியபடி சரணடைய முன்வந்த விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் நடேசன் மற்றும் புலித்தேவன், ரமேஷ் போன்ற தலைவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்ற சாரப்பட ஜெனரல் சரத் பொன்சேகா கருத்து வெளியிட்டார் என்று பிரசுரமான செய்தியே இங்கு பிரச்சினைக்குரியதானது.

அந்தச் செய்தியை அடுத்து தெற்கில் கிளம்பிய அரசியல் அதிர்வலைகளை அடுத்து, அப்படித் தாம் கூறவில்லை என்றும் தமது கருத்து தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு விட்டது என்றும் 'மறுத்தான்' அறிவிப்பு விட வேண்டியவரானார் பொன்சேகா. நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமது வாக்கு வங்கி சரியாமல் காப்பதற்காக அப்படி அதிரடி மாற்று நடவடிக்கையை எடுக்க வேண்டியவரானார் அவர் என்பது வெளிப்படை.

இதில் இரண்டு விடயங்கள் பொதிந்துள்ளன.

ஒன்று - சிறுபான்மையினரான தமிழருக்கு யுத்த களத்திலும் அநீதி இழைக்கப்பட்டது என்ற உண்மையைச் சொன்னால், அவர் அந்த யுத்தத்தை வெற்றிகரமாக நடத்தி, கொழும்பு அரசுக்கும் அதன் மக்களுக்கும் யுத்த மீட்சியைப் பெற்றுத் தந்தவராக இருந்தாலும் சரி, அவர் நிராகரிக்கப்பட்டு, புறந்தள்ளப்பட்டு, ஒதுக்கப்பட்டுவிடுவார் என்பது.

அடுத்தது - பொன்சேகா கூறியவை என ஆரம்பத்தில் வெளிவந்த கருத்துகளைப் போல - வெள்ளைக்கொடியுடன் சரணடைய முன்வந்தோர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்ற செய்தியைப் போல - எதுவும் களத்தில் நடக்கவில்லை என்ற மறுப்பிலும் பார்க்க 'பொன்சேகா நாட்டைக் காட்டிக் கொடுத்து விட்டார்' என்ற கூச்சலே தென்னிலங்கை பௌத்த, சிங்களத் தலைமைகளிடமிருந்து அதிகம் வெளிப்பட்டமையையும் அவதானிக்க முடிகின்றது.

அப்படி ஒரு சம்பவம் உண்மையில் நிகழவில்லை என்றால், 'பொன்சேகா கூறியவை பொய்' என்ற மறுப்புத்[illegible] பெரிய அளவில் வரவேண்டும். 'பொன்சேகா நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டார்' - என்ற குற்றச்சாட்டு முன் வரக்கூடாது.

சர்வதேசம் ஏற்றுச் சகிக்க முடியாத ஏதோ ஒரு பெரும் தவறு நிகழ்ந்து, அதனை பொன்சேகா அம்பலப்படுத்தினார் என்றால்தான் அவரைத் தங்களைக் காட்டிக் கொடுத்தவராகத் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் கூறமுடியும்.

தென்னிலங்கை அரசியல் தலைமை, பொன்சேகா காட்டிக் கொடுத்துவிட்டார் என்று தொடர்ந்து கூச்சலிடுவதால், காட்டிக் கொடுக்கப்படக்கூடிய 'கொடூரம்' அங்கு நிகழ்ந்துள்ளது என்பதுதானே தர்க்கரீதியான உண்மை......?

# ஏ-9 பாதையூடாக தனியார் பஸ்சேவை நேற்று ஆரம்பம்; இன்று 21 மினிபஸ்கள் சேவையில் ஈடுபடும்

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்குமிடையிலான பயணிகள் தனியார் மினி பஸ் சேவைகள் நேற்று ஆரம்பமாகின.

முதற்கட்டமாக நேற்று இரண்டு மினிபஸ்கள் பயணிகளை ஏற்றிக் கொண்டு வவுனியாவுக்குச் சென்றன என்று யாழ்.மாவட்ட தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத் தலைவர் கே.கெங்காதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்குமிடையிலான பயணிகள் பஸ் சேவையினை நடத்துவதற்கு தனியார் சிற்றூர்திச் சங்கம் அரச அதிபரிடம் 113 மினி பஸ்களின் விவரங்களைக் கையளித்தது.

அதன் பிரகாரம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் மினிபஸ்கள் தரப் பரிசோதனை செய்யப்பட்டு 21 பஸ்கள் சேவையில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது ஏ-9 தரை வழி ஊடாக யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்குமிடையில் தனியார் மினிபஸ் சேவையினை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சிடமிருந்து அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

இதன் முதற்கட்டமாக நேற்று இரண்டு மினி பஸ்கள் பயணிகளை ஏற்றிக்கொண்டு வவுனியாவுக்குச் சென்றன.

இன்று சனிக்கிழமை முதல் முதற்கட்டமாக தரப் பரிசோதனைக்குட்பட்டு தெரிவுசெய்யப்பட்டுள்ள 21 பஸ்களும் பயணிகள் சேவையில் ஈடுபடவுள்ளன.

இதுதவிர ஏனைய பஸ்களும் விரைவில் ஏ-9 தரைப்பாதை ஊடாகப் பயணிகள் சேவையில் ஈடுபடும்.

யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையிலான பயணிகள் மினிபஸ் சேவையில் ஈடுபடும் பஸ்களின் சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தால் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன- என்றார் அவர். (1-9)

# யாழ்.-வவுனியா மினிபஸ் சேவை ஆசனப்பதிவு திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்குமிடையிலான தனியார் மினி பஸ் சேவை ஆரம்பமானதையடுத்து அவற்றுக்கான ஆசனப் பதிவுகளை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் மேற்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் முதல் யாழ்.பஸ் தரிப்பு நிலையத்துக்கு அண்மையில் பயணிகள் ஆசனப் பதிவை மேற்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் தலைவர் கே.கெங்காதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையிலான மினிபஸ் சேவை நேற்று முதல் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பயணிகள் நலன் கருதி யாழ்.பஸ்தரிப்பு நிலையத்துக்கு அண்மையில் ஆசனப் பதிவுகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாளை மறுதினம் முதல் இது ஆரம்பமாகும்.

காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை பயணிகள் தமது ஆசனப் பதிவுகளை மேற்கொள்ளலாம்- என்றார் அவர். (50-9-224)

# காரைநகர் ஈழத்துச்சிதம்பரத்தில் திருவாதிரை உற்சவம் புதன் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைநகர் ஈழத்துச் சிதம்பர வருடாந்த மார்



கழித் திருவாதிரை உற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது. இந்த உற்சவத்திற்கான விரிவான ஏற்பாடுகள் ஆலய ஆதீனகர்த்தாக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உற்சவ காலங்களில் தினமும் காலை 7 மணிமுதல் மூலமூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் முற்பகல் 10 மணிக்கு மாணிக்கவாசகர் சுவாமிகள் எழுந்தருளி நடேசர் சந்நிதானத்தில் திருவெம்பாவை ஓதுதலும் தொடர்ந்து மாணிக்கவாசக சுவாமிகள் உள்வீதி உலாவருதலும் இடம்பெற்று பகல் 11 மணிக்கு வசந்தமண்டபப் பூசையை அடுத்து சுவாமி திருவீதி உலா வரும் காட்சி இடம்பெறும்.

இந்த உற்சவத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறும் தேர்த்திருவிழாவில் அதிகாலை 4.30 மணிமுதல் மூலமூர்த்திகளுக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து பஞ்சரத பவனி இடம்பெறும்.

அன்று இரவு 2 மணிமுதல் நடேசர் அபிஷேகமும் மறுநாள் ஜனவரி முதலாம் திகதி அதிகாலை 5 மணிக்கு ஆருத்திரா தரிசனமும் பிற்பகல் 3.30 மணிக்கு திருவூடல் உற்சவமும் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

இந்த உற்சவ காலங்களில் ஆலயத்திற்கு வருகைதரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் நலன் கருதி காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை, காரைநகர் பிரதேசசபை, சுகாதாரப் பகுதியினர், போக்குவரத்துச்சபையினர் உள்ளிட்ட பல திணைக்கள அதிகாரிகள் இணைந்து குடிதண்ணீர், சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு உள்ளிட்ட இதர வசதிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த உற்சவகாலங்களில் தினமும் யாழ்.பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து ஆலயம் வரை நேரடி பஸ் சேவைகள் இடம்பெற உள்ளதுடன் ஆலயச் சூழலில் அமைந்துள்ள மாணிக்கவாசகர் மடாலயம், ஈழத்துச் சிதம்பர சைவ அறப்பணி நிலையம் என்பவற்றில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளது. மணிவாசகர் சபையின் திருவாசக விழாவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

கடந்த காலங்களைவிட இம்முறை அதிகளவான பக்தர்கள் இந்த உற்சவங்களில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (1-250)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி | 05 20.12.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | பி.இ.01.16 வரை |
| நட்சத்திரம்: | திருவோணம் |
| | [illegible] வரை |
| [illegible] | 09.24-10.54 வரை |
| ராகுகாலம்: | 04.54-06.24 வரை |

# கல்வியியற் கல்லூரிகளில் ஆங்கிலப் பாடநெறிக்கு விண்ணப்பித்தோருக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

தேசிய கல்வி கல்லூரிகளில் 2010 ஆம் கல்வியாண்டிற்கு ஆங்கில பாடநெறிக்கு விண்ணப்பித்தோருக்கு பிரவேசப் பரீட்சை ஒன்று நடைபெறவுள்ளது

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தோருக்கான அறிவுறுத்தற் கூட்டம் நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு ஆங்கில பாடநெறிக்கு விண்ணப்பித்த சகல விண்ணப்பதாரிகளையும் கலந்துகொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (50)

# தகவல் தொழில்நுட்ப பரீட்சை நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.19

அடுத்தவருடம் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப பாடத்துக்கான பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களை இன்று காலை பாடசாலைகளுக்கு சமுகமளித்து பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

இடம்பெயர்ந்த மாணவர்கள் தற்சமயம் கல்விபயிலும் பாடசாலையிலேயே அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (1)

# நயினை ஆலயத்தில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

நயினைதீவு நாகபூஷணி தேவஸ்தான அறங்காவலர் சபையினால் மாதாந்தம் நடத்தப்பட்டுவரும் மருத்துவ முகாமில் இம்மாதத்துக்கான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

பல்துறையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் இந்த மருத்துவ முகாமில் சிகிச்சைகளை வழங்குவர். (1)

# முகாமைத்துவ இளமாணிப் பட்டக்கற்கை நெறி எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.19

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் 2010/2011 ஆம் கல்வியாண்டுக்கான முகாமைத்துவ இளமாணிப் பட்டக்கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கை நெறிக்கான தகைமையாக, இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் முயற்சியாண்மையும் சிறு வணிகமுகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறியை அல்லது முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். மாணவர்கள் இந்தக் கற்கை நெறிக்குரிய விண்ணப்பப் படிவங்களை விண்ணப்ப முடிவு திகதியான எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-1)

# மூத்த வங்கியாளர் நாளை கௌரவிப்பு

யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் மூத்த வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்துகொள்வார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## POST OF PUBLIC RELATIONS MANAGER

*Uthayan News paper requires a Public Relations Manager with the following capabilities.*

Retired Employees/Executives of Government Departments, state Corporations, reputed private Companies may also apply.

- Fluency in English Language.
- Handling correspondence independently.
- Ability to handle General Administration.
- Computer literacy is an added qualification.
- Knowledge of Sinhala Language is advantageous.
- Salary negotiable.

Please apply before 25.12.2009 with copies of testimonials to:
(Please give your contact number in your application)

*The Manager,*
New Uthayan Publication (Pvt) Ltd,
(சி/563357) 361, Kasthuriyar Road, Jaffna.



## காரைநகர் கிழவன் காடு கலாமன்றம் நடத்தும் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வும்

இடம் :- நல்லூர் இளங்கலைஞர் மன்றம்
காலம் :- 20.12.2009 ஞாயிறு பி.ப 2 மணி

தலைவர்
திரு.N.சோதிநாதன்
(கலாமன்றத் தலைவர்)

பிரதம விருந்தினர்
திருமதி ரூபிணி வரதலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்
திரு.R.T.ஜெயசீலன்
(உதவி அரசாங்க அதிபர், காரைநகர்)
திரு.S.சுதர்சன்
(உதவித்திட்டப் பணிப்பாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)
கலாகீர்த்தி திருமதி.சாந்தினி சிவநேசன்
(விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்)

கௌரவ விருந்தினர்கள்
திரு.திருமதி E.S.P.நாகரத்தினம்
(தொழிலதிபர், E.S.P. நிறுவனம், யாழ்ப்பாணம்)
திரு. திருமதி K.சிவநேசன்
(தொழிலதிபர், கணேசன் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
*நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள்,*
(சி/563360) கிழவன்காடு கலாமன்றம்.


## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவனும், கல்லூரியில் எழுதுவினைஞனாக பணிபுரிபவருமான, இ. செல்வராசா அவர்களின் அன்பு மாமியும், கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்களான விஜயநாதன், மகாநாதன், விஜயமலர், செல்வநாதன், யோகநாதன், மாலினி, மனோகரன் ஆகியோரின் அன்புத் தாயாருமான

### திருமதி மனோன்மணிஅம்மா நாகநாதன்

அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/563354) கனடா வாழ் கொக்குவில் மக்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் கனகசபாபதி

தெணியம்மன் வீதி, திருநாவலூர், புலோலி மேற்கைச் சேர்ந்த திருமதி நாகரத்தினம் கனகசபாபதி நேற்று (18.12.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேதவனம் கனகசபாபதியின் அன்பு மனைவியும், சிவஞானச்செல்வம் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர்), அருளானந்தம் ( ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி), செல்வநாயகம் (லண்டன்), செல்வராணி, சதானந்தம் (லண்டன்), சிவானந்தம் (லண்டன்), விவேகானந்தம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசக்தி, வசந்தாதேவி (ஆசிரியர், வேலாயுதம் ம.வி), நிர்மலா (லண்டன்), வி.சிவராமன் (பொறியியலாளர்), மேகலா (லண்டன்), கீதா (லண்டன்), தனுஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், அனோஜன், யோகினி, தினேஷ், பவுணா, மாதுமை, சிவானி, அனோஜா, லவூரன், லவுசா, சுஜன், சிலோசினி, வரூஷன், கீர்த்திகா, கீதினி, சகானா, கபிஷன், தஜனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'செல்வ இல்லம்',
தெணியம்மன் வீதி, புலோலி மேற்கு,
திருநாவலூர், பருத்தித்துறை. (சி/563366)
தகவல்: குடும்பத்தினர்.

## திறந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 19

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் பட்ட மேற்கல்வி டிப்ளோமா 2009/2010 ஆம் கல்வியாண்டுக்கான நாள் பாடசாலை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என்று இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை முயற்சியாண்மையும் சிறு வணிக முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறிக்கான (ESBM) பதிவுகள் இன்றும் நாளையும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-7)

## மானிப்பாயில் மாணவரை பாராட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 19

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் கல்விசார் சேவைத்திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் கோட்டத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை பாராட்டும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடாதிபதி கே.தேவராஜா கலந்து கொள்வார். (ஓ-1)

## தமிழர் நிலை குறித்து நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 19

''சிந்தனைக் கூடம் - யாழ்ப்பாணம்'' என்னும் அமைப்பின் ஏற்பாட்டில் ''அண்மைக்கால இலங்கை அரசியல் போக்கும் தமிழர் நிலையும்'' எனும் தலைப்பில் துறைசார் கல்வியாளர்களின் கருத்துரைகளும் பங்குபற்றுநர்களின் கலந்துரையாடலும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 முதல் 6.30 வரை 182, பிறவுண் வீதியில் அமைந்துள்ள ஐ.ஐ.ரி நிறுவன யாழ்.கிளை வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

ஆர்வலர்கள் எவரும் கலந்து பயன் பெற முடியுமென சிந்தனைக் கூடத்தினர் சார்பில் அதன் அமைப்பாளர் பேராசிரியர் இரா.சிவசந்திரன் அறிவிக்கின்றார். (ஓ-1)


### பணிப்பெண் தேவை

கொழும்பில் வசிக்கும் தமிழ் குடும்பத்திற்கு வீட்டு வேலை செய்வதற்கு 20 - 40 வயதிற்கு உட்பட்ட பணிப் பெண் தேவை.

தொடர்பு - 0773456779
சு. நடராசா
*வண்ணியசிங்கம் வீதி, இணுவில் தெற்கு.* (91570)

### வரவேற்பாளர்/கணக்காளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல ஹோட்டல் Blue Haven இல் வரவேற்பாளர், கணக்காளர் தேவை

கணனி, கணக்கு அறிவு, மும்மொழிகளும் தெரிந்திருத்தல் அவசியம். சுயவிவரக் கோவையுடன் 20.11.2009 காலை 9-11 மணிக்கிடையில் இல.70 றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் சமுகமளிக்கவும்.

T.P.021 222 9958


### பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வின் எச்சந்தர்ப் பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப் பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

[illegible] [illegible]

## மரண அறிவித்தல்கள்

### நாகராசா நல்லம்மா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா நல்லம்மா நேற்று (18.12.2009) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகசபை - சிவக்கொழுந்து தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும், புவனேஸ்வரி (பூமணி), காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் மனோன்மணி, காலஞ்சென்ற தவமணி மற்றும் தர்மராசா, மங்கையர்க்கரசி ஆகியோரின் பாசமிகு தாயும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (19.12.2009) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவடி மானிப்பாய் வீதி,*
*தாவடி தெற்கு, கொக்குவில்,*
*(கீதா கோவிலடி)* (91564)
தகவல்: ப.மனோன்மணி (மகள்).

### முருகேசபிள்ளை சுந்தரலிங்கம்



வேலணை மேற்கு, 7 ஆம் வட்டாரம், சிற்பனை முருகன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் நல்லூர், சட்டநாதர் சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசபிள்ளை சுந்தரலிங்கம் 17.12.2009 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

906/22, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (91569)
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி பஞ்சரட்ணேஸ்வரி சிவசுப்பிரமணியம்



செருக்கற்புலம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், மயிலணி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சரட்ணேஸ்வரி சிவசுப்பிரமணியம் நேற்று (18.12.2009) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பட்டாளம் சுப்பர்) - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், வடலிப்புலம் மயிலிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், சங்கரப்பிள்ளை சிவசுப்பிரமணியத்தின் (இளைப்பாறிய புகையிரத பிரதம பாதுகாவலர்) அன்பு மனைவியும், பவானி (லண்டன்), சாந்தகுமார் (லண்டன்), சிவகுமாரன், வித்தியாகுமார் (அரச மரக்கூட்டுத்தாபனம்), பிறேமா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் சிவச்செல்வம் (லண்டன்), கௌரி (லண்டன்), துசியந்தி (ஆசிரியை, யா/திருஞானசம்பந்த வித்தியா சாலை), சந்திரிகா, தவராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், லோஜினி, சிவலோஜன், லக்சனா, நர்த்தனா, சௌமியா, கேசினி, ருஷாந்கினி, லாவண்யா, லக்சாயினி, விக்னேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*''சகுந்தலம்'',*
*மயிலணி, சுன்னாகம்.* (91568)
தொ.பே. எண் - 0212240605, 0213218007
தகவல்: ச. சிவசுப்பிரமணியம் (கணவன்).

### மூத்தார் கந்தசாமி



கொத்தியாவத்தை, மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் வரியப்புலம், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மூத்தார் கந்தசாமி நேற்று (18.12.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் சவுந்தலாதேவியின் (சந்திரா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மூத்தார் - நாச்சியார் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிநாயகம் மற்றும் பேபிசறோயினி தம்பதியினரின் மருமகனும் நிறோஷன் (மாணவன், யா/மகாஜனாக் கல்லூரி), விபூஷன் (மாணவன், யா/மல்லாகம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2009) ஞாயிற்றுக்கிழமை ந.ப. 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வரியப்புலம்,*
*சுன்னாகம்.* (91574)
தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி, தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகரும், ஆரம்பகாலத் தலைவருமான தந்தை செல்வாவின் சமாதிக்கு தமிழரசுக்கட்சி உறுப்பினர்களான பி.கனகசபாபதி, சி.வி.கே.சிவஞானம், த.துரைமணி, எஸ்.குலநாயகம் ஆகியோர் மலர்மாலை அணிவிப்பதனையும், நினைவுத் தூபியில் மலரஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- உமா, அனுஷ்மன், தமிழினியன்)*

# கடும் மழையையடுத்து யாழ்ப்பாணத்தில் நுளம்பு, இலையான் பெருக்கம் அதிகரிப்பு

## மருந்துகளை விசிறும் பணியில் சுகாதாரப் பகுதியினர்

யாழ்ப்பாணம், டிசெ,19

கடந்த சில தினங்களாகப் பெய்த மழையை அடுத்து யாழ்ப்பணதில் நுளம்பு இலையான்களின் பெருக்கம் அதிகரித்துள்ளமையால் தொற்றுநோய் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

தாழ்ந்த நிலங்களில் வெள்ளம் தேங்கி நிற்கும் இடங்களிலும் கழிவுப்பொருள்கள் கொட்டப்படும் இடங்களிலும் நுளம்புக் குளம்பிகளின் பெருக்கம் அதிகரிப்பதற்கு வாய்ப்பு உள்ளதாக சுகாதாரப் பகுதியினர் சுட்டிக்காட்டியுள்ளனர். இவற்றை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கு மருந்துகளை விசிறும் பணியில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். மாநகர சபைப் பகுதியில் உள்ள வடிகால்கள் மற்றும் பொது இடங்களிலும் மருந்துகள் விசிறும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. நுளம்புப் பெருக்கத்தினால் தொற்று நோய்களும் ஏற்படலாம் என்பதால் பொது மக்கள் தமது வீட்டுச் சுற்றாடல்களைத் சுத்தமாக வைத்திருக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (50-224)

## யாழ். செயலகத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.19

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு யாழ். செயலகத்திற்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்காக முன்னேற்பாட்டுப் பணிகள் தற்போது தேர்தல் திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்தில் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இதனையொட்டி யாழ்.செயலகத்துக்குப் பூரண பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (50-224)

# கழிவுகள் பெருமளவில் கொட்டப்படுவதால் நவாலி தெற்கில் தொற்றுநோய் அபாயம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

நவாலி தெற்கு சொத்துக்கட்டி கேணியடிப் பகுதியில் மலக்கழிவு, திண்மக்கழிவு, கொள்கலக் கழிவு, மற்றும் சிகையலங்காரக் கழிவுகள் கொட்டப்படுவதனால் அப்பகுதியில் தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தக் கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டுள்ள பகுதியிலிருந்து பெரும் தொகையான நுளம்புகள் உற்பத்தியாவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிக்கும் மானிப்பாய் பிரதேச சபைக்கும் தெரியப்படுத்தி நீண்ட காலமாகியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

நவாலி தெற்கு, கொத்துக்கட்டி கேணியடிப் பகுதியில் திண்மக்கழிவுகள், மலக்கழிவுகள், கொள்கலக்கழிவுகள், சிகையலங்காரக் கழிவுகள் என்பன குவியல் குவியலாகக் கொட்டப்பட்டுள்ளன.

சுமார் 15 தொடக்கம் 20 வரையிலான டிராக்டர்களில் ஏற்றக்கூடிய அள்வில் கொட்டப்பட்டுள்ள இந்தக் கழிவுகளிலிருந்து பெரும் தொகையான நுளம்புகள் உற்பத்தியாகிய வ்ண்ணமுள்ளன. இதனால் நவாலிப் பகுதியில் நுளம்புகள், இலையான்களின் பெருக்கமும் அதிகமாகவே காணப்படுகின்றது என்றும்-

இவற்றின் அதிகரிப்பினால் அப்பகுதியில் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே இதில் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் அப்பகுதியில் உள்ள மக்களுக்குத் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (50-302)

# வருடாந்த ஒன்று கூடல் இன்று

குருநகர்,டிசெ.19

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் டி.ஜெயக்குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.மலேரியாத்தடை இயக்கப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் க.த.சிவபாதம், தாய்சேய் நலன்பிரிவுப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி தி.சிவசங்கர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ம.ஜெகூ, சங்கானைப் பிரதேச செயலர் திருமதி தேவானந்தி பாபு, மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் திருமதி பி.சிவலிங்கம், சுழிபுரம் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.புத்திசிகாமணி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (50-51)



யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் போக்கு வரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் சுதந்திரமாக நடமாடும் கால்நடைகள். *(படம்:-லக்ஷ்மன்)*




## 'ஸ்மாட் கிட்ஸ்' முன்பள்ளியின் கலை நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.19

திருநெல்வேலி 'ஸ்மாட் கிட்ஸ்' முன்பள்ளியின் ஆண்டிறுதிக் கலை நிகழ்வும் ஆசிரிய தினவிழாவும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளியில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி சரஸ்வதி சிவலிங்கராஜா ஆகியோர் கலந்துகொள்வர். (50)

# கொழும்பு வணிகர் கழக ஒன்றியத்தால் மாநகரசபைக்கு உழவு இயந்திரம்

நல்லூர்,டிசெ.19

கொழும்பு சர்வதேச வணிகர் கழகங்களின் ஒன்றியம் யாழ்.மாநகர சபைக்கென இரண்டு சக்கர உழவு இயந்திரம் ஒன்றைக் கொழும்பில் வைத்துக் கையளித்துள்ளதாக முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

ஒன்றியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.திஸ்ஸவீரவினால் முதல்வரிடம் கையளிக்கப்பட்ட இந்த உழவு இயந்திரம் சில தினங்களில் இங்கு வந்துசேரும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் உழவு யந்திரம் பொருத்தும் வேலைத்தளம் ஒன்றையும் காட்சிப்படுத்தும் அறை ஒன்றையும் அமைக்க யாழ்.மாநகரசபை தகுந்த இடம் ஒன்றைத் தெரிவுசெய்து வழங்கவுள்ளதாகவும் முதல்வர் தெரிவித்தார்.

உழவு இயந்திரம் பொருத்தும் தொழிற்பயிற்சிகளைப் பெறக்கூடியதாகவும் உழவுச் சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவித்தலுக்கமைய விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (50-111)

## விநாயகர் சஷ்டி விரதம்

வண்ணை,டிசெ.19

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விநாயகர் சஷ்டி விரதம் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு பூசை ஆரம்பமாகி 9 மணிக்குச் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீமத் நாராயணர் ஸ்ரீதேவி, பூமாதேவி, விநாயகர் சகிதம் வீதியுலா எழுந்தருள்வார். (204-16)

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.போதனா வைத்தியசாலையின் நடமாடும் இரத்த வங்கியினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசா[illegible] சிகிச்சை மண்டபத்தில் நடைபெறவு[illegible]ளது. (50-224)

## கடையில் பணத்தை திருட முயற்சித்த சிறுவன் வசமாக மாட்டினார்

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ்.நகரில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பணத்தைத் திருடிக் கொண்டு ஓட முற்பட்ட சிறுவன் ஒருவன் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

இந்தச் சம்பவம் நோற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

யாழ்.நகரில் சத்திரச்சந்திப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் வர்த்தக நிலைய உரிமையாளர் பொருள்களை நிறுத்துக் கொண்டிருந்த சமயம்பார்த்து வர்த்தக நிலையத்துக்குள் புகுந்த சிறுவன் அங்கிருந்த மேசையின் லாச்சியைத் திறந்து பணத்தை எடுத்துக்கொண்டு ஓட முயற்சித்த சமயம் கடை ஊழியர்களினால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டான்.

பின்னர் இச் சிறுவன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான். (50-224)

# நல்லூர் ஆலயச் சூழலில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.19

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயச் சுற்றாடல் பகுதியில் சைக்கிள் திருடர்களின் கைவரிசை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளிக்கிழமைகளிலேயே இந்த சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் கூடுதலாக இடம் பெறுவதாகக் கூறப்படுகின்றது.

மாலைநேரப் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்ளவரும் பக்தர்கள் தமது சைக்கிளை ஆலயத்துக்கு முன்பாக நிறுத்திப் பூட்டி விட்டுச் செல்லும் வேளை பார்த்துத் திருடர்கள் அவற்றைச் சாதுரியமாக அபகரித்துச் செல்வதாகக் கூறப்படுகின்றது.

எனவே பக்தர்கள் தமது சைக்கிள்களை நிறுத்தும் போது அவதானத்துடன் இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-224)

## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் தலைவர் ச. செல்வரத்தினம் தலைமையில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்குச் சங்கத் தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்திற்கு யாழ். மாவட்ட கூட்டுறவு அபி[illegible]த்தி உதவி ஆணையாளர் பொ.சிவ[illegible]கம் பிரதம விருந்தினராகக் கலந்து[illegible]வார். ([illegible]-130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MUSIC WORLD
THE LEADING IT SUPPER MARKET IN JAFFNA

வழங்கும்

நத்தார், புது வருட கால
சிறப்புத் தள்ளுபடிகள்

டிசெம்பர் 18 முதல் ஜனவரி 05 வரை மட்டும்

**LCD MONITORS**

| | | |
|---|---|---|
| Topview 15.6" | ~~11,600/=~~ | 10,500/= |
| Viewsonic 16" | ~~14,500/=~~ | 13,500/= |
| LG 19" | ~~15,900/=~~ | 15,250/= |
| DELL 19" | ~~16,900/=~~ | 15,750/= |
| Samsung 19" (943) | ~~17,500/=~~ | 16,750/= |
| Viewsonic 19" | ~~18,900/=~~ | 17,750/= |

**PROCESSORS**

| | | |
|---|---|---|
| Intel celeron 1.8 Ghz | ~~5,400/=~~ | 4,900/= |
| Intel 2.50 Ghz Dual Core (Intel Pentium) | ~~8,750/=~~ | 8250/= |
| Intel 2.60 Ghz Dual Core (Intel Pentium) | ~~9,300/=~~ | 8500/= |
| Intel 2.93 Ghz Core 2 Duo (Intel Pentium) | ~~15,390/=~~ | 14600/= |

**MOTHER BOARDS**

| | | |
|---|---|---|
| Asrock G 31 | ~~5,750/=~~ | 5,400/= |
| Foxconn | ~~5,900/=~~ | 5,500/= |
| Biostar | ~~6,200/=~~ | 5,750/= |
| Gigabyte G 31 | ~~6,400/=~~ | 5,750/= |
| Asus G 31 | ~~6,500/=~~ | 6,000/= |
| Intel DG 31PR | ~~7,500/=~~ | 7,000/= |

**HARD DISK (SATA)**

| | | |
|---|---|---|
| 80 GB SATA | ~~4,700/=~~ | 4,400/= |
| 160 GB SATA | ~~5,300/=~~ | 4,900/= |
| 250 GB SATA | ~~5,900/=~~ | 5,250/= |
| 320 GB SATA | ~~6,250/=~~ | 5,650/= |
| 500 GB SATA | ~~7,250/=~~ | 6,900/= |

**WRITERS (SATA)**

| | | |
|---|---|---|
| DVD Combo | ~~3,000/=~~ | 2,750/= |
| LG 22 X | ~~3,500/=~~ | 3,100/= |
| Samsung 22 X | ~~3,600/=~~ | 3,100/= |
| Liteon 24 X | ~~3,750/=~~ | 3,400/= |
| Hp 24 X | ~~3,900/=~~ | 3,700/= |
| Asus 24 X | ~~4,250/=~~ | 3,900/= |

**PRINTERS**

| | | |
|---|---|---|
| Hp D 1660 | ~~5,400/=~~ | 4,750/= |
| Epson T10 | ~~5,250/=~~ | 4,500/= |
| Samsung Laser printer | ~~14,500/=~~ | 13,500/= |

**SCANNERS**

| | | |
|---|---|---|
| Mustek USB | ~~5,750/=~~ | 5,250/= |
| Cannon LIDE 100 | ~~6,250/=~~ | 5,950/= |
| Hp G 2410 | ~~7,900/=~~ | 7,500/= |

**ADSL ROUTERS**

| | | |
|---|---|---|
| TP Link ADSL 2 Port | ~~4,500/=~~ | 3,900/= |
| TP Link ADSL 4 Port | ~~6,250/=~~ | 5,900/= |
| TP Link 4 Port Wireless | ~~8,250/=~~ | 7,900/= |

**SUB WOOFERS**

| | | |
|---|---|---|
| Microlab 2.1 | ~~3,250/=~~ | 2,750/= |
| Creative 2.1 | ~~3,100/=~~ | 2,700/= |
| Microlab 5.1 | ~~6,000/=~~ | 5,700/= |

**HSDP MODEMS**
Broadband 7.2 G USB
SIM Model ~~9,250/=~~ 7,750/=

**ATX CASING** (With Power supply) ~~3,250/=~~ 2,600/=

**COMPUTER CHAIR** ~~3,950/=~~ 3,250/=

**COMPUTER TABLE** ~~3,250/=~~ 2,750/=

* இச் சலுகை உடனுப் பணக் கொடுப்பனவுகளுக்கு மட்டுமே *

SONY DIGITAL CAMERA
CyberShot 10.1 Mega Pix
14,900/= Only

SAMSUNG DIGITAL CAMERA
12.2 Mega Pix
16,900/= Only

Credit cards & Debit Card are Acceptable

VISA MasterCard

சகல வகையான கடனட்டைகள், மற்றும் வரவு அட்டைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

# MUSIC WORLD
THE LEADING IT SUPPER MARKET IN JAFFNA
141B, Palaly Road, Thirunelvely, Jaffna - Phone : 021 222 6554
musicworld@dialognet.lk / musicworld@sltnet.lk

ASTA Advts ***0718561250***

# CARGO SERVICE TO ALL COUNTRIES
உலகலாவிய பொதிகள் சேவை

எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய
நத்தார் நல்வாழ்த்துக்கள்



ஆகாய மார்க்கமாகவோ அல்லது கடல் மார்க்கமாகவோ உணவுப் பொருட்கள், அன்பளிப்பு பொருட்கள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றை வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு விரைவாகவும் பாதுகாப்பாகவும் நீங்கள் நம்பமுடியாத குறைந்த கட்டணத்தில் நான்கு வேலை நாட்களில் உங்களது உறவினர்களின் முகவரிக்கு கையளிக்கப்படும்.

*** எமது விசேட முகவர் சேவைகள் ***

லண்டன்(wembley),சுவிஸ்(zurich),அவுஸ்திரேலியா(sydney),பிரான்ஸ்(paris), கனடா (toronto) போன்ற நாடுகளுக்கு உங்களின் தேவைக்கேற்ப வீட்டுமுகவரிக்கோ அல்லது எமது முகவர் நிலயங்களிலோ பெற்றுக்கொள்வதற்கு அனுப்பி வைக்கப்படும்.

லண்டன்,சுவிஸ்,அவுஸ்திரேலியா,பிரான்ஸ்,ஆகிய நாடுகளுக்கு 03 கிலோவிற்கு குறையாத பொதிகளுக்கு 1 kg க்கு 400/= வீதமும், கனடாவிற்கு 03 கிலோவிற்கு குறையாத பொதிகளுக்கு 1 kg க்கு 500/= வீதமும் அறவிடப்படும்.

LONDON Home Delivery 1st kg Rs. 1500.00, Additional 1 kg Rs.750.00
10 கிலோவுக்கு கூடுதலான பொதிகளுக்கு Rs. 700.00 வீதமும் அறவிடப்படும்

பொதிகள் அனுப்பும் சகல வாடிக்கையாளர்களுக்கும் ஒரு மெய்கண்டான் கலண்டர் இலவசம்
( இச்சலுகை டிசம்பர் 31ம் திகதி வரை மட்டுமே)


## GTV ENTERPRISES ( PVT) LTD,
VIJEYA ENTERPRISES MAHARAJA FOOD PRODUCTS
Imports Exporters Food Producers Forwarding & Clearing Agents
Cargo Services to all Countries by Air & Sea, Courier Services
Srilankan Airlines Cargo Agents

Head Office
No:18/3,Dr.E.A.Cooray Mawatha,Wellawatta,Colombo-6.
Tel : 0112 360 926,0112 559 849.
Fax ;0112 361 139
e-mail : info@maharajafoodproduct.com

Branchs

| | |
|---|---|
| No:225 ,Kasthuriyar Road, Jaffna | Tel: 021 222 4338 |
| No:170,Central Road,Colombo-12. | Tel: 0112 448 928 |
| No:288,George R.De.Silva Mw,Kotahena,Colombo-13. | Tel: 0113 150 859 |
| No:G-2,146,Negombo Road,Wattala.(Pearl Park) | Tel: 0716 903 543 |
| No:37/4,Trinco Road Batticoloa | Tel: 065 222 7982 |
| No:41,Central Road Uvarmalai (Thenthamil veethy Juntion) | Tel: 026 222 1510 |
| No:22 BusStand Vavuniya ( Sajees Com) | Tel: 024 222 2166 |
| No:24D Kanthasamy Kovil Road Vavuniya | |

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15.12.1976

மறைவு
30.12.2008

அமரர்
## யோக்கியசிங்கம் சுதர்சன்

அன்புத் தந்தையே!
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே!
அன்புத் தெய்வமே அப்பா!!
எம்மைவிட்டகன்ற ஓராண்டு நிறைவுதனில்
எல்லையற்ற துன்பச் சுமையோடு நகர்ந்த
துயர்நிறை நாள்களை எண்ணிப் பார்க்கின்றோம்
கண்முன்னே எப்போதும் எம்முன்னே நிற்கின்றீர்கள்
கனவிலும் மறக்காது உங்களன்புத் திருமுகம்
தெய்வமாக நின்று எம்மை நீங்கள்தான்
வழிநடத்த வேண்டும் அப்பா!
உங்கள் நினைவே என்றும் எம் வாழ்வாகட்டும்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.

4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

(சி-563343)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




01.06.1986
★ மட்டக்களப்பு- கொழும்பு உதயதேவி ரயிலில் வியாங்கொடையில் வைத்துக் குண்டு வெடித்ததில் 18 பயணிகள் பலி.
★ நிலக்கண்ணிவெடித் தாக்குதலிலிருந்து இராணுவத்தினர் உயிர்தப்ப நடந்துசென்று பாதுகாப்புக் கடமைகளை மேற்கொள்வதுதான் ஒரே வழி என தேசிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு.
★ யாழ்.குடா நாட்டுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு ஆனையிறவைத் தாண்டித் தென் பகுதிக்குச் செல்வ தற்கு அரசு தடை விதித்தது.

02.06.1986
★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அரசின் சிரேஷ்ட தலைவர்கள் சிலர் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோவுடன் அவசரமான இரகசியப் பேச்சு.
★ வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் ஐம்பது பேர் சாகும்வரை உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.
★ கொழும்பு மாநகரில் வாழும் தமிழர்கள் பற்றிய விவரங்கள் கிராம சேவகர்களின் உதவியுடன் திரட்டப்பட்டு வருகின்றன.

03.06.1986
★ இனப்பிரச்சினை தொடர்பாக மீண்டும் சர்வகட்சி மாநாடு நடத்த அரசு ஆலோசனை.
★ கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து லண்டனுக்குப் புறப்பட்ட 'எயர் லங்கா' பயணிகள் விமானம் குண்டுப்புரளி காரணமாக பம்பாய் விமான நிலையத்தில் அவசரமாகத் தரை இறக்கம்.

04.06.1986
★ திருமலை செல்வநாயகபுரத்தில் பத்துத் தமிழர்களின் சடலங்கள் சூட்டுக்காயங்களுடன் மலசல குழிகளுக்குள் கண்டெடுப்பு.
★ யாழ்ப்பாணத்துக்கு இராணுவத்தை அனுப்பி அங்குள்ள மக்களை எல்லாம் கொன்று பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற சிலரது எண்ணம் தவறானது என ஜனாதிபதி ஜே.ஆர்.தெரிவிப்பு.
★ டிக்ஸிற் கொண்டு சென்ற ஜனாதிபதி ஜே.ஆரின் கடிதத்தை இந்திய உயர்குழு பரிசீலனை.

05.06.1986
★ போராளிகளுக்கும் அரச படையினருக்குமிடையே கிளிநொச்சி நகரில் உக்கிர சண்டை. படை முகாம் போராளிகளால் முற்றுகை. நகரில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பு.
★ சிதம்பரம் குழுமூலம் அனுப்பப்பட்ட பிந்திய யோசனைகள் பற்றிப் பேச்சுக்கள் நடத்த ஒன்று பட்ட தமிழ்க்குழுவொன்றை உருவாக்குமாறு ஜனாதிபதி ஜே.ஆர்., ராஜீவ் காந்திக்குத் தெரிவிப்பு.
★ அரசாங்கம் கூட்ட உத்தேசித்துள்ள சர்வகட்சி மாநாட்டுக்கு த.வி.கூட்டணி அழைக்கப்படமாட்டாதென அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி.அல்விஸ் தெரிவிப்பு.

06.06.1986
★ கிளிநொச்சி குண்டு வீச்சில் யாழ்ப்பாணத்துக்கு லொறியில் எடுத்துவரப்பட்ட உணவு முத் திரைகள் நாசம். இரண்டு சாரதிகள் பலி. அரச அதிபரும் அதிகாரிகளும் மயிரிழையில் உயிர் தப்பினர்.
★ கொழும்புக்குச் சிமெந்து ஏற்றிக்கொண்டு காங்கேசன் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட தாய்வான் நாட்டுக் கப்பலொன்று இடைநடுவில் காணாமல் போய்விட்டது.

07.06.1986
★ படையினருக்கும் போராளிகளுக்கும் இடையே தொடர்ந்து கிளிநொச்சியில் இடம்பெறும் மோதல் காரணமாகப் பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் அகதிகள் ஆயினர்.
★ பலாலி இராணுவ முகாமில் அடகு நகைகளை மீட்டுக்கொண்டு திரும்பியோர் மீது ஹெலிகொப்டர் சுட்டதில் இருவர் மரணம்.

08.06.1986
★ வெலிக்கடைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்கள் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் குழுவின் வேண்டுகோளைப் புறக்கணித்து உண்ணாவிரதத்தைக் கைவிட மறுப்பு.
★ பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு வடபகுதியிலிருந்து கருவாடு கொள்வனவு செய்வதைச் சந்தைப்படுத்தல் திணைக்களம் நிறுத்தியுள்ளது.
★ யாழ்.குடாநாட்டில் பஸ் டிப்போக்களில் டீசல் கையிருப்பில் இல்லாத காரணத்தால் இ.போ.ச.பஸ் போக்குவரத்துக்கள் ஸ்தம்பித நிலை.

09.06.1986
★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழகம் சென்று போராளிகளைச் சந்தித்து யுத்த நிறுத்தத்துக்கு இணங்கச் செய்யுமாறு ஜனாதிபதி ஜே.ஆர்., இடதுசாரிக் கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.
★ கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் ஒரு வீட்டின் மீது ஷெல் விழுந்து ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகள் ஐவர் பலி.
★ சிங்கப்பூர் செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் சென்ற வட பகுதித் தமிழ் இளைஞர்கள் 15பேர் விமான நிலைய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கைது.

10.06.1986
★ இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ராஜீவ்காந்தியின் முக்கிய கடிதமொன்றை எடுத்து வந்த இந்தியத் தூதுவர் டிக்ஸிற் அதனை ஜனாதிபதி ஜே.ஆரிடம் கையளிப்பு.
★ ஜனாதிபதி ஜே.ஆரின் வேண்டுகோளையடுத்து தமிழ்ப் போராளிகள் குழுக்களை யுத்த நிறுத்தத்துக்கு இணங்கச் செய்வதற்காக இடது சாரித் தலைவர்கள் தமிழகம் பயணம்.
★ மலையகத்தில் பல பகுதிகளில் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு பலரைக் கைது செய்தனர்.

11.06.1986
★ மண்டைதீவுக் கடலில் வைத்து 34 தமிழர்கள் கறுப்புச் சீருடையில் வந்தோரால் குத்தியும், வெட்டியும், சுட்டும் கோரக்கொலை.
★ இலங்கையைப் பிரிப்பதற்குப் பதிலாக தமிழ் மக்களுக்கு எந்த அளவு சுயாட்சி வழங்கத் தயாராக இருக்கிறீர்கள்? என ஜனாதிபதி ஜே.ஆரிடம் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கேள்வி.
★ வல்வெட்டித்துறையில் கடல், தரை மற்றும் விமானத் தாக்குதல்களால் அறுவர் பலி; பலர்காயம்; மற்றும் சொத்துக்கள் சேதம்.

12.06.1986
★ திருகோணமலையில் இரண்டு இ.போ.ச.பஸ்களில் குண்டுகள் வெடித்ததில் பிரயாணிகள் சுமார் 50இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு.
★ இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை இல்லையேல் மத்தியஸ்த முயற்சியிலிருந்து இந்தியா விலகிவிடுமென ஜனாதிபதி ஜே.ஆரிடம் இந்தியத் தூதுவர் டிக்ஸிற் தெரிவிப்பு.
★ யாழ்.குடாநாட்டின் ஏரிகளில் மீன் பிடிப்பது தடை செய்யப்படுவதாக இராணுவ இணைப்பதிகாரி அறிவிப்பு.

13.06.1986
★ இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்களைச் சந்தித்து பேச்சுக்கள் மூலம் அமைதித் தீர்வு காண முன்வருமாறு வலியுறுத்த மக்கள் கட்சித் தலைவர் விஜயகுமாரணதுங்க தலைமையிலான குழு இந்தியாவுக்குச் செல்லவுள்ளது.
★ அரசு கூட்டவுள்ள சர்வகட்சி மகாநாட்டில் பங்குபற்றுமாறு த.வி.கூட்டணியையும் அழைக்க அரசு தீர்மானம்.

14.06.1986
★ மூதூரில் சீருடையினரால் காட்டுக்குள் அழைத்துச் சென்று 19 தமிழ் அகதிகள் சுட்டுக்கொலை. அவர்களுடன் கூடச் சென்ற இரண்டு கிராம சேவகர்களும் கொல்லப்பட்டனர்.
★ ஜனாதிபதி ஜே.ஆர்.கூட்டும் இரண்டாவது சர்வகட்சி மாநாட்டைச் சுதந்திரக்கட்சி பகிஷ்கரிக்க முடிவு.
★ 'தமிழ் ஈழத்தைக் தவிர வேறு எந்தத் தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்பார்கள் என்பது சந்தேகமே' என தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தெரிவிப்பு.

15.06.1986
★ இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசு சிதம்பரம் குழுவிடம் கையளித்த யோசனைகள் தொடர்பான அரசின் விளக்கங்களை புதுடில்லிக்கு எடுத்துச் சென்று இலங்கைத் தூதுவர் பேர்னாட்திலகரத்ன இந்திய அரசிடம் கையளிப்பார்.
★ இலங்கை அரசுக்காக உளவு பார்த்தார் என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கைத் தமிழ்ப் [illegible] ஒருவரும் சென்னைப் பொலீஸாரால் கைது.

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.19

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கூட்டம் கடந்த 13 ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

தலைவராக அ.கயிலாயபிள்ளை, செயலாளராக யோ.ஜெயக்குமார், பொருளாளராக சி.கமலரூபன் மற்றும் 12பேர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-207)

## புத்தகசாலை




### மாங்கனி

செல்லையா குமாரசாமி எழுதிய ''மாங்கனி'' சிறுவர் பாடல்கள் நூல் வெளிவந்துள்ளது.

''பள்ளிக்கு நேரம் ஆகுது'' என்று ஆரம்பித்து முப்பது சிறுவர் பாடல்களை இதில் எழுதியுள்ளார்.

சிறுவர்களுக்குப் புரிந்த பிரியமான மொழிநடையினைக் கையாண்டு பாடல்களை எழுதியுள்ள விதம் பாராட்டத்தக்கது. ''மாங்கனி'' சிறுவர்கள் படித்து சுவைபெறக்கூடிய ''அருங்கனி'' என்று சொல்லிக்கொள்ளலாம்.

## மக்கள் முகம்



சுன்னாகம் கந்தரோடையைச் சொந்த இடமாகக் கொண்ட இ.ஆனந்த நடராசா யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுமாணி பட்டப் படிப்பில் (தமிழ்) அதிவிசேட சித்தியினைப் பெற்றுள்ளார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றும் இவர் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு தமிழ்ப்பாடத்தினை கற்பிக்கும் ஆசிரிய சேவையினையும் செய்துவருகிறார். (9)

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★



புத்தூர் கிழக்கு முருகன் திடலைச் சொந்த இடமாகக் கொண்ட சைவப் புலவர் கந்த சத்தியதாசன் யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகலை மாணி பட்டப்படிப்பில் (சைவசித்தாந்தம்) அதிவிசேட சித்தி பெற்றுள்ளார்.

வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகராகக் கடமை புரியும் இவர் சிறந்த சமயச் சொற்பொழிவாளர். அத்துடன் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பாடநூலாக்கக் குழுவில் (சமயம்) அங்கம் வகித்துள்ளார். (9)

## மூத்த இசைக்கலைஞர் சங்கீத பூஷணம் திலகநாயகம் போல்



ஈழத்து கர்நாடக இசை உலகில் தனக்கென ஒரு இடத்தை அமைத்து சாதனை புரிந்தவர் அண்மையில் காலமான எல். திலகநாயகம் போல். 1965ஆம் ஆண்டிலிருந்து அவருடன் மிக நெருங்கிப் பழகியவன் எனும் முறையில் இன்றைய இசை மாணவர்களுக்கும், இசை ரசிகர்களுக்கும் பல விவரங்களைத் தருவது பயனுள்ளதே.

இந்தியாவின் புகழ் பெற்ற அண்ணாமலை பல்கலைக்கழக இசைத் துறையின் சங்கீத பூஷணப் பட்டம் முதல் தரத்தில் பெற்றவர் அவர். 1965இல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அரங்கில் இவரது இசை அரங்கேற்றம் நடைபெற்றது. இராமநாதன் இசைக் கல்லூரி மாணவனாக இருந்த நான் அரங்கேற்றத்திற்குச் சென்றிருந்தேன். அரங்கேற்றம் போலல்லாது அனுபவம் பெற்ற வித்வான்கள் பாடுவது போல் கச்சேரி அமைந்தது. நல்ல குரல் வளம். ஒலி பெருக்கிக்கு ஏற்ற மெல்லின வல்லின பிரயோகங்கள் பேசக்கூடிய சாரீரம். 23 வயது இளைஞனுக்குரிய கம்பீரமான, அழகான தோற்றம். இதனால் தனக்கென ஒரு ரசிகர் கூட்டத்தை கவர்ந்திருந்தார். பரபரப்பாக யாழ்ப்பாண நகரிலும், கிராமங்களிலும் பேசப்பட்டு இசைவிழாக்கள், கிராம ஆலயங்களில் நடைபெறும் கச்சேரிகள் என 1965 ஆம் ஆண்டிலேயே பிரபலமடைய ஆரம்பித்தவர். இவரது இசைஞானத்திற்கு உரமூட்டியவர்கள் பிரபல இசைமேதைகளான ஐ.எம்.தண்ட பாணி தேசிகர், ரி.கே. ரங்காச்சாரி, ரி.என். சிவசுப்பிரமண்யபிள்ளை, வேணுகோபால் ஆகியோர் ஆவர். பின்பு தனது சொந்த முயற்சியில் தனது ஞானத்தை வளர்த்துக் கொண்டவர்.

### மக்கள் மாண்பு

ஆரம்பகாலங்களில் இசைமேதை பாலமுரளி கிருஷ்ணாவின் பாணியிலும் கச்சேரியை அமைத்தவர். கிரகபேதம் செய்வது, நடைப்பல்லவிகள் பாடுவது, லயநுட்பங்களை வெளிப்படுத்துவது, சாதாரண மக் களுக்கு புரியும்படி ஜனரஞ்சகமாகப் பாடுவதென துணிச்சலுடன் செயற்பட்டவர். கச்சேரி மேடையில் அழகாக உடையணிந்து புன்சிரிப்புடன் பாடுவார். எனது இசை அரங்கேற்றத் திற்கு உதவி புரியுமாறு அவரது குருநகர் வீட்டிற்கு 65இன் இறுதிப் பகுதியில் சென்றேன். அன்புடன் சம்மதித்து அரகேற்றத்தை நெறிப்படுத்தினார். இதனால் அவரது இசைப் புலமையையும், குணாதிசயங்களையும் தெரிந்து கொண்டேன். 1969இன் கடைசியில் நான் இலங்கை வானொலியில் இசைத்துறைத் தயாரிப்பாளனாக பணிபுரிய ஆரம்பித்த போது 3 மாதத்திற்கு ஒரு தடவை அவரது கச்சேரி ஒலிப்பதிவுகளைக் கேட்கக்கூடிய சந்தர்ப்பத்தால் கொழும்பில் 10 ஆண்டுகள் மீண்டும் நெருக்கமாகப் பழக ஆரம்பித்தோம்.

இலங்கை வானொலியில் மெல்லிசைப் பாடல்கள் பாடுவதற்கும் பிதாவாக 1972 இல் இருந்து பல நல்ல பாடல்களைப் பாடியவர். தானாகவே பாடல்களையும் இயற்றியவர். வானொலி மூலம் கர்நாடக இசை, மெல்லிசை என மேலும் பிரபலம் பெற்றார். இது தவிர நாட்டிய அரங்கேற்றங்கள், இசை நாடகங்களுக்கு இசையமைத்துப் பாடுவது என்பவற்றிலும் முத்திரை பதித்தவர்.

கர்நாடக இசை, மெல்லிசை இரண்டிலும் (அதியுயர் பிரிவு) இலங்கையின் சகல பகுதிகளிலும் முக்கிய இடங்களில் பாடி பின்பு லண்டன், நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் பாடி வெளிநாடுகளின் இசை ரசிகர்களின் அமோக வரவேற்பையும் பெற்றவர்.

தொலைக்காட்சி, வானொலி, மேடை அனுபவங்களுக்கு அடுத்ததாக ஆசிரியட் பணி என்று பார்த்தால் அரச இசை ஆசிரியராக ஆரம்பித்து இசைக்கல்விப் பணிப்பாளராக உயர்ந்தவர். பல ஆண்டுகளாக யாழ். பல்கலைக்கழக இராமநாதன் இசைத்துறையில் [illegible] விரிவுரையாளராகப்பணி புரிந்தவர். யாழ்ப்பாண இசைக்கலைஞர்கள் பலர் வெளிநாடு[illegible]கும், பிற பிரதேசங்களுக்கும் சென்று விட்ட நிலையில், அவர் யாழ்ப்பாண நகரிலேயே வ[illegible]த்ததால் தனிப்பட்ட முறையில் பல இளம் கலைஞர்களுக்கும் கற்பித்து நிறைய மா[illegible]களை மேடைக் கச்சேரிக் கலைஞர்களாக உருவாக்கினார். பட்டியலிடுவது நீண்டுவிடும்.

மதங்களுக்கு அப்பாற்பட்ட இசைக்கலைஞர். கிறிஸ்தவராக இருந்தாலும் நல்லூர் முருகன் ஆலய இசைவிழாவில் தவறாது பங்கேற்றுப் பாடுவதுடன் முருகன் மீது கீர்த்தனைகளையும் புனைந்தவர். மாணவர்களுக்காக ஒலிநாடாவில் ராகங்களைப் பா[illegible] வெளியீடு செய்தவர். தனது சொந்த சாகித்தியங்களைப் புத்தகமாக வெளியிட்டவர். இசைத்துறையின் சகல துறையிலும் அதாவது போட்டிகள், பரீட்சைகள், கருத்தரங்குக்குத் தலை[illegible]கிப்பது, ஆலோசனை கூறுவது என ஆர்வத்துடன் செயல்பட்டவர். பல கௌரவப் பட்[illegible]கள் கிடைத்தாலும் 'சங்கீத பூஷணம்' எனும் பல்கலைக்கழக பட்டத்தையே விரும்பினார்.

ஆழமான இசையறிவு, அனுபவம், பண்பு, ஆங்கில அறிவு ஒருங்கே சேர்ந்த கர்நாடக இசையின் மூத்த கலைஞரின் மறைவு பேரிழப்பாகவும், ஈடுசெய்ய முடியாத ஒன்றாகவும் அமைந்துவிட்டது. அவரது ஆத்மா சாந்தியடைய ஈழத்து இசைக்கலைஞர்கள், ரசிகர்கள், மாணவ சமுதாயம் சார்பாக இறைவனை வேண்டுகின்றேன்.

சங்கீத வித்வான் ஏ.கே. கருணாகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பின் கலைவிழாவுக்கான திறந்த போட்டி

இளைஞர்களுக்கான நாளை அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலை விழாவுக்கான திறந்த போட்டி நடைபெறவுள்ளது. 'சிவ் மகா கங்கா' என்னும் ஆக்கத்திறன் போட்டிகளை மாவட்ட, மாகாண மட்டத்தில் நடத்தி அதில் வெற்றிபெறும் ஆக்கங்கள் தேசிய போட்டியில் பங்குபற்றத் தெரிவு செய்யப்படவுள்ளன.

தேசிய மட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் ஐந்து இடங்களைப் பெறுவோருக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுகதை, பாடல், செய்யுள், உரைநடை, குறுநாடகம், சித்திரம், புகைப்படம், சிற்பங்களும் கடைச்சல்களும், தேசிய கைப்பணிப் பொருள்கள், தொலைக்காட்சி நாடகம், பேச்சு விவாதம், அறிவிப்பு ஆகிய துறைகளில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. போட்டியில் பங்குபற்றுவதற்கான விண்ணப் படிவங்களும் அறிவுறுத்தல்களும் அந்தந்தப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆக்கங்களை, *'செயலாளர், கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு, எட்டாம் மாடி, செற்சிறி பாய, பத்தரமுல்ல'* என்னும் முகவரிக்கு எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ -207)


**Computer Express**
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
No.167, Kasthuriyar Road, Jaffna. Tel: 021 222 8250

1 வாரகால முழுநேரக்கற்கை நெறிகள்...

**Diploma in Film Technology & Video Editing**
Adobe Photoshop, Cool 3D Studio, VCD Cutter
Capturing, Pinnacle Studio, Adobe Premiere
Internet & e mail

**Diploma in Hard ware Engineering & Net working**
System Configuration, Hardware Devices
Assembling, Repairing, Trouble Shooting
Installation of Hardware & Software, Project Works
Internet & e mail

**Diploma in Graphic Designing & Adverdisement Marketing**
Photoshop ,Macromedia Flash
Corel Draw, Cool 3d Studio
Internet & e mail

**DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING & E-COMMERCE**
Course Module: Quick Book + ACCPAC + MOYOB
Fundamentals of IT, Manual Accounting, Financial Accounting, Cost Accounting, Taxation (Including VAT), Stork Control, Bank Reconciliation, Budgeting, Fore Casting, Business Planing
VAT இனையும் உள்ளடக்கியது

வகுப்புகள் ஆரம்பம் :- 21.12.2009 - 9AM
Free Software CDs
100% செய்முறைப்பயிற்சி, அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்


## தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணத்திலும் பின்னர் இரணைமடு, கிளிநொச்சியிலும் வசித்துவந்த மயில்வாகனம் வசந்தராஜா என்பவரை அல்லது அவரது குடும்ப அங்கத்தவர்கள் எவரையாவது கனடாவில் வசிக்கும் கந்தையா ஸ்ரீதரன் என்பவர் தொடர்பு கொள்ள விரும்புகிறார்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:- 0014252562100

(92955)


**SATS-TECH ENGINEERS**
மாதகட்டணம் ரூ. 400/= இருந்து
பக்கேஜ்களுக்கான கட்டணங்கள் செலுத்திக் கொள்ளலாம்
தேவைக்கேற்ப தெரிவு
Rs.8000/= ONWORDS
X'MAS NEW YEAR OFFER
SPORTS NEWS MOVIES MUSIC
No: 300 KKS Road Jaffna.
Phone:- 021 2228812 / 222 4559
0217210228


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 19 ★ 04 ★ 1942

மறைவு: 23 ★ 12 ★ 2006



### அமரர் கதிரவேலு பரமநாதன்

மாகியப்பிட்டி

திதி: திருதியை (19.12.2009)

குடும்பத்தின் குல விளக்காய் என்றும் மறவா
அன்புடன் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
ஒளியூட்டிய அன்புத் தெய்வமே அப்பா!
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உங்கள் குரல் காதில் கேட்கிறதே!
நீங்காத நினைவுடன் ஆத்மா சாந்திபெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

தாவளை, இயற்றாலை,
கொடிகாமம். (91517)

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**
பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்
Manufactured By:
Sithara Products
Puttalam, Road, Chilaw.
(Reg.No: 6382)AR/PR/No.228
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப்பூங்கா
இல.288,ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே: 021 222 2567



**ANGEL INTERNATIONAL SCHOOL-MANIPAY**
ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY — In God we trust — a school with a difference
VACANCIES
1.GRADUATE SCIENCE TEACHERS FOR ADVANCED LEVEL
2.ADMINISTRATIVE OFFICER
3.TRAINED MONTESSORI TEACHERS
4.ENGLISH TRAINED TEACHERS
5.WESTERN MUSIC TEACHER
6.VICE-PRINCIPAL (RETIRED TEACHER CONSIDERED)
DIRECTOR/PRINCIPAL CONTACT NO:-0777238300


# நெஞ்சைவிட்டு நீங்கிடாத நினைவலைகள்

## 16 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



திதி: வளர்பிறை சப்தமி 23.11.2009

அன்னை மடியில்: 02.04.1924

அம்பாள் அடியில்: 20.11.1993

### அமரர் செல்லையா சேனாதிராசா

ஆண்டு பதினாறு ஆகிவிட்டாலும்
அன்புருவம் நினைவில் பதிந்தேயுள்ளது
மீண்டும் ஒருமுறை திருமுகம் காண
உள்ளம் கிடந்து பரிதவிக்கின்றது
மாண்டு நீர் போனாலும் மனத்திலே
பசுமையாய்க் குடியிருக்கின்றீர் ஐயா!

எம்மை வழிநடத்திய கலங்கரை விளக்கே!
என்றும் நாம் மறக்கவே மாட்டோம்
உம்மை நினைந்தே நாமிங்கு வாழ்கின்றோம்
உத்தமரே பெற்றிடுக சாந்தி!

அம்மன்கோயில் வீதி,
கோண்டாவில்.

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



திதி: வளர்பிறை திருதியை 19.12.2009

அன்னை மடியில்: 26.10.1950

அம்பாள் அடியில்: 30.12.2008

### திருமதி கதிர்காமத்தம்பி இந்திராணி

ஆண்டு ஒன்றும் ஆனதோ?
அன்புத் தெய்வமே உமைப்பிரிந்து
அன்புமுகமும் இனிய பேச்சும்
இப்பொழுதும் நினைவில் நிழலாடுதே!
இன்பவாழ்வு நாம் வாழ எமக்கு
இனியவை பல செய்த உம்மை
எப்படித்தான் மறப்போம்? குலவிளக்கே!
இன்றும் என்றும் நினைப்போம்!
செப்பனிவித்தை வாழ்க்கையிலே நீர்
சேவைக்கென்றே வாழ்ந்திருந்தீர்
இப்படி இடைநடுவில் எம்மை
தவிக்கவிட்டுச் சென்றுவிட்டீர்!
கற்புலத்து மனோன்மணியின் கழல்களிலே
பெற்றிடுவீர் சாந்தி ஓம் சாந்தி!

என்றும் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமெரிக்காவில் வெளிவரும் சஞ்சிகை ஒன்றுக்கு எரிக்கா கினெட்ஸ் என்ற செய்தியாளர் எழுதியுள்ள செய்திக் கட்டுரையின் தமிழ் வடிவம் இது. 'முட்கம்பி வேலி கடந்து வந்துவிட்டார்கள்; ஆனால், இனி.....?' - என்ற தலைப்பில் 'புதினப் பலகை' இணையத் தளத்தில் இத்தமிழ் வடிவத்தைத் தொடர்ந்து வரைந்து வருகின்றார் ரி.ரேணுபிரேம்.**

# வாழ்வுக்காக ஏங்கியிருப்போர்.....!

முட்கம்பி வேலி கடந்து வந்து விட்டார்கள்: ஆனால், இனி...?

கிழக்கு இலங்கையைச் சேர்ந்தவர் வைரமுத்து பவானி. தனது உறவினர் ஒருவரின் திருமணச் சடங்கிற்காக மூன்று வருடங்களின் முன்னர் வடக்கிற்கு அவர் போயிருந்தார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் வரையில் அவரால் தனது சொந்த இடத்திற்குத் திரும்பி வர முடியவில்லை; வடக்கில் நடைபெற்ற போரில் சிக்கிக்கொண்டார்.

குண்டுத் தாக்குதலால் தன்னுடைய குடும்பத்தில் ஆறு உறுப்பினர்களையும், தனது கால்கள் இரண்டையும் அவர் பறிகொடுத்துவிட்டார்; அந்த நிலையிலும் பல மாதங்களை, மக்கள் நிரம்பி வழிந்த தடுப்பு முகாம்களில் அவர் கழிக்க வேண்டி இருந்தது.

இப்போதும் கூட - அரச அதிகாரிகளின் கடும் கண்காணிப்புக்கு மத்தியிலேயே அவர் வாழ்கிறார்.

தடுப்பு முகாமிலிருந்து அவர் கிழக்குக்குத் திரும்பிய நாள் முதல் ஒவ்வொரு நாளும் அதிகாரிகள் தனது வீட்டிற்கு வந்து பார்த்துச் செல்கிறார்கள் என பவானி கூறுகிறார்.

வன்னியில் நான் எங்கு போனேன், அங்கு என்ன செய்தேன் என்பது பற்றி அவர்கள் என்னிடம் கேட்கிறார்கள் என்றார் பவானி.



அவருக்கு 25 வயதாகிறது; தனது சகோதரியின் வீட்டுத் தரையில் அமர்ந்தபடி நாள்களைக் கடத்திக் கொண்டிருக்கிறார்; சோர்வையும் சலிப்பையும் விரட்டுவதற்குப் போராடிக் கொண்டிருக்கிறார்.

போருக்குப் பின்னரான சிறிலங்காவில் அரசின் கடும் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தமது வாழ்க்கையைக் கட்டி எழுப்ப அல்லல்படும் இலட்சக் கணக்கான மக்களில் ஒருவர்தான் பவானி.

நாட்டின் வடக்கில் நடைபெற்ற இறுதிப் போரில், படையினர் முன்னேறிய போது விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் 300,000 தமிழ் மக்கள் அகப்பட்டுக் கொண்டார்கள்.

இந்தத் தமிழ் அகதிகளில் பெரும்பாலானவர்கள் இன்று எதிர்காலம் பற்றிய உறுதியின்மையின் பல்வேறு தளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சிறிலங்காவின் தமிழ்ச் சிறுபான்மை மக்களுக்காகப் போராளிகள் நடத்திய கால் நூற்றாண்டு காலப் போரில் 80,000 முதல் 100,000 வரையான உயிர்கள் காவு கொள்ளப்பட்டுவிட்டன.

**தமிழ் மக்களுக்கு கூட்டுத் தண்டனை**

கடந்த மே மாதத்தில் அந்தப் போராளிகள் தோல்வியடைந்த பின்னர், சனக் கூட்டத்தால் நிரம்பி வழிந்த முகாம்களில் சிறிலங்கா அரசு மக்களை மந்தைகள் போன்று அடைத்து வைத்தது.

அவர்களுடன் பல போராளிகளும் அடைக்கப்பட்டு இருந்தார்கள்.

இந்த முகாம்களின் நிலைமை குறித்து மனித உரிமை அமைப்புக்களும் மேற்கு நாடுகளும் குறை கூறி வந்தன; இது தமிழ் மக்கள் எல்லோருக்கும், சட்ட விரோதமாகக் கூட்டுத் தண்டனை வழங்கப்படும் செயல் என அவை தெரிவித்தன.

அனைத்துலக அழுத்தங்களை அடுத்து, முகாம்களை ஜனவரி மாத இறுதியில் மூடிவிடுவதாக சிறிலங்கா அரசு அறிவித்தது.

ஆனால், ஏற்கனவே தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியவர்கள் கூட காவல்துறையினரின் அனுமதி இன்றி எங்கும் பயணிக்கக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களது வீடுகளுக்குப் படை அதிகாரிகள் அடிக்கடி வந்து பார்த்துச் செல்கிறார்கள்.

இழுத்துச் செல்லப்பட்ட அல்லது தெரிந்தே படையினரால் விசாரணைக்கு எனக் கூட்டிச் செல்லப்பட்ட தமது அன்புக்குரியவர்கள் குறித்த செய்திக்காகப் பலர் காத்துக் கிடக்கிறார்கள்.

இவ்வாறு அகதிகள் அரசினால் கண்காணிக்கப்படுவதும் அவர்களது வருமானத்திற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசு தவறுவதும் இன ரீதியான பிரிவினைப் பதற்றத்தை மீண்டும் ஏற்படுத்தி விடுமோ என மனித உரிமைகள் குழுக்கள் அஞ்சுகின்றன.

**மனமுடைய வைக்கும் விபரீதப் போக்கு**

இடம்பெயர்ந்த 3,00,000 மக்களையும் அவர்களது உறவினர்களையும் இந்தச் செயல்கள் மனமுடைய வைத்துள்ளன என்றார் மீனாட்சி கங்குலி. மனித உரிமைகள் கண்காணிப்பகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் அவர் .

தங்களுடையது அல்லாத, நம்பிக்கை வைக்க முடியாத அரசு ஒன்றின் கீழ் தாம் வாழ்கிறார்கள் என்று அந்த மக்கள் எண்ணத் தலைப்படுகிறார்கள் எனக் கவலை தெரிவித்தார் அவர்.

சிறிலங்காவில் உள்ள 20 மில்லியன் மக்களில் பெரும்பான்மையாக இந்துக்களைக் கொண்ட தமிழர்கள் 18 விழுக்காட்டினரே.

பெரும்பாலும் பௌத்தர்களை உள்ளடக்கிய பெரும்பான்மையினரால் தாங்கள் அடக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றனர் எனத் [illegible] தசாப்தங்களாக [illegible] வருகின்றனர்.

அதேசமயம் - அகதிகள் அரசிடம் இருந்தும் தொண்டு அமைப்புகளிடம் இருந்தும் உதவிகளைப் பெற்று வருகின்றார்கள் என்று புனர்வாழ்வு மற்றும் பேரிடர் உதவி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

போரின் கடைசிப் பகுதியில் இடம் பெயர்ந்த பின்னர் வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு பக்கத்து நாடான இந்தியா தகரக் கூரைகளையும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் 25,000 ரூபா பணத்தையும், 6 மாதங்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்களை உலக உணவுத் திட்டமும் வழங்கி வருகின்றன - என்றார் அமைச்சர்.

விவசாயத்திற்குத் தேவையான உபகரணங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

**பிள்ளைகளை வளர்த்து பலிக்கடாவாக்கும் செயல்**

அகதிகளில் பலர் விடுதலைப் புலிகள் ஏற்படுத்திய துன்பங்களையும் தாங்கியவர்கள்.

சண்டை நடைபெற்ற பகுதிகளில் இருந்து தப்பியோட முயன்ற மக்கள் போராளிகளால் சுடப்பட்டார்கள் என்றும் தமது பிள்ளைகள் பலவந்தமாகப் பிடித்துச் செல்லப்பட்டார்கள் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

6,000 சிறுவர்கள் பலவந்தமாகப் படைக்குச் சேர்க்கப்பட்டார்கள் என ஐ.நா. சிறுவர் அமைப்பு குற்றஞ்சாட்டி உள்ளது.

அங்கே பிள்ளைகளை வளர்ப்பதென்பது, ஆடு மாடுகளை வளர்த்துக் கொல்லக் கொடுப்பது போன்றது என்றார் சுகதாஸ் ராஜ்வதனி.

34 வயதான அவர், கடந்த ஒக்ரோபரில் தான் தனது சகோதரியின் வீடு அமைந்துள்ள துறைமுக நகரான திருகோணமலைக்குத் திரும்பி இருக்கிறார்.

பிள்ளைகளைப் பிடித்துச் செல்ல போராளிகள் வந்த போது - தனது குழந்தைகளை ஒரு குழிக்குள் மறைத்து வைத்து, அதன் மேல் இரும்புத் தகடு ஒன்றைப் போட்டு மூடி - அந்த இரும்புத் தகட்டுக்கு மேலே உலைப் பானையை வைத்து அவர் மறைத்துள்ளார்.

ஒரு நாள் இரவு தமது கூடாரத்திற்கு அருகில் இருந்த கூடாரத்திற்கு வந்த பேராளிகள், அங்கிருந்த சிறுவனைப் பிடித்துச் செல்வதற்குத் தடையாக இருந்த அவனது தந்தையைச் சுட்டுக்கொன்றனர் என்று ராஜ்வதனி கூறுகிறார்.

இதனால் ஆத்திரமடைந்த அந்தப் பையன் இவங்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணும் என்று உரக்கக் .



கத்தினான் என அந்த நினைவுகளை மீட்கிறார் ராஜ்வதனி.

அப்போது - அங்கிருந்தவர்கள் எல்லோரும் - தமது கைகளில் கிடைத்த தடிகளை எடுத்துக் கொண்டு போராளிகளைத் துரத்தித் துரத்தித் தாக்கத் தொடங்கினர். இந்தக் குழப்பம், கொந்தளிப்புகளுக்கு நடுவே ராஜ்வதனியின் குடும்பம் நீரேரியைக் கடந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குத் தப்பி வந்தது.

அந்தச் சமயத்தில் - இரு தரப்பிலிருந்தும் பீரங்கிக் குண்டுகள் வீசப்பட்டன என அவர் கூறுகிறார். அவருக்கு முன்னால் நடந்து கொண்டிருந்த பெண் எறிகணைச் சிதறல் தாக்கி அப்படியே தலைகுப்புற தண்ணீருக்குள் வீழ்ந்துள்ளார்.



எங்கள் முன்னாள் வீழ்ந்து கொண்டிருந்த பிணங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு நாங்கள் தொடர்ந்து நடந்தோம் - ராஜ்வதனியின் குரல் இறுகுகிறது.

தனது வீட்டில் இருப்பது குறித்து இப்போது மகிழ்ச்சியடைகிறார் ராஜ்வதனி; சுற்றிவர மதில் சுவர்கள் கட்டப்பட்ட அந்த வீட்டில் பத்துக்கும் மேற்பட்ட குடும்ப உறுப்பினர்களுடன் அவர் தங்கி இருக்கிறார்.

அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே இருப்பதை அவரால் நிறுத்தவே முடியவில்லை.

ஆனால், எவருக்கும் எந்த வருமானமும் கிடையாது; தனது இரண்டு தங்க வளையல்களை அடகு வைத்துப் பெற்ற 30,000 ரூபாயுடன் தான் அவரது முழுக் குடும்பம் காலந் தள்ளுகிறது.

**கணவனை இழந்தவர்**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே கிழக்கில் போர் முடிந்துவிட்ட போதும் கூட - தமது இடங்களுக்குத் திரும்பியதில் இருந்து, மிகச் சிலரால் மட்டுமே வருமானத்தைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை இங்கு பெற முடிந்துள்ளது; அதிலும் பெண்களின் நிலை மிகச் சிரமமானது.

சசிகலா சிவராஜாவும் அவரது கணவரும் வடக்கே சென்று வேலை தேடிக்கொள்ளலாம் என்று விரும்பி மட்டக்களப்பில் உள்ள தமது சிறிய கிராமத்தை விட்டு 2006 ஆம் ஆண்டு வெளியேறினார்கள்.

கடந்த ஓகஸ்ட் மாதம் சசிகலா திரும்பி வந்தார்; அவரது கணவர் வரவில்லை. இப்போது அவரும் இரண்டு குழந்தைகளும் நிவாரண உணவை நம்பியும் அவரது சகோதரியின் உதவியை நம்பியுமே வாழ்கிறார்கள்.

பவானியின் வேலை வாய்ப்பு நிலைவரமோ மிகக் கேவலமாக உள்ளது. உள்ளூர் தேவாலயம் ஏற்பாடு செய்திருந்த தையல் வகுப்புக்களில் கலந்துகொள்ளும் ஆர்வம் அவருக்கு முன்னர் இருந்தது; ஆனால், இப்போது அவர் செய்வதறியாது இருக்கிறார்.

ஏனென்றால் - அந்த தையல் இயந்திரங்களை இயக்குவதற்குக் கால்கள் வேண்டுமே....!

**************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் தமிழ் நாடகத்தின் வளர்ச்சிப்பாதை

பழைய தமிழ் நாடகங்கள் இன்று கிடைக்கவில்லை. தமிழ் மக்கள் நீண்ட காலமாகக் கூத்துக்களையே ஆடி வந்தனர் என்று முன்பு பார்த்தோம்.




### சம்பந்த முதலியாரது நாடகப் பணி

சம்பந்த முதலியாருக்கு அந்த நாட்டுக்கூத்துகளும், இசை நாடகங்களும் பிடிக்கவில்லை. அவர் ஆங்கிலமொழியில் கல்வி கற்றவர். சட்டத்தரணி, நீதிபதியாகவும் பணியாற்றியிருக்கிறார். ஆங்கில மொழியிலுள்ள உலகின் தலைசிறந்த நாடகாசிரியர்களது பல நாடகங்களையும் வாசித்திருப்பார்.

கூத்துகளில் பாடுவதும் ஆடுவதும் மட்டும் தான். வசனநடை உரையாடலில் பாத்திரங்கள் தங்கள் கருத்துக்கள் அபிப்பிராயங்கள், உணர்ச்சிகள் எல்லாவற்றையும் நன்றாக வெளியிடும். தங்கள் பிரச்சினைகளை சூடாகவும் சுவையாகவும் விவாதிக்கும். அதன்மூலம், பாத்திரவார்ப்பும் செய்யப்படும். ரசிகர்களும் நல்ல விளக்கம் பெறுவதுடன், நாடகங்களையும் நன்கு ரசிப்பர் என்று கூறி, நாடகத்திற்கு உகந்தது வசனநடையே என்ற முடிவுக்கு வந்தார்.

வசனநடை நாடகங்களை எழுதி தாமே அவற்றில் முக்கிய பாகம் ஏற்று நடித்தும் காட்டினார். தமிழ்மொழியில் முதன் முதலாக வசனநடை நாடகங்கள் எழுதியவர் முதலியாரே. அவரைப் பார்த்து தமிழ் நாட்டில் அந்தக் காலத்தில் வேறு பலரும் வசன நடையில் நாடகங்களை எழுதி நடிக்கத் தொடங்கினர். அதே நேரத்தில் கூத்துக்காரர்களும் நாட்டுக்கூத்துக்களையும் தெருக் கூத்துக்கள் என்று அழைக்கப்பட்ட இசை நாடகங்களையும் ஆடிக் கொண்டேயிருந்தனர்.

சம்பந்த முதலியார் நாட்டுக்கூத்துகளின் பழைய புராண இதிகாசக் கதைகளையே, வசன நடை நாடகங்களாக எழுதி நடித்தார். அந்தக் கதைகளிலிருந்து பல புதிய நாடகங்களையும் எழுதி நடித்தார்.

சம்பந்த முதலியார் எழுதி நடித்த நாடகங்கள் 96. அவற்றில் பெரும்பாலானவை புராண, இதிகாச நாடகங்களே. அவர் எழுதி நடித்த சமூக நாடகங்கள் ஒரு சிலவே. அவற்றிற்காகவே அவர் பாராட்டப்படுகிறார். பிற்காலத்தில் வளர்ந்த சமூக நாடகங்களுக்கு அவை வழிகாட்டிகளாயிற்றே! அவை எனக்கு வாசிக்கக் கிடைக்கவில்லை.

### பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் நாடகப்பணி

மேற்கத்தைய நாடகமுறைகளைப் பின்பற்றி பேராசிரியர் சுந்தரம்பிள்ளை 'மனோன்மணியம்' என்றொரு நாடகத்தை எழுதி வெளியிட்டார். அந்த நாடகத்தின் கதைகூட அவரது சொந்தக் கற்பனையல்ல. ஆங்கிலத்தில் லிட்டன் பிரவு என்பவர் எழுதிய (The Secret way) ''இரகசிய வழி'' என்ற கதையை அது பெரிதும் பின்பற்றியது. சேர,சோழ, பாண்டியர் காலப் பின்னணி, கவிதை நடை அதுகூட அழகான கவிதைநடையல்ல.

மனோன்மணியம் படிப்பதற்காக எழுதப்பட்ட நாடகமே (Closet Drama) தவிர நடிப்பதற்காக எழுதப்பட்டதன்று, நடிக்க முடியாத நாடகம். பின் வந்தவர்கள் அதில் பல திருத்தங்கள் செய்தே நடித்தனர். அதுதான் சுந்தரம்பிள்ளை எழுதிய ஒரேயொரு நாடகம். அது மேலைத்தேய முறைகளுக்கேற்ப எழுதப்பட்டதாலும் அவர் பேராசிரியராக இருந்ததாலும் அவரது பெயர் தமிழ் நாடக வரலாற்றில் இடம் பிடித்துவிட்டது.

### தொழில்முறை நாடகக் குழுக்களது பணி

தமிழ் நாடகத்தின் வரலாற்றை எழுதும் பொழுது ரி.கே.எஸ். சகோதரர்களின் நாடகங்கள் பற்றிக் கட்டாயம் கூறவேண்டும். அவர்கள் நடித்தவை நல்ல சமூக சீர்திருத்த நாடகங்கள். சண்முகம், பகவதி ஆகிய இரு சகோதரர்களுமே அவற்றில் முக்கிய பாகம் தாங்கி நடித்தனர். அவர்கள் ரிக்கெற் விற்றே நாடகம் நடத்தியதால் அந்தப் பண பலத்தில் நீண்ட காலம் தொடர்ந்து நாடகப்பணி செய்யக்கூடியதாக இருந்தது.

அவர்கள் இலங்கைக்கும் வந்து கொழும்பு, யாழ்ப்பாணம் இரு இடங்களிலும் பல நாடகங்களை நடத்தினர். யாழ்ப்பாணத்தில் நடந்த சில நாடகங்களைப் பார்த்திருக்கிறேன். நல்ல விறுவிறுப்பான சமூக சீர்திருத்த நாடகங்கள். அவற்றில் பாடல்கள் குறைவு. சினிமா மெட்டுக்களில் அமைந்த ஒரு சில பாடல்களே பாடப்பட்டன. அவர்கள் நடித்த பல நாடகங்கள் பின்பு நூல்களாகவும் வெளிவந்தன. அவை தென்னிந்திய பேச்சு வழக்குத் தமிழில் எழுதப்பட்டவை.

இறுதியில் நன்றாக வளர்ந்து விட்ட சினிமாவிற்கு முன்னால் எதிர்நிற்க மாட்டாது, தங்கள் நாடக முயற்சிகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தனர். தமிழகத்தில் இப்படிப் பல நாடகக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருந்தன. அவை வெவ்வேறு விதமான நாடகங்களை நடித்தன. இறுதியில் சினிமாவின் முன் எதிர்நிற்கமாட்டாது, எல்லாமே கடைகட்டிக் கொண்டன.

### திராவிட முன்னேற்றக்கழக நாடகங்கள்

திராவிட முன்னேற்றக் கழக நாடகங்கள் பற்றியும் எழுதாவிட்டால், தமிழ் நாடக வரலாறு முழுமை பெறாது. அவர்கள் எழுதி நடித்தவை எல்லாமே புரட்சிகரமான நாடகங்கள். திராவிட இன உணர்வு, தமிழ் மொழிப்பற்று, நீதி, சமத்துவம், பெண்ணுரிமை போன்ற கருத்துக்களை தங்கள் நாடகங்கள் மூலம் சமுதாயத்தில் பரப்பினர்.

அதே நேரத்தில் பழைய புராண இதிகாச நாடகங்களையும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துக்களை பரப்புகின்ற நாடகங்களையும் சாடினர். ஆரிய எதிர்ப்பு, ஹிந்தி எதிர்ப்பு, பிராமண எதிர்ப்பு ஆகிய கருத்துக்களையும் நாடகங்கள் மூலம் பிரசாரம் செய்தனர்.

அறிஞர் அண்ணாவின் நாடகங்கள் புதிய புதிய அமைப்புகளைக் கொண்டவை. அவரது தமிழும் புரட்சிகரமான அழகான தமிழ். அவரது பேச்சைக் கேட்பதற்கென்றே மக்கள் அவரது கூட்டங்களில் பெருந் தொகையாகக் குவிந்தனர். அவரது நாடகங்களும் அதே அழகான மொழி நடையில் எழுதப்பட்டன. அது செந்தமிழும் இந்திய பேச்சு வழக்குத் தமிழும் கலந்த ஒரு விறுவிறுப்பான நடை. அந்தப் பேச்சு நடையைக் கேட்பதற்காகவும் மக்கள் பெருமளவில் நாடகம் பார்க்கச் சென்றனர்.

''வேலைக்காரி!'', ''ஓர் இரவு'', ''சந்திரரோதயம்'' அண்ணாவின் நாடகங்களில் குறிப்பிடத்தக்கவை. கலைஞர் கருணாநிதியும் பல நல்ல நாடகங்களை எழுதி நடித்தார். திராவிடக் கட்சி நாடகங்கள் பல பின்பு திரைப்படங்களாகவும் எடுக்கப்பட்டன. அதனால் திராவிடக்கட்சிக் கருத்துக்கள் வேகமாகப் பரவின. திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு அவர்களது நாடகங்களும் திரைப்படங்களும் பெருந்துணைபுரிந்தன. இந்தியாவின் எந்த மாநிலத்திலும் நாடகங்களுக்கு இவ்வளவு செல்வாக்கு இருந்ததில்லை! அண்ணா அமைத்த திராவிட முன்னேற்றக் கழகச் செல்வாக்கு இன்றளவும் தமிழகத்தில் இருந்து கொண்டேயிருக்கிறது!

அவர்களுடைய நாடகங்கள் பல நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

தமிழ்நாடு பரந்த பிரதேசம். அங்கே பலர் வெவ்வேறு காலங்களில் பல்வேறு விதமான நாடகங்களை நடத்தினர். சிலர் தங்கள் நாடக முயற்சிகள் பற்றி நூல்களும் வெளியிட்டுள்ளனர். அவை எல்லாவற்றைப் பற்றியும் ஒரு சிறிய கட்டுரையில் எழுத முடியாது. விரும்பியவர்கள் அந்த நூல்களை எடுத்து வாசிக்கலாம்.

## பரீட்சைகள் மாணவரின் எதிர்காலத்துக்கா பாடசாலைகளின் புகழுக்கும் பெருமைக்குமா?

''அம்மா ஸ்கூலுக்குப் போக வேணும் 'பிறின்சிப்பல் வரச்சொன்னவா..' இன்டைக்கு அட்மிஷன் காட் கொடுக்கிறதாம்.''

''சரிபிள்ளை போயிட்டுவா! போகேக்க அரசடிப் பிள்ளையாரைக் கும்பிட்டு போன என்று கூறியவாறு வழியனுப்பினார் தாய்.

''பிள்ளை போன முறையை விட இந்த முறை அக்கறையெடுத்துப் படிக்கிறாள். பாஸ் பண்ண வைச்சுடுங்கையா! பிள்ளையாரப்பா! என்று தனக்குள்ளே கூறியபடி சின்னதாய் ஒரு நேர்த்தியும் வைச்சிட்டாள்.

''பிள்ளையள் உங்கட ''அட்மிஷன்'' காட்டெல்லாம் முருகன் கோயில்ல பூசையில வைச்சுக்கிடக்கு, எல்லோரும் வரிசையாய் கோயிலடிக்குப் போங்க என்று அறிவுறுத்தினார் அந்தப் பாடசாலையின் அதிபர்.

அதிபரினதும் தமக்குக் கற்பித்த ஆசிரியர்களினதும் கால்களைத் தொட்டுக் கும்பிட்டபடி ''அட்மிஷன்'' காட்டைப் பெற்றுக் கொண்டார்கள்.

''அட்மிஷன்'' காட்டினை வாங்கிப் பார்த்த ஒரு சில மாணவிகளுக்கு ஒரு கணம் திக்கென்றது. அதில் விஞ்ஞானம், ஆங்கிலப் பாடங்கள் குறிப்பிடப்படவில்லை.

'வாங்கடி போய் மெடத்திடம் கேட்போம்' என்று கூறியபடி அதிபரின் அலுவலகத்தை நோக்கி நடந்தார்கள்.

'மெடம் எங்களுக்கு சயன்ஸ், இங்கிலிஷ் பாடங்களுக்கு வரேல'...... என்று மெதுவாகக் கூறினார்கள்.



'அது வரல் என்று இல்ல...
உங்கள் 7 பேருக்கும் அந்த...
இரண்டு பாடத்திற்கும் நா...
அனுப்பேல்லை என்று சற்...
உரத்த தொனியில் கூறின...
அதிபர்.

'ஏன் மிஸ்' என்று மீண்...
அச்சம் நிறைந்த தொனி...
கேட்டார்கள்.

''பிள்ளையள் நீங்கள்...
பண்ணமாட்டியள், அத...
குறைஞ்சு போடும் என்...

'இல்லை மிஸ் இந்த...
படிச்சனாங்கள். கட்டாய...
மாணவிகள்.

''பிள்ளையள் ஸ்கூ...
போன முறையும் எங்க...
வீதம் கூடினது எங்கட...
மாணவிகளை திருப்பி...

''கையில் 'அட்மி...
சோகத்தைச் சிந்திய...
கேட்டீர்களா? சம்...
புறநகர்ப்பகுதியில் உ...
நடைபெற்றுள்ளது.

இப்படியான சம்ப...
கொண்டிருக்கிறது.
மாணவர்களை பரீட்...
பாடசாலையினை ...
தொடர்கதையாகின்...
குறிப்பாக சாதா...
இவ்வாறு பல மாண...

இத்தகைய சம்ப...
மாணவர்களுக்கா?...
தோன்றுகிறது.

எந்தவொரு ம...
தடுப்பதென்பது ...
கருதப்படுகின்றது...
பாடசாலைக...
...ாமல் தடுப்...
...ளியமாக்கி
பாடசாலை அதி...
விடுகிறார்களா?...
நடந்த தவறுக...
காலங்களில் இ...
வலயக்கல்விப்...
நடவடிக்கைகள்...
அறிக்கை விட...
செயலில் நட...
தடுப்பீர்களா?




## பரதக் கலை...

பரதநாட்டியத்தில் கூறப்படும் பாவங்கள், இரசங்கள் என்பவற்றின் விளக்கங்களும் சிற்ப நூல்களிலே குறிப்பிடப்பட்டுள்ளன. நவரஸங்களும் அதன் தோற்றப்பாடுகளும் தோன்றி மறையும் வியபிசா பாவங்கள் என்பவற்றின் அறிவு சிற்பங்களின் உணர்வியல் வெளிப்பாட்டைச் சிறப்பாகக் காட்ட உதவியாக இருக்கும்.

நாட்டிய நடிகர்கள் ரஸ அநுபவத் திற்கேற்ப உடலிலும் ஆடையிலும் வடிவங்கள் மற்றும் நிறவேறுபாடுகளை ஏற்படுத்துவது போன்று அந்தந்த வடிவங்கள் அவை குறிக்கும் ரஸத்திற்கேற்பச் செதுக்கப்படுகின்றன. குப்தர்காலம், பல்லவர் , சோழர்கால சிற்பங்கள் பரதமும் அதன் அம்சங்களுடனும் ஒத்திருப்பதைக் காணலாம். இக்கால சிற்பங்களில் காணப்படும் அபிநயநிலைகள், அங்கநிலைகள் என்பன பரத சாஸ்திரம் கூறும் ஆங்கிகா அபிநயத்துடன் ஒத்திருந்தமை இவ்விரு கலைகளுக்கு முரிய நெருங்கிய தொடர்பினைக் காட்டுகின்றன.

இனிநாட்டிய வடிவங்களைக் கூறும் சிற்ப உருவங்களை நோக்குவோம். நுண் கலைகள் யாவும் ஆலயத்தை ஆதாரமாகக் கொண்டே வளர்ந்தன. இறைவனே இவ் லலித கலைகளைத் தோன்றுவித்து தேவலோகத்திற்கும் பூவுலகத்திற்கும் பரப்பியவர். இதனால் நுண்கலைகள் ஆலயத்தை அண்டி வளர்ந்தமை வியப்பில்லை. வரலாற்றுக்கு முன்னைய காலங்களிலேயே ஆலயமும் கலையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருந்தன என்பதற்கான பல ஆதாரங்கள், இந்தியாவிலும் இலங்கையிலும் கிடைத்திருந்த போதிலும் பல்லவர் காலத்திற்குரியவை என எழுதப்பட்ட வரலாற்றுக்கு பிற்பட்ட கால ஆதாரங்களே இன்றும் இவற்றை தெளிவாக எடுத்துக் காட்டிநிற்கின்றன. இறைவனை வழிபட ஆலயம் ஒன்று தேவைப்பட கட்டடக்கலை உருவாகியது. அந்த ஆலயத்தில் இறைவனை உருவமாக வடித்தெடுக்க சிற்பக்கலையும் ஓவியக்கலையும் துணையாகிறது. உருவமாக வடித்த இறைவனை உள்ளத்தால் பக்தியோடு வழிபட விழைந்த போது ஆடலும், பாட்டும் அப்பக்திக்கு வலுச்சேர்ந்தன. இவ்வாறு இறைவனால் உருவாக்கப் பட்ட கலைகள் இறைவழிபாட்டின் மூலமாக உலகெங்கும் பரவியது.

ஆடற்கலையரசன் நடராஜப் பெருமான். இவரது ஆடல் வடிவங்கள் ''தாண்டவம்'' என்றும், எம்பிராட்டி பார்வதி தேவியாரின் அழகிய நடனம் ''லாஸ்யம்'' என்றும் புராணங்களும் நாட்டிய சாஸ்திர நூலோரும் கூறுகின்றனர். இவர்களை விட விநாயகர் முருகன், கிருஷ்ணன், தட்சணாமூர்த்தி ஆகியோரும் ஆடல், இசைக் கலைகளுடன் தொடர்பு பட்டிருப்பதை இந்து சமய புராணங்கள் மூலமாக அறிந்தாலும் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட ஆலயங்களின் சிற்பங்கள் வாயிலாகவும் அறிகின்றோம்.

நடன சிற்பங்கள்-

நர்த்தன விநாயகர்-தென்



### விஞ்ஞ...
### ஹம்பிறி டேவி (HU...

இவர் 1778 மு...
காலப்பகுதியில் வாழ்ந்த விஞ்ஞா...
ஆங்கிலதேச பிரித்தானிய ...
இரசாயனவியலறிஞரும் ஆவார். இவ...
சாதனங்களைக்...

இவர் சுரங்கத் தொழிலாளருக்கான, கா...
LAMP) கண்டு பிடித்தவர் ஆவார். அத்து...
ஒளியைத் தரவல்ல மின்-வில் (ELECTRIC...
கண்டு பிடித்தார். பொட்டாசியம்(K), ...
(Ca), பேரியம்(Ba), மக்னீசிய...
ஸ்ரோன்டியம்(Sr), என்னும் மூலகங்க...
உலகுக்கு அறி...
சிரிப்புவாயு எனப்படும், நைதரசன் ஒட்...
OXIDE) கண்டு பிடித்...
மேலும், மின்னோட்டத்தை, நீரினுட் ...
பொருளை பல தனிப்பொருட்களாகப் பிரிக்...
பிடித்து இரசாயனப்பகுப்பு முறை மூ...
உருவாக்கத்...

வ.சு. ஜெயபாலன் J.P ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரல் என்று இல்லை. 7 பேருக்கும் அந்த பாடத்திற்கும் நான் பல்லை என்று சற்று தொனியில் கூறினார்

மிஸ்' என்று மீண்டும் நிறைந்த தொனியில் ார்கள்.

பிள்ளையள் நீங்கள் 7 பேரும் சயன்ஸ"ம், இங்கிலிஸ"ம் பாஸ் ண்மாட்டியள், அதனால எங்கட ஸ்கூலின்ர சித்தி வீதம் ஞ்சு போடும் என்று வரட்டுக் கௌரவம் பேசினார் அதிபர். ல்லை மிஸ் இந்த முறை நாங்கள் கஸ்ரப்பட்டு ளாங்கள். கட்டாயம் பாஸ் பண்ணுவம்.' என்றனர் விகள்.

பிள்ளையள் ஸ்கூலின்ர மானத்தைக் காப்பாற்ற வேண்டும். ன முறையும் எங்கட வலயத்தில ஓ.எல் பரீட்சையில் சித்தி கூடினது எங்கட ஸ்கூல்தான் என்று புகழாரம் பாடி அந்த னவிகளை திருப்பி அனுப்பிவைத்தார் அதிபர். கையில் 'அட்மிஷன்' காட்டை ஏந்தியவாறு முகமெல்லாம் கத்தைச் சிந்தியவாறு அங்கிருந்து வெளியேறினார்கள். கேட்டீர்களா? சம்பவத்தை இது யாழ்ப்பாணத்தின் நகர்ப்பகுதியில் உள்ள பிரபல மகளிர் கல்லூரி யொன்றில் டபெற்றுள்ளது.

இப்படியான சம்பவங்கள் பல பாடசாலைகளில் நடந்து ாண்டிருக்கிறது. கல்வியில் அடைவு மட்டத்தில் குறைந்த ணவர்களை பரீட்சை எழுத விடாமல் தடுப்பதும், டசாலையினை விட்டு விலக்குவதும் இப்போது நாடர்கதையாகின்றது.

குறிப்பாக சாதாரண தர, புலமைப்பரிசில் பரீட்சைகளில் வ்வாறு பல மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர். இத்தகைய சம்பவத்தினை வைத்துப் பார்க்கும்போது பரீட்சைகள் ாணவர்களுக்கா? அல்லது பாடசாலைக்கா? என்று எண்ணத் தான்றுகிறது.

எந்தவொரு மாணவனையும் பரீட்சை எழுதவிடாமல் டுப்பதென்பது அடிப்படை மனித உரிமை மீறல் என்று கருதப்படுகின்றது.

பாடசாலைகளின் நலன் கருதி மாணவர்களைப் பரீட்சை எழுத ாமல் தடுப்பதென்பது அவர்களின் எதிர்காலத்தையே னியமாக்கிவிடுகிறது. என்பதை வரட்டுக் கௌரவம் பார்க்கும் பாடசாலை அதிபர்கள் மறந்து போகிறார்களா? அல்லது மறைத்து விடுகிறார்களா? இந்தச் சம்பவங்கள் இங்கு சுட்டிக் காட்டப்படுவது நடந்த தவறுகளுக்கு பரிகாரம் தேடுவதற்கல்ல. இனிவரும் காலங்களில் இப்படி நடக்கக்கூடாது என்பதற்காகவே. வலயக்கல்விப் பணிப்பாளர்களே! வெறுமனே ''சட்ட நடவடிக்கைகள் எடுப்போம்'' என்று பத்திரிகைகளிற்கு அடிக்கடி அறிக்கை விடாமல் ஒரு தடவை இவ்வாறான அதிபர்கள் மீது செயலில் நடவடிக்கை எடுங்கள். எடுப்பீர்களா நீங்கள்? தடுப்பீர்களா? இது போன்ற சம்பவங்களை.

(கவிநேசன்)

# சிறுவர் நாடகப் போட்டிகளால் மாணவர்கள் பயன்பெறுகிறார்களா?

சிறுவர் அரங்கு என்பது குழந்தைகளின் மகிழ்வூட்டலுக்கும் ஆளுமை விருத்திக்கும், பலதிறன் வெளிப் பாடுகளுக்கும் உரியதொன்றாகவே பார்க்கப்படுகின்றது. ஏனெனில் அதன் பயனாளிகள் இலக்கு பார்வையாளராக உள்ள சிறுவர்களே. ஆனால் அவர்களே அழுத்தங்களுக்கு உள்ளாகின்ற போது பல பிரச்சனைகளை எதிர்கொள்கின்ற சம்பவங்களை இன்றைய சிறுவர் காலப்போக்குகள் சுட்டி நிற்கின்றன.

முதலில் சிறுவர் நாடகங்கள் என்ன நோக்கத்திற்காகத் தயாரிக்கப்படுகின்றது என்பதை விளங்கிக் கொள்வதனூடாகப் போட்டி தேவையா என்பது பற்றி புரிந்து கொள்ள முடியும். சிறுவர் நாடகத்தின் மூலமே மாணவர்களது ஆடல், பாடல், சித்திரம், கைவினை, கதைசொல்லல் ஆகிய பாட விதானச்செயற்பாடுகளை நடைமுறைப் படுத்த முடியும். உதாரணமாகச் சிறுவர் நாடகத்திற்குரிய காட்சியமைப்புக்கு பயன்படுத்தப்படும் இயற்கை மாக்கொப்புக்கள், திரைச்சீலைகள் போன்றவற்றை முற்றாகத் தவிர்த்து ஆசிரியரின் வழிப்படுத்தலுடன் பிள்ளையைக் கொண்டே அவற்றை உருவாக்கலாம். இவ்வாறு சிறுவர் நாடகத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து மூலகங்களையும் பிள்ளைகளுக்கூடாகக் கொண்டுவர வேண்டும். இவற்றுக்கெல்லாம் ஆரோக்கியமில்லாத போட்டியே



தடையாக உள்ளது.

இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான பாடசாலைகளிற்கிடையில் நடைபெறும் தமிழ்த்தின நாடகப் போட்டிகளைப் பார்க்கும்போது கண்முன்னே தெரிவது பிள்ளைகள் நசுக்கப்பட்ட பூச்சிகளாய் அவதிப்படுவது. அங்கு அதிபர், ஆசிரியர், பெற்றோர்களிற்கிடையில் முரண்பாடுகள் ஏற்படுவதைக் காணமுடிகிறது. போட்டிகள் ஆரோக்கியமானவைகளாக இருந்தால் வரவேற்கத்தக்கது. வெற்றி தோல்வியினைச் சமமாக ஏற்றுக் கொள்ளும் பண்பினை மாணவர்களிடத்தே ஏற்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் அவர்களுக்கு முன்னோடியாக இருக்க வேண்டும். ஆனால் அவர்களே இன்று முரன்படுகின்ற நிலமை கவலைக்குரிய தொன்றாகும். எமது பெருமைக்கும் மதிப்புக்கும் பிள்ளைகள் வெறும் இயந்திரங்களாகவே போய்விடுகின்றார்கள். ஏனெனில் பார்வையாளர்கள் இல்லையென்றால் அரங்கு எதற்கு? பிள்ளைகள் ஒரு போதும் குழப்பம் ஏற்படுத்த மாட்டார்கள். அவர்கள் மகிழ்வையே விரும்புவார்கள். அப்படியானால் குழப்பதை ஏற்படுத்துபவர்கள் யார்?

இதனால் பிள்ளைக்கு உடல்ரீதியில் பாதிப்பு ஏற்படுகின்றது. பிள்ளைகளுக்கு போட்டிக்காக நாடகம் தாயாரிக்கப்படுகின்றது என்ற மனநிலையை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்வதற்கு என்ன செய்யலாம்? இன் நிலைமையை யாரால் ஏற்படுத்த முடியும்? முதலில் கல்விச் சமூகத்திற்கு சிறுவர் நாடகம் போட்டிக்காகத் தயாரிக்கப் படுவதில்லை என்ற மனநிலையை ஏற்படுத்த வேண்டும்.

நாடகப் போட்டிகளை, போட்டி என்ற நிலையில் இருந்து மாற்றி அதனைச் சிறுவர் குதுகலிப்பு விழாவாக நடைமுறைப்படுத்துவது நல்லது. இங்கு முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட வேண்டும். போட்டிகள் இல்லையென்றால் சிறுவர் நாடகங்கள் சிறந்த முறையில் பாடசாலைகளில் தயாரிக்கப்படுமா என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும். ஆனால் போட்டி என்பது தவிர்க்கப்படவும் வேண்டும். விழாவென்றால் அவ்வாறு அனைத்துப் பாடசாலைகளுக்கும் நடத்துவது இன்று எவ்வாறு சிறுவர் நாடகங்கள் நடைபெறுகின்றதோ அவ்வாறே அதனை விழா என்று கருதி பங்கு பற்றும் சிறுவர்கள் அனைவருக்கும் அன்றைய தினமே பெற்றோர்களுக்கு முன்னால் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டப்படவேண்டும். இவ்வாறு நடைமுறைப்படுத்தும் போது நடுவர் தேவையா? என்ற கேள்வி எம்முன்னே எழுகின்றது. இங்கு இடங்களுக்கு பதிலாகத் தெரிவு முறையினை மேற்கொள்ளலாம். இதனை மேற்கொள்வதன் நோக்கம் பெருமைக்கும் மதிப்புக்கும் அல்ல.

மீண்டும் மீண்டும் விழாக்களை நடத்த வேண்டும் என்பதற்காகவும் பிள்ளைகள் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதற்குமாகும். இவ்வாறு தெரிவினை மேற்கொள்வது யார்? என்பது பற்றி எம்முன் தோன்றுகின்றது. தெரிவினைப் பார்வையாளராக வந்துள்ள பிள்ளைகளைக் கொண்டே மேற்கொள்ளலாம். அல்லது சிறுவர்களை நடுவராகப் பயன் படுத்துவது சரியா? இதை ஒரு பரீட்சார்த்த முயற்சியாக நடைமுறைப்படுத்திப் பார்க்கலாம். இங்கு தெரிவு எனும் போது போட்டி வந்து விட்டது என்று யாரும் எண்ணத்தேவையில்லை. மீண்டும் மீண்டும் பிள்ளை சந்தோஷமாக இருப்பதற்கான ஒரு நாடக விழாவிற்கான தயார்ப்படுத்தல் நிலை என்றே இதைக் கருதவேண்டும். அனைத்து மாணவர்களுக்கும் முதல் விழாவில் மட்டுமே சான்றிதழ் வழங்க வேண்டும் என்ற முறையை நடைமுறைப்படுத்தினால் இப்பிரச்சினையில் இருந்து விடுபட வாய்ப்பு இருக்கின்றது. இதைவிட ஒவ்வொரு வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் நாடகங்களை அனைத்து சிறார்களும் கண்டு மகிழ்வதற்குரிய வசதிகளை கல்விச்சமூகம் ஏற்படுத்துமாயின் தெரிவு என்பதும் தேவையில்லை. இது பற்றி ஆழச் சிந்திக்க வேண்டும்.

இங்கு இன்னுமொரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். சிறுவர் நாடகத்தில் நடிகர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவது என்பதும் ஒரு பிரச்சினை. பதினைந்து பிள்ளைகளைக் கொண்டு நாடகம் தயாரித்தால் ஏனைய பிள்ளைகள் நடிக்கத் தேவையில்லையா? நடிக்க விரும்பும் பிள்ளையை பங்குபற்றுவதில் இருந்து நீக்கினால் உளநலம் பாதிக்கப்பட்டு தாழ்வு மனப்பாங்கு ஏற்படுகிறது. அனைத்து மாணவர்களையும் கொண்டு சிறந்ததொரு நாடப்படைப்பை உருவாக்க முடியும்.

ச.நிதர்சன்
யாழ்.பல்கலைக்கழகம்

ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு திறமை உண்டு. வேடஉடை, ஒப்பனை, காட்சியமைப்பு, இசை, பாடல் என அனைத்திற்கும் பிள்ளைகளைப் பயன்படுத்தி பிள்ளையின் கற்பனையில் உருவாக்கலாம். இசை என்றால் ஏன் மேலைத்தேச, கீழைத்தேச வாத்தியங்ளை மட்டும் பயன்படுத்த வேண்டும். ஆசிரியர்களும் பெரிய மாணவர்களுமே இதனைக் கையாளும் நிலமை பெரும்பாலான பாடசாலைகளில் காணப்படுகின்றது. இதனைத் தவிர்த்து பிள்ளைக்கு தெரிந்த இசையை, ஒலி விளைவுகளைப் பிள்ளைகளைக் கொண்டே புத்தளிப்பு முறையில் உருவாக்கலாம். உதாரணமாக சிரட்டை, கரண்டி, சோட மூடிகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதோடு தம்லர், நீர், பலூன் போன்றவற்றின் மூலம் யலதரங்கம் போன்றவற்றை உருவாக்குவதோடு, பிள்ளைகளது குரல்வளத்தைப் பயன்படுத்தி ஒலிவிளைவுகளை ஏற்படுத்தலாம்.

மேடையில் நாடகம் நடைபெறும் போது ஆசிரியர்கள் அருகில் அமர்வது பிள்ளைக்கு இடையூறு விளைவிக்கின்றது. தாம் பிழை விட்டுவிடுவோம், ஆசிரியீர் கண்டால் பேசுவார். நாம் செய்வது சரியா என்று பிள்ளை அடிக்கடி ஆசிரியரைப் பார்க்கும் நிலை. இவற்றினால் பிள்ளை சுதந்திரமாக நாடகத்தைச் செய்வதற்கு இடையூறாக அமைகின்றது. தவறிழைப்பது பிள்ளையின் இயல்பு என்பதோடு அவற்றைக் கண்டிப்பதும் தவறான செயலாகும். இவ்வாறான செயன்முறைகளை நடைமுறைப்படுத்துவது என்றால் ஆரோக்கியமற்ற போட்டிகளை நிறுத்தி பிள்ளை திணிக்கப்படுவதை நிறுத்தவேண்டும். சிறுவர் நாடகங்களூடாக பிள்ளைகளின் ஆளுமை, கற்பனை, அறிவு, நற்குணங்களை வளர்க்க வேண்டும்.

எனவே இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து விடுபட வேண்டுமானால் உடனடியாக இதற்கு ஒரு மாற்றுவழியினை உருவாக்கி இன்றைய சிறுவர்களை நற்பிரஜைகளாக உருவாக்க நாம் ஒன்றிணைய வேண்டும்.

* இன்றைய சிறுவர் நாடகப் போட்டிகள் அவசியம் இல்லை. இதனை மாற்றுவதற்கு வழிகள் உண்டு.

சிறுவர் நாடகத்தில் பங்கு பற்றும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கலாம்.

* பார்வையாளர்கள் அனுமதிக்கப் படலாம்.
* நாடகத் தெரிவு, நடுவர்கள் தேவையில்லை. தேவையானால் சிறுவர்களை பரீட்சார்த்த முயற்சியாகப் பயன்படுத்தலாம்.
* நாடக மேடையேற்றத்தின் போது மேடைகளின் அருகில் ஆசிரியர்கள் அமரத்தேவையில்லை.
* நாடகங்களில் நடிகர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவது தவறு. முழு மாணவர்களையும் வைத்து நாடகம் தயாரிக்கலாம்.
* நாடகம் முடிந்ததும் அனைத்துச் சிறுவர்களும் சந்தோஷமாக வீடு திரும்ப வேண்டும்.
* நாடகத்துக்கான வேட உடை, ஒப்பனை, காட்சியமைப்பு, ஆடல், பாடல், இசை, கைப்பொருள்கள் அனைத்தும் சிறுவர்களைக் கொண்டே ஆசிரியரின் வழிப்படுத்தலுடன் உருவாக்கலாம்.

# கலைச் சிற்பங்கள்

இந்தியாவிலும் இலங்கையின் பல ஆலயங்களிலும் விநாயகர் நடனமாடிய தாகக் கூறப்படும் புராணக் கதையை விவரிக்கும் நர்த்தன விநாயகர் சிற்பங்கள் பல காணப்படுகின்றன. ஊத்துக்குளி கைலாசநாதர் கோயிலில் மூஞ்சூறு மேல் நடனமாடும் விநாயகர் சிலையொன்று காணப்படுகிறது. அதனைவிட திருவான்மியூரிலே அருள்மிகு மருத்தீசுவரர் கோவிலில் படமெடுத்தாடும் நாகபாம்பின் மீது நர்த்தனமாடும் விநாயகர் சிற்பமொன்று அபூர்வமாகச் செதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கங்கை கொண்ட சோழேச்சரத்தில் காணப்படும் நடனமாடும் விநாயகரின் சிற்பமும் விஜயநகரப் பேரரசுகால கோவை பேரூர் பட்டிப்பெருமாள் கோயிலின் கனகசபா மண்டபத்திலே காணப்படுகின்ற நர்த்தன விநாயகரும் யானையைச் சங்காரம்செய்த சிவன் அதன் தலைமேல் நடனமிடும் காட்சியும் 16 கரங்களுடன் கூடிய ஊர்த்துவதாண்டவ மூர்த்தியினதும் சிற்பங்களைக் குறிப்பிடலாம்.

சிவதாண்டவ நடனச் சிற்பங்கள்- பெரும்பாலான பழமைவாய்ந்த இந்து ஆலயங்களில் அதிலும் சிறப்பாக சிவாலயங்களில் சிவபெருமானின் தாண்டவ நடனச் சிற்பங்கள் பல காணப்படுகின்றன. இவற்றை 108 கரண சிற்பங்கள், ஐந்தொழில் குறிக்கும் ஆனந்த தாண்டவ சிற்பங்கள் மற்றும் இதரசிவன் நடனச் சிற்பங்கள் எனப் பிரித்தும் நோக்கலாம். பல்லவர்கால காஞ்சிபுரத்திலே உள்ள கற்றளிகள் பலவற்றிலே சிவபெருமானின் புஜங்கத்ராசிதம், ஊர்த்துவஜானு, அர்த்தசுவஸ்திகம், குஞ்சிதம் முதலான தரணத் தோற்றங்களும் ஊர்த்துவ தாண்டவக் கோலங்களும் காணப்படுகின்றன. இவ்வாடல்களுக்கு அணி செய்யும் வாத்தியங்களிலே நரம்புக்கருவி, காற்றுக் கருவிகளுடன் ஒரு முகமாகவுள்ள முழவும் காணப்படுகிறது. மத்தளம் அல்லது முழவு பற்றிய முதலாவது சிற்பம் இதுவாக இருக்கலாமென்று கூறப்படுகிறது. தஞ்சைப் பெரியகோவிலில் கலைகளின் பொக்கிஷமாக இன்றும் விளங்குகின்றது. இக்கோவிலில் காணப்படும் எம்பெருமானின் ஆடற்சிற்பங்கள் சிறப்பானவை. இங்கு நடராஜப் பெருமான் அழகிய நான்கு கைகளுடன் முயலகன் மீது ஆனந்த தாண்டவமிட சிவகாமியம்மை அதனைக் கண்டு களிப்பதாக அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சோழர்காலத்தில் உருவாக்கப்பட்ட திருவாலங்காட்டு நடராஜர் வடிவம் உலகப் புகழ் பெற்றதாகக் கருதப்படுகிறது. தஞ்சைக் கோயிலின் கருவறை மண்டப வாயிலில் 10 கைகளுடன் உள்ள நடராஜர்சிலை சிறப்பானதும் அழகியதுமாகும். (வளரும்)

தொகுப்பு: நாட்டிய கலாவித்தகர், உ.உமாமகேஸ்வரி.

## விஞ்ஞான மேதை

### டேவி (HUMPHRY DAVY)

இவர் 1778 முதல் 1829 ஆம் ஆண்டு ழ்ந்த விஞ்ஞானமேதையாவார். இவர் பிரித்தானிய பௌதிகவியலறிஞரும், ஆவார். இவர் பல அரிய விஞ்ஞான சாதனங்களைக் கண்டு பிடித்துள்ளார். ருக்கான, காவல் விளக்கை (SAFTY ஆவார். அத்துடன், மிகப்பிரகாசமான (ELECTRIC ARC) என்பதனையும் பொட்டாசியம்(K), சோடியம்(Na), கல்சியம் (Ba), மக்னீசியம்(Mg), போரான் (B), வும் மூலகங்களையும் கண்டுபிடித்து லகுக்கு அறிமுகப்படுத்தியவராவார். நைதரசன் ஒட்சைட்டை (NITROUS ) கண்டு பிடித்தவரும் இவரேயாவார். தை. நீரினுட் செலுத்தி ஒரு கூட்டுப் களாகப் பிரிக்கும் முறையைக் கண்டு ப்பு முறை மூலம் பல பொருட்களை உருவாக்கத் துணைபுரிந்தவராவார்.

ல்ஸ் J.P யாழ் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சியால் உங்களின் பலன் மாறப்போவது எப்படி?

-வித்யா தருவதைப் படியங்கள்

## கன்னி

கனிவாகவும், கலகலப்பாகவும் பேசி கலங்கி வருவோரை தேற்றுபவர்களே! பூமிக்கும், வானத்தில் திரியும் மேகங்களைப்போல் கற்பனைக் காற்றில் மிதப்பவர்களே! திட்டமிடாமலேயே திடீர் முடிவுகள் எடுத்து எதிரிகளைத் திகைக்க வைப்பவர்களே! படைப்பாற்றல் கொண்ட நீங்கள் சோகம், சுகம் இரண்டையும் ரசிப்பீர்கள். சொகுசு வாழ்வை விரும்பும் உங்களைச் சிலர் சோம்பேறி என்று கூறுவார்கள். இதுவரை உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டில் அமர்ந்து ஓரளவு உங்களை உயர்த்திய குருபகவான் இப்போது ஆறாவது வீட்டில் அடியெடுத்து வைக்கிறார். சகட குருவாச்சே! சங்கடங்களையும், சச்சரவுகளையும் தருவாரே! சத்தியமாமுனியாறிலேயிரு காலிலே தலை பூண்டதும் என்று பழைய நூல் கூறுகின்றது. ஆனால் குருபகவான் தொடர்ந்து 6ஆவது வீட்டிலேயே தங்காமல் அதிசாரம் மற்றும் வக்ரகதியில் உங்கள் ராசிக்கு 7ஆம் வீட்டிற்குச் செல்வதாலும் உங்களின் பூர்வ புண்யாதிபதியான சனிபகவானின் வீட்டில் அமர்வதாலும் சங்கடங்களைக் குறைத்து சந்தோஷத்தை நிச்சயம் தருவார்.



15.12.2009 முதல் 03.05.2010 வரை மற்றும் 07.11.2010 முதல் 21.11.2010 வரை குருபகவான் 6ஆம் வீட்டில் மறைகிறார். இக்காலகட்டத்தில் சிறுசிறு விபத்துகள், வீண் செலவுகள், அலைச்சல்கள், அரசாங்கத்திற்கு அபராதம் செலுத்துதல், நகைகள், முக்கிய ஆவணங்கள் களவாடப்படுதல், உடல் நலக்குறைவு போன்றவை ஏற்படக்கூடும்.

04.05.2010 முதல் 06.11.2010 வரை குருபகவான் 7ஆம் வீட்டில் அமர்ந்து உங்கள் ராசியைப்பார்க்க இருப்பதால் பணவரவும், குடும்பத்தில் மகிழ்ச்சியும், எதிலும் வெற்றியும் உண்டாகும்.

குருபகவான் குடும்பஸ்தானத்தை பார்ப்பதால் சமயோசிதமாகப் பேசுவீர்கள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த பணம் கைக்கு வரும். நீதிமன்ற வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். சர்க்கரை நோய் உபாதை குறையும். கணவன்-மனைவிக்குள் காரண காரியமே இல்லாமல் காரசாரமான விவாதங்களெல்லாம் வந்ததே! இனி அந்த நிலை மாறும். தம்பதியருக்குள் நெருக்கம் அதிகரிக்கும். குரு 10ஆம் வீட்டைப் பார்ப்பதால் தகுதிக்கேற்ப நல்ல வேலை அமையும். தன்னார்வத்தொண்டு நிறுவனங்களில் உங்களை இணைத்துக் கொள்வீர்கள். சாதுக்கள் உதவுவார்கள். நாடாளுபவர்கள் அறிமுகமாவார்கள். சொந்த ஊரில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். அதிக சம்பளத்துடன் புதிய வேலை கிடைக்கும். வெளிவட்டாரத்தில் உங்களின் புகழ், கௌரவம் உயரும். குரு 12ஆம் வீட்டைப் பார்ப்பதால் எதிர்காலத்தை மனதில் கொண்டு சேமிக்கத் தொடங்குவீர்கள். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் உயர்கல்வி பெற இடம் கிடைக்கும். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். வாங்கிய கடனை அடைக்க புதுவழி பிறக்கும். கல்வியாளர்கள், அறிஞர்களால் பாராட்டப்படுவீர்கள்.

### குருபகவானின் நட்சத்திர சஞ்சார பலன்கள்

15.12.2009 முதல் 18.01.2010 முடிய உங்களின் சேவக அஷ்டமாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் குடும்பத்தில் சண்டை, சச்சரவு வந்து நீங்கும். மனைவிக்கு நெஞ்சு வலி, தலைச்சுற்றல் வந்து விலகும். யாரையும் விமர்சித்துப்பேச வேண்டாம். நேரம் தவறி சாப்பிட வேண்டாம். புதிதாக சொத்து வாங்கும்போது அதற்குரிய ஆவணங்களை வழக்கறிஞர் மூலம் சரிபார்த்துக் கொள்வது நல்லது.

19.01.2010 முதல் 17.03.2010 முடிய ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் வரவுக்கு மிஞ்சிய செலவீனங்கள், தாயின் உடல்நிலை பாதிப்பு என்று ஏற்படும். முன்பின் அறிமுகம் இல்லாதவர்களை வீட்டிற்குள் அனுமதிக்க வேண்டாம். பங்குச்சந்தை, வெளிநாட்டு அதிஷ்டலாபச் சீட்டில் பணத்தை இழக்க வேண்டாம்.

18.03.2010 முதல் 03.05.2010 வரை மற்றும்07.11.2010 முதல் 21.11.2010 முடிய உங்களின் சுக சப்தமாதிபதியான குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் செல்வதால் இக்காலகட்டத்தில் கணவன்-மனைவிக்குள் சந்தேகத்தால் சண்டை வரும். பொருள் இழப்பு, மறைமுக விமர்சனம், எதிர்காலம் குறித்த கவலைகள் வந்து நீங்கும். முன்தேதியிட்டு காசோலை தரும்போது கவனம் தேவை. வீடு, வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகமாகும். பிள்ளைகள் கொஞ்சம் பிடிவாதமாக இருப்பார்கள். அவர்களின் போக்கில் விட்டுப்பிடிப்பது நல்லது.

04.05.2010 முதல் 21.05.2010 வரை மற்றும் 28.09.2010 முதல் 06.11.2010 முடிய குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் சென்றாலும் உங்கள் ராசிக்கு 7ஆம் வீட்டில் வலுவாக அமர்வதால் விலை உயர்ந்த ஆபரணங்கள், ரத்தினங்கள் வாங்குவீர்கள். மகளுக்கு நீங்கள் எதிர்பார்த்தபடி நல்ல குணமுள்ள மாப்பிள்ளை அமைவார். பாதியிலேயே நின்ற வீடு கட்டுமானப்பணி முழுவீச்சில் முடிந்து சிறப்பாகக் கிரகப்பிரவேசம் செய்வீர்கள். அடிக்கடி தண்டச்செலவு வைத்த வாகனத்தை விற்றுவிட்டு புது வாகனம் வாங்குவீர்கள். பூர்வீகச்சொத்தை மாற்றி புதுமனை வாங்குவீர்கள். எதிர்த்துப் பேசியவர்கள், வலிய வந்து நட்புப் பாராட்டுவார்கள். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள்.

22.05.2010 முதல் 27.09.2010 முடிய உங்களின் பூர்வ புண்யாதிபதியும், யோகாதிபதியுமான சனிபகவானின் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் குழந்தை பாக்கியம் கிடைக்கும். வரவேண்டிய பணம் கைக்கு வரும். சொந்த பந்தங்கள் மத்தியில் மதிக்கப்படு வீர்கள். வேலை கிடைக்கும். பிரபலங்கள் உதவுவார்கள். பெரிய பதவியில் அமர் வீர்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள்.

வியாபாரத்தில் பெரிய முதலீடுகளை தவிர்த்துவிட்டு, இருப்பதை வைத்து முன்னேறப்பாருங்கள். ஆனால் மே, ஜூன், ஜூலை மாதங்களில் புது ஒப்பந்தங்கள் மூலம் லாபம் பெருகும். எவ்வளவு அள்ளித் தந்தாலும் வேலையாள்கள் நன்றியில்லாமல் இருக்கிறார்களே என உணர்ச்சிவசப்படுவீர்கள். தரகர், கணனி, உணவு மற்றும் இரசாயன வகைகளால் லாபம் வரும். மற்றவர்கள் சொல்கிறார்கள் என்று தெரியாத துறையில் இறங்க வேண்டாம். பங்குதாரர்கள் எடுத் தெறிந்து பேசினாலும் ஆத்திரப்படாதீர்கள்.

உத்தியோகத்தில் பல வேலைகளை நீங்களே பார்க்க வேண்டி வரும். ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் புது வாய்ப்புகள் தேடி வரும். பதவி உயர்வுக்காக உங்களின் பெயர் பரிசீலிக்கப்படும். வெளிநாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்வதன் மூலம் உங்கள் நிறுவனத்தின் புகழ் கூடும். சக ஊழியர்களால் இருந்து வந்த மறைமுகத் தொந்தரவுகள் நீங்கும். வேலைச்சுமை அதிகரித்தாலும் பணிகளை விரைந்து முடித்து மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள்.

கன்னிப் பெண்களே! மதில்மேல் பூனையாக இருந்த நிலை மாறும். உங்கள் ரசனைக்கேற்ற மணமகன் வந்தமைவார். கல்யாணம் சிறப்பாக முடியும். பெற்றோர் உங்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வார் கள். பசியின்மை, பீனிசம் தொந்தரவு நீங்கும்.

மாணவ-மாணவிகளே! விளையாட்டுத்தனத்தை மறந்து படிப்பில் தீவிரம் காட்டுங்கள். நினைவுத்திறனை அதிகப்படுத்த கீரை வகைகளை உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

கலைஞர்களே! உங்களை ஒதுக்கித் தள்ளிய மூத்த கலைஞர்கள் இனி உங்களுக்கு விருந்தளித்து பாராட்டுவார்கள். வீண் வதந்திகள் விலகும்.

விவசாயிகளே! பூச்சிகளை விரட்டுவதற்கே அதிகம் செலவு செய்ய நேரிட்டதே! இனி அந்த நிலை மாறும். நெல், கரும்பு சாகுபடியால் லாபத்தை ஈட்டுவீர்கள். தண்ணீர் வசதி பெருகும்.

அரசியல்வாதிகளே! யாரையும் தாக்கிப் பேசவேண்டாம். சகாக்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். விழாக்களுக்குத் தலைமை தாங்குவீர்கள்.

இந்தக் குருப் பெயர்ச்சி உங்களை சுற்றியிருப்பவர்களை புரிந்து கொள்ள வைக்கும். அலைச்சலுடன் ஆதாயத்தையும் அள்ளித் தருவதாக அமையும். ***

## துலாம்

தும்பைப் பூ போல், வெள்ளை மனசு கொண்ட நீங்கள், வாழு, வாழவிடு என்ற கொள்கையை கொண்டவர்கள். பூ, காய், கனிகளைத் தாங்கி நிற்கும் மரத்தைப்போல் குடும்பப் பாரத்தை சுமப்பவர்களே! இசை, இலக்கியத்தில் ஆர்வமுள்ள நீங்கள், எப்போதும் அறிஞர்களின் அருகில் இருக்கவே ஆசைப்படுவீர்கள். இதுவரை உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் குரு அமர்ந்து நாலாவிதத்திலும் நஷ்டப்படுத்தினாரே! கணவன்-மனைவிக்குள் ஏற்பட்ட சண்டை, சச்சரவால் வீட்டை விட்டு வெளியில் தங்க வைத்தாரே! உடம்பும், மனசும் ஒட்டாமல் சித்தன் போக்கு, சிவம் போக்கு என்றிருந்தீர்களே! பிள்ளைகளாலும் அலைக்கழிக்கப் பட்டீர்களே! வாகன விபத்துகளையும், பண இழப்புகளையும், உறவினர்கள்-நண்பர்களுடன் பகைமையையும் தந்த குருபகவான் இப்போது 5ஆம் வீட்டில் அடியெடுத்து வைக்கிறார். இனி அள்ளிக்கொடுப்பதுடன், வாழ்க்கைக்கு அத்திபாரத்தையும் அமைத்துத் தருவார்.



ஒரே வீட்டுக்குள் ஒட்டுறவு இல்லாமல் பிரிந்துதானே இருந்தீர்கள். அந்த அவல நிலை மாறும். வீட்டில் அமைதி நிலவும். பிள்ளை இல்லையே என்று ஏங்கித் தவித்த தம்பதியருக்கு கண்ணுக்கு அழகான குழந்தை பிறக்கும். படுத்த படுக்கையாய் இருந்த தாய் எழுந்து நடப்பார். கல்யாண நிகழ்ச்சிகளில் ஒதுக்கப்பட்டீர்களே! இனி முதல் மரியாதை கிடைக்கும். இனி உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்வீர்கள். குலதெய்வக்கோயிலுக்குச் செய்ய வேண்டிய நேர்த்திக்கடனை இப்பொழுது நிறைவேற்றுவீர்கள். பூர்வீகச்சொத்து சம்பந்தப்பட்ட வழக்கு சாதகமாகும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். குரு உங்கள் ராசியைப் பார்ப்பதால் சோகம் விலகி, உங்கள் முகம் பிரகாசிக்கும்.

குரு ஐந்தாம் பார்வையால் உங்களின் 9ஆம் வீட்டை பார்ப்பதால் எதிர்பார்த்த பணம் வரும். தந்தையுடனான மனஸ்தாபங்கள் நீங்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். பதினோராவது வீட்டைக் குரு பார்ப்பதால் உங்களை குறை கூறியவர்களெல்லாம் இனி உங்களை புகழ்ந்து பேசுவார்கள். மூத்த சகோதரர் பாசமழை பொழிவார். வெளிவட்டாரத்தில் உங்களை எதிர்த்தவர்களெல்லாம் அடங்குவார்கள். போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். சொந்த ஊரிலுள்ள கோயிலைப் புதுப்பித்து ஊரே வியக்கும்படி கும்பாபிஷேகம் நடத்துவீர்கள். வாடகை வீட்டிலிருந்து சொந்த வீட்டிற்கு குடி புகுவீர்கள். வழக்கில் திருப்பம் ஏற்படும். அரசால் காரியங்கள் விரைந்து முடியும். மனைவிக்கு விலையுயர்ந்த பட்டுப்புடவை வாங்கித் தருவீர்கள். பழைய கடனை கொஞ்சம் கொஞ்சமாக அடைத்து விடுவீர் கள். வேலையில்லாமல் தவித்தவர்களுக்கு பெரிய நிறுவனத்தில் வேலை கிடைக்கும். வீட்டிற்கு வேண்டிய ரி.வி, பிரிட்ஜ் வாங்குவீர்கள்.

### குருபகவானின் நட்சத்திர சஞ்சார பலன்கள்

15.12.2009 முதல் 18.01.2010 முடிய உங்களின் தன சப்தமாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் குடும்பத்தில் அமைதி நிலவும். மனைவி வழியில் உதவிகள் கிடைக்கும். கைமாறாக வாங்கியிருந்த பணத்தை தந்து முடிப்பீர்கள். சகோதரர்கள் மதிப்பார்கள்.

19.01.2010 முதல் 17.03.2010 முடிய ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் திடீர் பணவரவு, எடுத்த காரியங்களில் வெற்றி, சொத்து சேர்க்கை, புதிய வாகன வரவு ஆகியவை உண்டாகும். பெரிய பதவிகள் தேடி வரும். வேலை கிடைக்கும்.

18.03.2010 முதல் 03.05.2010 வரை மற்றும் 07.11.2010 முதல் 21.11.2010 முடிய உங்களின் சேவக, ரோகாதிபதியான குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் செல்வதால் இக்காலகட்டத்தில் தைரியமாக பெரிய முடிவுகள் எடுப்பீர்கள். பழைய கடனை அடைக்க வழி பிறக்கும்.

அரசால் ஆதாயமடைவீர்கள். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். மகளுக்கு நல்ல இடத்தில் திருமணம் முடிப்பீர்கள். 04.05.2010 முதல் 21.05.2010 வரை மற்றும் 28.9.2010 முதல் 06.11.2010 முடிய குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் சென்றாலும் உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டில் மறைவதால் செலவுகள் அதிகரிக்கும். வம்பு, வழக்கு தேடி வரும். பயணங்களில் கவனம் தேவை. சிக்கனமாக இருக் கப் பாருங்கள்.

22.05.2010 முதல் 27.09.2010 முடிய உள்ள காலகட்டத்தில் குருபகவான் 6இல் மறைவதால் அலைச்சலை உண்டாக்குவார். என்றாலும் உங்களின் சுகாதிபதியும், பூர்வ புண்யாதிபதியுமான சனிபகவானின் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். தாயின் உடல்நிலை சீராகும். வீடு கட்டுவது, வாங்குவது லாபகரமாக முடியும். இருந்தாலும் வயிற்றுவலி, தூக்கமின்மை வந்து நீங்கும்.

வியாபாரத்தில் புதிது புதிதாக வந்த போட்டியாளர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறினீர்களே! இனி அவர்களுக்கெல்லாம் பதிலடி கொடுக்கும் வகையில் உங்களின் அணுகுமுறையை மாற்றுவீர்கள். ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் புதிய ஒப்பந்தங்கள், முதலீடுகள் உண்டு.

உத்தியோகத்தில் உங்களை வெறுத்த மூத்த அதிகாரியின் மனசு மாறும். மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள். அதிகாரப்பதவியில் அமர்வீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். வேலைச்சுமை குறையும். ஏப்ரல், ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் நல்ல சம்பளத்துடன் புது வேலை கிடைக்கும். கன்னிப் பெண்களே! கல்யாணம் தள்ளிப்போய்க் கொண்டிருக்கிறதே என்று வருந்தினீர்களே! இனி சிறப்பாக நடக்கும். நல்ல வேலையும் கிடைக்கும். தோல்வியுற்ற பாடத்தில் வெற்றி பெறுவீர்கள். மாணவ-மாணவிகளே! படித்தால் மட்டும் போதாது விடைகளை எழுதிப் பாருங்கள். கடினமான பாடங்களிலும் அதிக மதிப்பெண் பெறுவீர்கள். நல்ல நண்பர்கள் அறிமுகமாவார்கள். கலைஞர்களே! உங்கள் படைப்புக்கு நாடாளுபவர்களின் கரங்களால் பரிசு கிடைக்கும். விவசாயிகளே! தண்ணீர் வசதி பெருகும். உழவு இயந்திரம் வாங்குவீர்கள். கரும்பு, தென்னை, தேக்கால் லாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளே! அவசரப்பட்டு அணி மாற வேண்டாம். பெரிய பதவிகள் கிடைக்கும்.

ஆகமொத்தம் இந்தக் குருப் பெயர்ச்சி கவலையில் மூழ்கிக் கிடந்த உங்களை கலகலப்பாக்குவதுடன் எதையும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையைத் தருவதாக அமையும். ***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



கைதடி குருசாமி வித்தியாலயத்தின் ஆரம்பக் கல்விப் பிரிவு மாணவர்களின் சஞ்சிகை வெளியீட்டு விழா அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம். [50-288]



சதாவதானி கதிரவேற்பிள்ளை முன்பள்ளிக் கலை விழா அண்மையில் கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் நிலையத் தலைவர் கி.குகநாதன், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மேல் நீதிமன்றப் பதிவாளர் எஸ்.நடராசா, சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற வங்கி உத்தியோகத்தர் ரி.நவரட்ணராஜா, ஓய்வுபெற்ற தபாலதிபர் எஸ்.வேலும்மயிலும் ஆகியோரை முன்பள்ளிச் சிறார்கள் 'பாண்ட்' வாத்தியத்துடன் அழைத்துச் செல்வதைக் காணலாம். [50-236]



உரும்பிராய் காமாட்சி அம்பாள் கல்யாண மண்டப பரிபாலன சபையின் ஏற்பாட்டில் மாதாந்த பௌர்ணமி தின கலை நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர் க.ஆனந்தராஜா பக்கவாத்திய சகிதம் கதாப் பிரசங்கம் நிகழ்த்துவதைக் காணலாம்.



சிவலிங்கயோக கேந்திர நிலையத்தின் ஏற்பாட்டில் மாதகல் விநாயகர் அறநெறிப் பாடசாலையில் நடத்தப்பட்ட யோகாசனப் பயிற்சியின்போது எடுக்கப்பட்ட படம். [50-9]



வடமாகாண சுகாதார அமைச்சு, யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை ஆகியன இணைந்து யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடத்திய நடமாடும் சேவையின்போது எடுக்கப்பட்ட படம் இது.

இந்த நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சின் மாகாணப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ஞானசோதி, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், வடமாகாண சுகாதார அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் ப.சிவபாலன் ஆகியோர் வைத்திய அதிகாரியால் சமர்ப்பிக்கப்பட்ட விடயம் தொடர்பாக விளக்கமளிப்பதையும் திணைக்கள ஊழியர்களையும் படத்தில் காணலாம். [படம்:குருநகர் செய்தியாளர்]

அறநெறிப் பாடசாலைகளுக்கான சுருதிப் பெட்டிகள் அண்மையில் வேம்படி பெண்கள் உயர்தப் பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டன.


இந்த நிகழ்வில் கலாசாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் ஒருவருக்குச் சுருதிப் பெட்டி வழங்குவதைக் காணலாம். [50-9]





கொக்குவில் மேற்கு ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு உரையாற்றுவதனையும் அருகில் பாடசாலை அதிபர், பழைய மாணவர் சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.



தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு அண்மையில் வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது.

வலயக் கல்வி அலுவலகம், சாவகச்சேரி லயன்ஸ் கழகம் சிறுவர் பாதுகாப்பு நிதி நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்திய இந்நிகழ்வில் பார்வையில் குறைபாடு காணப்பட்ட மாணவனுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் மூக்குக் கண்ணாடி வழங்குவதைக் காணலாம். [50-207]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



எமது பாடசாலையின் பகுதித் தலைவரும், கணித ஆசிரியையுமான திருமதி கமலாதேவி பவளராசா அவர்களின் அன்புத் தந்தை

அமரர் கந்தையா கணபதிப்பிள்ளை (சிவகுரு)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம், வல்வெட்டித்துறை.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.

(90899)

## விற்பனைக்குண்டு

3½மாத சினையுடன் கூடிய சணல் ஆடு, மற்றும் கடாய்க்குட்டி விற்பனைக்குண்டு, தொடர்பு இல.169 , ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (91616)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்தும் முட்டைகளும் தினமும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:- மல்ரி பாம் சென்ரர்

61, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி.

## அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்க

கரவெட்டி,டிசெ.19

தகவல் தொழில்நுட்பம் பாடத்திற்கு தோற்றவுள்ள 2010 ஜி.சீ. ஈ. உயர்தர மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்று வழங்கப்படவுள்ளன.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்று மு.ப.10 மணிக்கு கல்லூரியின் அலுவலகத்தில் வழங்கப்படும் என கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (50-16)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### கபிரியல் இம்மனுவல்



மலர்வு 20★09★1941

உதிர்வு 20★12★2008

துண்டா மணிவிளக்கே
சுடர்மிகு ஒளியமே!
ஆண்டொன்று போனதுவே
ஆயினும் போகவில்லை உன்நினைவு

அன்னாரின் நினைவாக குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலும், பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலும் இன்று (19.12.2009) சனிக்கிழமை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அன்பின் மனைவி,
இ.கிளைமென்றா (இராசாத்தி).

(91537)

## அன்பொளி கல்வி நிலைய பரிசளிப்புவிழா நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.19

சாவகச்சேரி அன்பொளி கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி, டச்சு வீதியில் அமைந்துள்ள ஐங்கரன் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் அருணாசலம் மனோரஞ்சிதனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் யோ.லிங்கேஸ்வரனும் கலந்து கொள்வர். கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற அதிபர் த.அப்புத்துரையும், ஜே.பி. மா.சுப்பையாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (50-201)

## தொடர்புகொள்ளவும்

கீரிமலை ஸ்ரீமுருகன் கபே உரிமையாளர் **சின்னையா** அவர்களின் புதல்வர் **தர்மரத்தினம்** (U.K) அவர்களின் தொலைபேசி இலக்கம் அல்லது முகவரியை(U.K) அறிந்து கொள்வதற்கு அவரின் பாடசாலை நண்பர் துரைராஜா என்பவர் விரும்புகிறார். அவரின் உறவினர் எவராவது விசேடமாக அவரின் சகோதரி **ஜெயா**.

077 6956683 அல்லது 0113134518 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (91545)

## நாலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கருணாவதி நாகராசா

(பரிசாரகி, யாழ்.போதனா வைத்தியசாலை)

திதி: திருதியை (19.12.2009)

மலர்வு 27★03★1963

உதிர்வு 12★01★2005

பிள்ளையார் கோவிலடி, கைதடி கிழக்கு.

என்றும் உங்கள் நினைவுடன்: குடும்பத்தினர். (91500)

## கிழவன்காடு கலாமன்றத்தின் பரிசளிப்பும் கலை நிகழ்வும்


யாழ்ப்பாணம்,டிசெ.19

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கிழவன்காடு கலாமன்றத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்டச் செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் சாம்பசிவம் சுதர்சன், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவநேசன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஈ.எஸ்.பி.நிறுவன உரிமையாளர் ஈ.எஸ். பி. நாகரத்தினம், கணேசன் ரெக்ஸ் உரிமையாளர் கே.சிவநேசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். கலாமன்ற மாணவர்களும், ஆசிரியர்களும் வழங்கும் கலைநிகழ்வுகளும் இந்த நிகழ்வில் இடம் பெறவுள்ளது. (50-250)

## 45 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 21 ★ 08 ★ 1976



உதிர்வு 05 ★ 11 ★ 2009

### அமரர் ஜேசுதாசன் பயஸ்ராஜா

(ஓவிய ஆசிரியர்)

வண்ணங்களுக்கு வண்ணங்களால்
வடிவங் கொடுத்த ஓவியனே
நீ மறைந்து நாள்கள் 45 ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
உன் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(91540)

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எழுவைதீவு புனிததொம்மையப்பர் தேவாலயத்தில் இன்று (19.12.2009) சனிக்கிழமை பிற்பகல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

ப.யதிவர்மன் (மகன்)
மனைவி, தாய், தோட்டம்மா,மாமாமார்.
தகவல்: ம.இ.பேணாட்
( ஓய்வூதியர்-பிரதேசசபை).

மண்குழி வீதி,
ஊர்காவற்றுறை.

### தேசிய சேமிப்பு வங்கியில் கணக்கு வைத்துள்ள புலமைப்பரிசில் மாணவருக்கு வெகுமதி

யாழ்ப்பாணம்,டிசெ.19

தேசிய சேமிப்பு வங்கி மானிப்பாய், திருநெல்வேலி கிளைகளில் சிறுவர் சேமிப்புக் கணக்குகளை வைத்திருக்கும் 2009 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ள மாணவர்களில் மாவட்ட மட்டத்தில் முதல் 10 இடங்களைப்பெற்ற மாணவர்கள் என்ற வகைப்படுத்தலுக்குள் உள்ளடக்கப்படாதோருக்கான வெகுமதிகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்படி மாணவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-9)

## மரண அறிவித்தல்

### திருமதி தயாமணி அழகரத்தினம் (தயா ரீச்சர்)



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாமணி அழகரத்தினம் நேற்று (18.12.2009) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மு.அழகரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நல்லப்பாமான்-நேசம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற முருகேசு-தங்கம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பென்மான் மற்றும் ராணி- ஜெயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோகரன் (U.K), மாலதி (ஆசிரியை-யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), பிரபாகரன் (ஆசிரியர்-St.Johns College), சரளா (Germany), சாந்திகரன் (U.K) ஆகியோரின் அருமைத் தாயும் குமரேஸ்வரி (U.K), அரியானந்தம், ஈஸ்வரி (St.Johns College), சூரியகுமார் (Germany), கீர்த்திகா (U.K) ஆகியோரின் அன்பு மாமியும் நிரோஜி, நிலோஜி, டிலானி, டிலக்ஷன், அனோஜி, ஆரணி, அருளினி, அல்பிரட், ஜோய்பிரட், ஜெனிக்கா, ஜெனீஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிரபாகரன் (மகன்),
அரியானந்தம் (மருமகன்).

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (91546)

## 5 ஆம் ஆண்டு நினைவு நாள்



### செல்வி தபேந்திரராஜா ஈவிலின் சரோமினி

பிறப்பு: 21.10.1991

இறப்பு: 19.12.2004

'உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்ளும் எவனும் இறப்பினும் வாழ்வான்'

சிரித்திடும் முகத்துடன்
மின்மினிப் பூச்சியாய்
சிறகடித்துத் திரிந்த உன்
நிழல் கண்டு
ஐந்தாண்டாகியும் எம்
நினைவில் ஒரு கணமேனும்
பிரியாது வாழ்கின்றாய்

(91520)

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, தம்பி (சுரேஸ்)
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் விரோதி வருஷம் கார்த்திகை மாதம் 24 ஆம் நாள் (11.12.2009) வியாழக்கிழமை பின்னிரவு இறைபதமெய்திய எமது குடும்பத்தலைவி

### திருமதி சாந்திமலர் சோமசுந்தரேஸ்வரக் குருக்கள்

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளதால் அக்கிரியைகளில் தாங்களும் குடும்பசமேதரராக கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இன்று (19.12.2009) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தசாகம் (கல்லெடுப்பு)
20.12.2009 ஞாயிறு மு.ப. 10 மணிக்கு ஏகோதிஷ்டம், மாசிகம்.
21.12.2009 திங்கள் மு.ப. 10 மணிக்கு சபிண்டிகரணம்
22.12.2009 செவ்வாய் மு.ப. 10 மணிக்கு கிருஹயக்ஞம்
24.12.2009 வியாழன் சமாராதனை (மதியபோசனம்)

கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்,
அளவெட்டி. (91543)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மானிப்பாய் இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர்தின நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்படுவதை முதலாவது படத்தில் காணலாம்.

வருடாந்த பரிசளிப்பு விழாவில் அதிபர் ச.சிவநேஸ்வரன் தலைமை உரை நிகழ்த்துவதையும், நிறுவுநர்தின உரையை பேராசிரியர் மா.சின்னத்தம்பியும், பிரதம விருந்தினர் உரையை பாடசாலையின் பழைய மாணவரும் மாவட்ட நீதிபதியுமான இரா.வசந்தசேனனும் நிகழ்த்துவதை அடுத்துள்ள மூன்று படங்களிலும் மாணவன் ஒருவனுக்கு திருமதி பத்மினி வசந்தசேனன் பரிசில் வழங்குவதையும் இறுதிப்படத்திலும் காணலாம்.

# வேட்பு மனுவைத் தாக்கல் செய்தபின் மதத்தலங்களுக்குச் சென்றார் மஹிந்த



கண்டிஸ்ரீ செல்வ விநாயகர் கோவிலில் ஜனாதிபதி மஹிந்த....

கொழும்பு, டிச. 19

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்புமனுவை நேற்று முன்தினம் தாக்கல் செய்த பின்பு அனைத்து மத வழிப்பாட்டிற்காகக் கண்டி ஆலயங்களுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

கண்டி தலதாமாளிகைக்கு விஜயம் செய்தபோது மூவாயிரம் மாநாயக்கர்கள் ஜனாதிபதிக்கு பிரித் ஓதி ஆசி வழங்கினர். அதனை தொடர்ந்து மிரம் முஸ்லிம் பள்ளி வாசல் மற்றும் ஸ்ரீ செல்வ விநாயகர் கோவிலுக்கும் சென்று ஆசி பெற்று வழிபாடு செய்ததுடன் பாதிரியார் டாக்டர் லியான பெர்னாந்தின் ஆசியையும் பெற்றுக் கொண்டார். மீண்டும் கொழும்பு திரும்புகையில் பேலிய கொடையில் உள்ள வித்தியாலங் கார பிரிவேகைக்கும் விஜயம் செய்தார். (சி)

# மாபெரும் யுத்த வீரர் தேசத்துரோகியானார்!

## பொன்சேகா மீது பொரிகிறது ஹெல உறுமய

கொழும்பு, டிச. 19

அரசின் மீது சர்வதேச நாடுகள் யுத்தக்குற்ற விசாரணைகள் நடத்துவதற்குத் தேவையான தகவல்கள் மற்றும் ஆதாரங்கள் அனைத்தையும் ஜெனரல் சரத் பொன்சேகா சர்வதேசத்துக்குப் பெற்றுக்கொடுத்து விட்டார் என்று ஜாதிக ஹெல உறுமய நேற்று முன்தினம் குற்றஞ்சாட்டியது.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் ரிசாந்த வர்ணகுலசூரிய இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இவ்வருடம் டிசம்பர் மாதம் 13ஆம் திகதி இந்நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்ட நாளாகும். அன்றைய தினம்தான் எதிர்க்கட்சிகளின்பொது வேட்பாளர் சரத் பொன்சேகா எமது படையினரையும், யுத்த வெற்றியையும் காட்டிக்கொடுத்தார்.

யுத்தக் களத்தில் படையினரிடம் சரணடைய வந்த புலித் தலைவர்களைச் சுட்டுக்கொல்ல பாதுகாப்புச் செயலர் கோத்தபாய உத்தரவிட்டார் என்று பொன்சேகா 13 ஆம் திகதி 'த சண்டே லீடர்'பத்திரிகைக்குத் தெரிவித்திருந்தார்.

இதன் மூலம் வரலாற்றில் இலங்கைக்கு எதிராக என்றுமில்லாதவாறு பாரிய துரோகம் இழைக்கப்பட்டிருக்கின்றது. இது பெரும் காட்டிக்கொடுப்பு. இக் கூற்று புலி ஆதரவாளர்களுக்கும், சர்வதேசத்திற்கும் மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது.

இலங்கை அரசு மீது யுத்தக்குற்ற விசாரணையை நடத்துவதற்கு ஆதாரங்களைத் தேடிக்கொண்டிருந்த சர்வதேசத்துக்குப் பொன்சேகா அனைத்துத் தகவல்களையும் பெற்றுக்கொடுத்துவிட்டார். பெரும் யுத்த வீரரான பொன்சேகா இப்போது பெரும் தேசத்துரோகியாக மாறியுள்ளார்.

இந்த சரத் பொன்சேகாவால் ஒரு போதும் வெற்றி பெறமுடியாது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றி உறுதியாகிவிட்டது. ஜனவரி மாதம் 26 ஆம் திகதிக்குப் பிறகு ஐக்கிய தேசிய கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் அரசியல் நடத்தவே இயலாமல் போய்விடும். - என்றார். (சி)

## பழைய மாணவர்களுக்கான பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (50-10)

# யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பு அவசியம்

## நோய்த்தடுப்பு வைத்திய அதிகாரி கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.19

டெங்கு நோயின் தாக்கம் குடாநாட்டில் வேகமாக அதிகரித்து வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்குப் பொது மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

யாழ்.மாவட்ட தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி திருமதி திருமகள் சிவசங்கர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நுளம்புகள் பெரும் இடங்களை மட்டும் தான் அழிப்பதற்குச் சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் அசண்டையீனமாக இருந்து விடுகின்றனர்.

அவ்வாறு பொதுமக்கள் பொறுப்பற்ற முறையில் செயற்படக்கூடாது. தாம் சார்ந்த சூழலினைத் துப்புரவாக வைத்திருக்க வேண்டியது அவர்களது கடமை.

மழை பெய்யும் வேளைகளில் நீர் தேங்கக்கூடிய சிறிய கொள்கலன்கள், பொலித்தீன் பைகள், தகரப் பேணிகளை சூழலில் இருந்து அகற்றிவிட வேண்டும்.

அத்துடன் வீட்டுக்குச் சுற்றுப் புறச்சூழலில் உள்ள பற்றைகளை வெட்டி அழித்துவிட வேண்டும். டெங்கு நோய்த்தாக்கத்தினைக் கட்டுப்படுத்த சுகாதாரத் திணைக்களத்தினர் துரித நடவடிக்கை யினை மேற்கொண்டாலும் பொதுமக்களும் எம்மோடு ஒத்துழைக்க வேண்டும் - என்றார் அவர். (50-9)

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர் விவரம்

வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியில் 2010 ஆம் ஆண்டு அனுமதிக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து விஷேட பாடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை அனுமதிக் கடிதங்களை வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 23ஆம், 24 ஆம் திகதிகளில் வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி யில் நடைபெறும் எனவும் கல்லூரி பீடாதிபதி கே. பேர்ணாட் தெரிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்டோர் விவரம் வருமாறு:

என். சுஜீபன்- முல்லைத்தீவு, ரி.பபாகரன்- முல்லைத்தீவு, கே. தர்ஜிகா- பலாலி, வி. மயூரா- முல்லைத்தீவு, என். என். திலீபன்-மல்லாவி, ரீ.சாலினி- மாங்குளம், யூ. அருள்பாலினி கிளிநொச்சி, ஜெ.சுஜினோ- முல்லைத்தீவு, எஸ்.சுதர்சினி- கிளிநொச்சி, ஆர். நிலானி- மாங்குளம், ஜெ.எப். சாவெரி- கிளிநொச்சி, என். மதுஜா- வல்வை, என். லாவண்யா- கிளிநொச்சி, எஸ். சுகந்தகுமார் - முல்லைத்தீவு, என். செல்வகுமார் - ஒட்டுசுட்டான், கே. கிருஷ்ணகுமார்- முழங்காவில், ஏ. கார்த்திகா- கிளிநொச்சி, கே. திவ்யா -கிளிநொச்சி, எஸ். விஜித்தா- முல்லைத்தீவு, ஆர்.கவிலதா- கிளிநொச்சி, வி.விஜித்தா- ஒட்டுசுட்டான், எஸ். இந்திரவதன்-யோகபுரம்,பி. நிஷாந்தினி-கிளிநொச்சி,என். ஜெயபிரதன்- முல்லைத்தீவு,எஸ். துஸ்யந்தினி- கிளிநொச்சி, எஸ்.சுரேந்தினி- முல்லைத்தீவு,எம். ஜீன்ஸன்- புதுக்குடியிருப்பு,எஸ். துர்க்கா- மாங்குளம், என்.விஜித்தா- செட்டிக்குளம், எம்.யோகேஸ்வரி- மல்லாவி, பி.யோகராஜன்- முல்லைத்தீவு, பி. கஜானந்தன்- துனுக்காய், ஆர். உதயராஜசிங்கம்- விசுவமடு, ரீ. அமுதனி - பூநகரி,வை.கஜேந்திரதாஸ்- முள்ளியவளை, கே. குணசிங்கம்- பூநகரி, ரீ. தர்சிகன்-கிளிநொச்சி, கே. சுதர்சன்- கிளிநொச்சி,கே. பிரதீபன்- கிளிநொச்சி, ஆர். மயூரன்- கிளிநொச்சி, ஆர். றேணுகா- கிளிநொச்சி, கே. அமல் ராஜ்- விசுவமடு, எஸ்.கோபினி- பரந்தன், ஆர். ஜெராட்- ஒட்டுசுட்டான், என். டிஜேந்தினி- கிளிநொச்சி, பி. சசிகுமார்- முல்லைத்தீவு, எஸ். சர்மிளா- பூநகரி, ஏ. சுரேஷ்- முல்லைத்தீவு, என். விஷ்ணுசாந்தி- பண்டத்தரிப்பு, ஏ.எஸ். மயூரன்- நட்டான்கண்டல், எஸ் துவாரகன்- மல்லாவி, ஏ. பர்மிளா- கிளிநொச்சி, ஆர். பிரியங்கா- கிளிநொச்சி, ரீ.கோகுலநாத்- முல்லைத்தீவு, எஸ். செவ்வேல்- கிளிநொச்சி, கே. காந்தரூபன்- கிளிநொச்சி, எஸ்.பி.ஐ. குமார்- முல்லைத்தீவு, எம். மீரா- கிளிநொச்சி

# முல்லைத்தீவில் மக்கள் குடியமர்ந்த பகுதிகளில் சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.19

உலக வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு- கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் யுத்தத்தினால் அழிவடைந்த, சேதமடைந்த வீடுகள் மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இந்த வீடுகளை மீள் நிர்மாணம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய மூன்று பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 39 கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள வீடுகளே இவ்வாறு மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பகுதிகளில் ஏற்கனவே மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். (50-224)

## முன்பள்ளிச் சிறார்களின் மனனத்திறன் விழா

சித்தன்கேணி வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்பள்ளிச் சிறார்களின் மனனத்திறன், பேச்சுத்திறன் விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவி செல்வி வாமதேவன் பூரணி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்தி சிகாமணி கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ம.ஞானவேல்ராஜாவும், சித்த ஆயுள்வேத வைத்தியர் திருமதி ச.நிர்மலாதேவியும், மக்கள் வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் ந.துரைராஜாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (50-201-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



அமரர் இரத்தினம் ஜெயரெட்ணசிங்கம்
எமது பாடசாலையில் கல்வி கற்பித்து ஓய்வுபெற்ற ஆசிரியர் இ.ஜெயரெட்ணசிங்கம் அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/சென்.ஜேம்ஸ் வித்தியாலயம்.

4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(91556)

## இடம் பெயர்ந்த பல்கலை மாணவருக்கு 'கியூடெக்' மதிய உணவு

வண்ணை - டிசெ.19

வன்னியில் இருந்து வந்து யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 251, மாணவர்களுக்கும், மதிய உணவு வழங்க 'கரித்தாஸ் கியூடெக்' நிறுவனம் மாதாந் தம் 3 லட்சம் ரூபாவைச் செலவிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை கோப்பாய், கல்வியற் கல்லூரியில் தங்கிப் படிக்கும் 14 மாணவர்களுக்கும் மாதாந்தம் 20 ஆயிரம் ரூபா செலவில் மதிய உணவுக்கான உலர் உணவுப் பொருள்களை வழங்கி வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ - 160)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக புனர்வாழ்வுக்கிளையின் சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளரும் எமது அலுவலகத்தில் ஜே/367 கரவெட்டி மத்தி கிராம அலுவலராகக் கடமையாற்றுபவருமாகிய பா.லலித் அவர்களின் அன்புத் தந்தை
சின்னப்பிரகாசம் பாலச்சந்திரன்
அவர்களின் மரணச் செய்தியைக் கேட்டு நாம் ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும், உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்.
பிரதேச செயலகம், கரவெட்டி.

(சி/563344)

## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்

### கூறுவிலை கோரல் திகதி நீடித்தல்

01.12.2009ஆம் திகதிய உதயன், வலம்புரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் எமது கொத்தணியினால் விளம்பரப்படுத்தப்பட்ட வடிசாலைப் பொறித் தொகுதிகள் அதனோடு இணைந்த இயந்திர உபகரணங்கள் திருத்தம் சேவிஸ் செய்வதற்கும், மாற்ற வேண்டிய பொருள்கள் மாற்றுவதற்கும், மாபிள்த் தொட்டி புனரமைப்பதற்கும் கூறுவிலை கோரல் திகதி 28.12.2009ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அன்புடன் அறியத்தருகின்றேன்.

பொதுமுகாமையாளர்,
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்.

(சி/563342)

## யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

### BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

**Post Graduate Diploma in Management (Pre.MBA)**
(MBA final (Topup) in UK / London) 【காலம் 9 மாதங்கள்】
To Whom :பட்டதாரிகள், (BA,Bsc) வியாபார பட்டதாரிகள் அந்தஸ்து அற்றவர்கள் உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA)

**Diploma in English** 100 % வெற்றி
100 % பயிற்சி **Advanced Diploma in English**
【காலம் 6 மாதங்கள்】
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த / தனிப்பட்ட குழு உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட (Special) முறையில் வகுப்புகள் ஒழுங்கு படுத்தித் தரப்படும். அத்துடன் நல்ல கட்டணக் கழிவும் தரப்படும்.

**Foundation Diploma In Hospitality Management** (Topup degree in UK / London)
【காலம் 6 மாதங்கள்】 Hotel Management
இவ் 6 மாதக் கற்கை நெறியினை முடித்தவர்கள் அவர்களின் 2 வருடப் (Degree) பட்டப்படிப்பை லண்டனில் (London - UK) கற்கமுடியும்.
கல்வித்தகைமை: G.C.E (O/L) பயின்றிருந்தால் போதுமானது. மேலதிகவிபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

**Access Programming**
(Foundation Degree Programme )
【காலம் 6 மாதங்கள்】
O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று; Bsc, BBA,MBA பட்டதாரி ஆக முடியும்.

அதிக வருவாய் நல்ல வேலைவாய்ப்பு
**Foundation Diploma In Nursing**
(Health & Social Care)
Topup degree In UK / London
【காலம் 6 மாதங்கள்】
கல்வித் தகைமை (G.C.E (O/L) பயின்றிருத்தல் போதுமானது மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

மாணவர்களுக்கு 100 % Student Visa பெற்றுக்கொள்வதற்கு அனுபவம் வாய்ந்தஎமது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் அளிக்கப்படும். விபரங்களை அறியவும், அறிவுரைகளுக்கும் காலதாமதம் செய்யாது இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

**Foundation Diploma In Management** 【காலம் 6 மாதங்கள்】
(For BBA Degree Programme) Minimum Requirement : G.C.E. (O/L)
இப்பாட நெறியின் 2 வருடப் பட்டப்படிப்பை நீங்கள் லண்டனில் பூர்த்திசெய்து BBA பட்டதாரி ஆகலாம்.
தனிப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் Management துறையிலே தங்களின் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் இப்பாட நெறியில் இணையலாம்.

Second Floor,
No.15, Sirampiyadi Lane
(Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்)
(கொசி Hotel மேலே)
Tel :021 2224550 E-mail: info@bchs.lk
HotLines: 0773501499
0777222422/ 0714299935

## நீங்காத நினைவுகள்

19ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு



மலர்வு 05.04.1907
உதிர்வு 17.05.1991



மலர்வு 03.07.1924
உதிர்வு 23.12.2006

அமரர் கந்தசாமி ஞானசுந்தரம் திருமதி ஞானசுந்தரம் மகேஸ்வரி
திதி: திருதியை (19.12.2009)

எங்கள் உயர்வுக்கு வழிகாட்டிய அன்புத் தெய்வங்களே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி ஸ்ரீபாலா பிரேமரதி
461, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(91549)



## நடமாடும் வீட்டில் படமாகிப் போன எம் இதய தெய்வத்தின் 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட
### திருமதி தெட்சணாமூர்த்தி ஜெகதாம்பிகை
(ஜெகதா ஹாட்வெயர்ஸ், கே.கே.எஸ்.வீதி, யாழ்.
ஜெகதா மொபைல் உலகம், ஆஸ்பத்திரி வீதி யாழ்.)

திதி: வளர்பிறை திருதியை (19.12.2009)

மண்ணில் 23 . 02 . 1951

விண்ணில் 02 . 01 . 2006

நான்கு வருடங்கள் எமை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்ட ஆண்டவனே!
மீளாத்துயில் கொண்ட எம் அம்மாவை எம்மிடம் தந்துவிடு
விழித்திரையில் உன் விம்பம் ஒளிந்திருக்குதம்மா!
கண்ணீரின் நடுவினிலே உன் உருவம் ஆடுதம்மா!
சாவு என்ற சதிகாரன் விதித்த வலையினிலே- எங்கள்
சந்தோஷம் அத்தனையும் சமாதி ஆனது- ஜெகதாவே!
வறுமைதனை தோள் சுமந்து நெஞ்சமதில் எமைச்சுமந்து
துன்பம் சிறிதுமின்றி சீராட்டி வளர்த்த அம்மாவே!
நாமுயரும் வேளையிலே எமை விட்டு எங்கு சென்றீர் அம்மாவே!
கருணை பொங்கும் உந்தன் முகம் காண மனம் ஏங்குதம்மா!
மரணம் ஏது உந்தனுக்கு எங்களுடன் எப்போதும் வாழ்கின்ற ஜெகதாவே!
பிரிந்த உங்கள் ஆத்மா இறைவனின் பாதாரவிந்தங்களில் சீர்பெற்று வாழ்க!

145/3, பிரப்பங்குளம் றோட்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 8169,
021 222 6379

நித்தம் நின் நினைப்பில்:
நா.தெட்சணாமூர்த்தி,
தெ.நிஷாகரன், நி.மலர்மதி,
நி.ஜனனி,
தெ.நிஷாந்தன், நி.ஸ்ரீமகள்.

(91554)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாளத் தலைநகர் காத்மாண்டுவை கைப்பற்றியது மாவோவாத இயக்கம்!

காத்மாண்டு, டிச.19

நேபாளத்தின் தலைநகரான காத்மாண்டுவை, ஏறத்தாழ 5 ஆயிரம் மாவோவாதிகள் புதன்கிழமை மாலை அதிரடியாகப் புகுந்து கைப்பற்றினார்கள். அத்துடன் காத்மாண்டு பகுதியையும் சுயாட்சிப் பகுதியாகப் பிரகடனம் செய்தார்கள்.

நேபாளத்தில் மன்னராட்சி ஒழிக்கப்பட்ட பின்னர் இப்போது 22 கட்சிகள் கொண்ட கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. இதற்கு எதிராக முன்னாள் பிரதமர் பிரசண்டா தலைமையிலான மாவோவாதிகள் போராடி வருகிறார்கள்.

இவர்கள் நாட்டில் பல பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து நிழல் அரசு ஏற்படுத்தியுள்ளனர். 11 மாவட்டங்களில் அவர்களுடைய நிழல் அரசு தற்போது நடைபெறுகிறது.

இவர்கள் நேபாளத்திலுள்ள 13 பிராந்தியங்களையும் சுயாட்சி பகுதியாக அனுமதிக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகி றார்கள். இதேபோல தலைநகரம் காத்மண்டு பகுதியையும் சுயாட்சி பிராந்தியமாக அறிவிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தி வந்தார்கள்.

இந்நிலையில், 5 ஆயிரம் மாவோவாதிகள் புதன்கிழமை மாலை அதிரடியாகக் காத்மாண்டு நகரத்துக்குள் புகுந்து அதைக் கைப்பற்றினார்கள். பின்னர் காத்மண்டுப் பிராந்தியத்தை சுயாட்சி பகுதி எனப் பிரகடனப் படுத்தினார்கள்.

மாவோவாதிகளை அங்கிருந்து வெளியேறும்படி அரசு அறிவித்துள்ளது. ஆனால், அதை இவர்கள் ஏற்கவில்லை. எனவே, மாவோவாதிகளுக்கும் பொலிஸாருக்குமிடையே மோதல் மூளக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நேபாளத்தில் பதற்ற நிலை நிலவுகிறது.

## மாவோவாதிகளின் தன்னாட்சி மாநில அறிவிப்புக்கு மாதேசிகள் எதிர்ப்பு

காத்மாண்டு, டிச. 19

நேபாளத்தில் மாவோயிஸ்டுகள் வெளியிட்டுள்ள தன்னாட்சி மாநிலங்கள் அறிவிப்புக்கு மாதேசி கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. நேபாளத்தில் ஆளும் 22 கட்சிகள் கூட்டணியில் மாதேசி கட்சிகளும் இடம் பெற்றுள்ளன.

10 பகுதிகளை முதன்முறையாக தன்னாட்சி பெற்ற மாநிலங்களாக மாவோயிஸ்டுகள் அறிவித்துள்ளனர். மேலும் 3 தன்னாட்சி மாநிலங்களை விரைவில் அறிவிக் கவுள்ளனர்.

இதுகுறித்து விவாதிக்க மாதேசி மக்கள் உரிமை அமைப்பு, மாதேசி ஜனநாயகக் கட்சி, சத்பவன் கட்சி ஆகியவற்றின் கட்சித் தலைவர்களின் அவசரக்கூட்டம் காத்மாண்டுவில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் மாதேசி கட்சித் தலைவர்கள் பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசினர். அப்போது அவர்கள், ''மாவோயிஸ்டுகளின் தன்னாட்சி மாநில அறிவிப்பு அரசியல் சாசன சட்டத்துக்கு எதிரானது. அவர்கள் நிலங்களை ஆக்கிரமித்து வருவதை ஏற்கமுடியாது. இதுபோன்ற நடவடிக்கைகளை மாவோயிஸ்டுகள் உடனடியாகக் கைவிடவேண்டும்'' என வலியுறுத் தினர்.

மாதேசிகள் நேபாளத்தின பூர்வ குடி மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மியான்மரில் குண்டுத் தாக்குதல்; ஏழு பேர் மரணம்; 11 பேர் காயம்.

யங்கூன், டிசெ. 19

மியான்மரிலுள்ள கரென் நகரில் வியாழக்கிழமை இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களில் ஏழு பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர். காயமடைந்தோர் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இவர்களில் ஏழு பேர் ஆபத்தான கட்டத்தில் இருந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

காயின் மாநிலத்திலுள்ள பாபோன் நகரில் புதன்கிழமை இரவு புத்தாண்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மறுதினமான வியாழக்கிழமை இந்நகருக்கருகிலுள்ள கரென் நகரில் பல்வேறு இடங்களில் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

கரென் நகரிலுள்ள சந்தைக் கட்டடங்கள், புத்த கோவில்கள், பொதுவிடங்கள் ஆகியவற்றில் இக்குண்டுகள் வெடித்துள்ளன. இக்குண்டுவெடிப்புகள் சம்பவங்களுக்கு கே.என்.யூ.கெரில்லா தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளார்கள் என்றும் அதிகாரிகள் கூறினார்கள்.

# ஏமனில் அதிரடித் தாக்குதல்; 37 தீவிரவாதிகள் உயிரிழப்பு!

ஏமனின் தலைநகரான சனாவிலும், அப்யான் மாகாணத்திலும் பாதுகாப்புப் படையினர் நடத்திய அதிரடித் தாக்குதலில் 34 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படும் 17 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அல்-குவைதா தீவிரவாத நடவடிக்கைகள் ஏமனில் பெருகிவருகின்றன. இவற்றை சமாளிப்பது குறித்து அரசு தீவிரமாக ஆராய்ந்து வந்தது. அமெரிக்காவுடன் இணைந்து இந்த முயற்சிகளில் ஈடுபடவும் ஏமன் தயா ராக இருந்தது.

இதற்கிடையே, ஏமனில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கூட அல்-குவைதா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். பாதுகாப்புத்துறையினரின் இலக்குகள் மீது இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்நிலையில், சனாவிலும், அப்யான் பகுதியிலும் பாதுகாப்புப் படையினர் வியாழக்கிழமை மேற்கொண்ட தேடுதல் வேட்டையின்போது 40 இற்கும் மேற்பட்டோரைக் கொண்ட தீவிரவாதக் கும்பல் சுற்றிவளைக்கப்பட்டது.

இதையடுத்து, இரு தரப்பினருக்குமிடையே மூண்ட சண்டையில் 34 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என ஏமன் பாதுகாப்பு அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் அல்-குவைதா தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட கும்பல் பள்ளிக்கூடங்கள் உள்ளிட்ட இடங்களில் தற்கொலைத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தது என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

## ஜனாதிபதி ஒபாமாவைவிட மக்கள் மத்தியில் ஹிலாரிக்கு அதிக செல்வாக்காம்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவைவிட வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்ரனுக்கு மக்கள் மத்தியில் அமோக ஆதரவு இருப்பது கருத்துக்கணிப்பில் தெரிய வந் துள்ளது.

அமெரிக்க அரசில் முக்கிய பங்கு வகிப்பவர்களின் செல்வாக்கு குறித்து, கிளாரஸ் ரிசர்ச் ஆய்வுக் குழுமம் தனது இணையத்தளத்தின் மூலம் கருத்துக்கணிப்பு நடத்தியது. 800 பேர் தங்களது வாக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

வெளியுறவு அமைச்சராக உள்ள ஹிலாரி கிளின்ரனுக்கு அமோக ஆதரவு கிடைத்துள்ளது. ஆய்வில் பங்கேற்ற 75 சதவீதம் பேர் இவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். 21 சதவீதம் பேர் மட்டுமே எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இவருக்கு அடுத்தபடியாக பாதுகாப்பு அமைச்சர் ரொபர்ட் கேட்ஸுக்கு 69 சதவீத ஆதரவு கிடைத்துள்ளது. அதே சமயம், ஜனாதிபதியாக உள்ள ஒபாமாவை ஆதரித்து 51 சதவீதம் பேரும் எதிர்ப்புத் தெரிவித்து 45 சதவீதம் பேரும் வாக்களித்துள்ளனர்.

## விளக்கமறியலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவின் மீதே பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையிலான உயர்நீதிமன்றம் இத்தகைய உத்தரவைப் பிறப்பித்தது.

இது தொடர்பாகக் கூறப்படுபவை வருமாறு:-

மேற்படி மோகனரூபன் 2007 செப்ரெம்பர் 14 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் தடுத்துவைக்கப்பட்டார்.

அவரது கைதும், தடுத்து வைத்தலும் சட்டவிரோதமானவை எனத் தெரிவித்து, சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராஜா அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

அந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் திருப்புமுனையான சட்ட உத்தரவு ஒன்றை வழங்கியது.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்ட சகல கைதிகளும் 90 நாள்களுக்குள் விளக்கமறியலுக்கு - நீதிமன்றக் காவலுக்கு - மாற்றப்படவேண்டும் என்ற இடைக்கால உத்தரவை நீதியரசர்கள் ஷிராணி பண்டாரநாயக்கா, ராஜா பெர்னாண்டோ, சலீம் மர்சூக் ஆகியோரைக் கொண்ட ஆயம் 2008 செப்ரெம்பர் 27 ஆம் திகதி வழங்கியது.

இதனை அடுத்து, தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவிலிருந்து தியாகராஜா மோகனரூபன், நீதிமன்றப் பணிப்பின் பேரில் சிறைச்சாலைக்கு - விளக்கமறியலுக்கு - மாற்றப்பட்டார்.

**ஜனாதிபதியின் ஒப்பம் பெற்று புதிய தடுப்புக் காவல் பத்திரம்**

இந்நிலையில், பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் 9(1) பிரிவின் கீழ், பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியின் ஒப்பம் பெற்று புதிய தடுப்புக்காவல் பத்திரம் ஒன்றைக் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பித்து கடந்த ஒக்ரோபர் 8 ஆம் திகதி மோகனரூபனை மீண்டும் தமது காவலுக்கு மாற்றும் உத்தரவைப் பெற்றுக்கொண்டனர்.

இத்தகைய நடவடிக்கை சட்ட விரோதமானது எனத் தெரிவித்து மீண்டும் உயர்நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராஜா அடிப்படை உரிமை மீறல் தொடர்பாகப் புதிய மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா ஆஜராகி வாதிட்டார்.

பிரதம நீதியரசர் அசோக டி சில்வா, நீதியரசர் நிமால் காமினி அமரதுங்க, சலீம் மர்சூக் ஆகியோர் முன்னிலையில் கடந்த புத னன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**தமிழ்க் கைதிகள் விவகாரத்தில் திருப்புமுனை**

ஒருதடவை நீதிமன்ற உத்தரவில் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டவரை மீண்டும் தடுப்புக்காவல் உத்தரவுப் பத்திரம் பிறப்பித்து கைது செய்து, தடுப்புக் காவலுக்கு மாற்றுவது சட்ட விரோதமானது என வாதிட்டார் பாயிஸ் முஸ்தபா.

அரச தரப்பில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டத்தரணி ரியாஸ் ஹம்ஸா புதிய தடுப்புக் காவல் உத்தரவுப்பத்திரம் வேறு புதிய விசாரணை தொடர்பானது என்றார்.

மோகனரூபனுக்கு எதிராக மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுவந்த ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, உயர்நீதிமன்றத்தில் இடைக்கால உத்தரவு நடைமுறையில் இருக்கும்போது திரும்பவும் அவரைப் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுக்கு மாற்றியமை நீதிமன்றத்தை அவமதிப்பதாகும் என்றார். நீதிமன்றக் காவலில் உள்ள ஒருவரை தடுப்புக் காவல் உத்தரவுப் பத்திரத்தின் பேரில் மீண்டும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசெல்வது கண்டிக்கப்படவேண்டிய நடவடிக்கை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த வாதத்தை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம் உடனடியாக மோனரூபனை நீதிவான் முன் பாரப்படுத்தித் திரும்பவும் சிறைச்சாலைக்கு மாற்றும்படி உத்தரவிட்டது.

அவர் தொடர்பாக விசாரணை ஏதும் இருப்பின் நீதிவானின் அனுமதி பெற்று அவரை சிறைச்சாலைக்குச் சென்று விசாரிக்கலாம் என்றனர் நீதியரசர்கள்.

இந்த உத்தரவும் தமிழ்க் கைதிகள் விவகாரத்தில் மற்றொரு திருப்புமுனை எனக் கூறப்படுகிறது. (அ-சி)

## அகதிகள் சகலரும் சொந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்தல், பத்திரிகைப் பேரவைச் சட்டத்தை நீக்குதல், அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துதல் என்பன உட்படப் பல விடயங்கள் தொடர்பில் தமது உறுதிமொழியை அவர் வழங்கினார்.

அவர் அந்த உறுதிமொழியில் மேலும் கூறியவை வருமாறு:-

01. இன்றைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் ஜனநாயகம் சரியாகப் பேணப்படாத நிலையே காணப்படுகின்றது. எனவே, முதலாவதாக நாடாளுமன்ற ஜனநாயகத்தை வலுவடையச் செய்வதற்கு அரசமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் அடிப்படையில்-

* சுயாதீன தேர்தல் ஆணைக்குழு
* சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு
* சுயாதீன நீதிமன்ற ஆணைக்குழு
* சுயாதீன அரச சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றை உருவாக்குவேன்.

02. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கியதாக, கட்சி சாராத அரசு ஒன்றை உருவாக்கிப் பொதுத் தேர்தலை ஜனநாயக ரீதியாகவும், நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

03. ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு மாத காலத்துக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வேன். அமைச்சரவையின் அனுமதியைப் பெற்று 6 மாத காலத்துக்குள் நாடாளுமன்ற சட்டமூலத்தினூடாக அதனைநீக்கி மக்களின் எதிர்பார்ப்பினை உறுதிப்படுத்துவேன்.

04. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்த பின்னர், மக்களுக்குப் பொறுப்புடன் கடமையாற்றக்கூடிய ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தோடு இணைந்து செயற்படுவேன். எனது தாய்நாட்டுக்கும் மக்களுக்கும் என்னால் நிறைவேற்றக் கூடிய சேவைகளை முழுமையான அர்ப்பணிப்புடன் ஆற்றுவேன்.

**இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம்.....**

05. யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, சகோதர தமிழ் மக்கள் தற்போது முகாம்களில் சிறைப்படுத்தப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொடுத்து, மீள்குடியேற்றம் செய்து, தொடர்ந்தும் அவர்கள் நிம்மதியாக வாழ்வதற்கான சகல வழிகளையும் முன்னுரிமையுடன் செயற்படுத்துவேன். அதேபோன்று, பயங்கரவாத சந்தேக நபர்களாகக் கருதப்பட்டு, கைது செய்யப்பட்ட அனைவருக்கும் எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்தி, அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கும் குற்றவாளிகள் அல்லாதோரை விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன்.

06. முப்பது வருட யுத்த முடிவில் இடம்பெயர்ந்து அல்லது தாங்களாகவே தமது வதிவிடங்களைக் கைவிட்டுச் செல்லவேண்டிய சூழல் ஏற்பட்டவர்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களின் விருப்பத்திற்கிணங்க, அவர்களைக் குடியமர்த்த நடவடிக்கை எடுப்பேன்.

07. ஜனநாயக நாடொன்றில் அவசியமாகவுள்ள தகவல் மற்றும் கருத்துச் சுதந்திர உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடைமுறைகளை உருவாக்குவேன். பத்திரிகைப் பேரவைச் சட்ட மூலத்தை ஒழித்து, நாட்டில் சுதந்திரமானதும் நீதியானதுமான ஊடக கலாசாரத்தைக் கட்டியெழுப்பப் பாடுபடுவேன்.

08. ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், நீதியானதும் நியாயமானதுமான தேர்தலைக் கூடிய விரைவில் நடத்துவதற்கு ஆவன செய்வேன். தேர்தல் காலத்தில் அரச மற்றும் தனியார் ஊடகங்கள் சுயாதீனமாக இயங்குவதற்கு அத்தியாவசியமான நடவடிக்கைகளை எடுப்பேன்.

09. நாட்டுமக்கள் அனைவரும் தமது உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக எடுக்கும் ஜனநாயக செயற்பாடுகளுக்குத் தடையாகவுள்ளவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

10. கடந்த காலங்களிலிருந்து ஊழல், லஞ்சம் போன்றவை நாட்டை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றன. எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தடையாகவுள்ள பிரதான காரணிகள் இவை என்ற வகையில், அவற்றை முற்றுமுழுதாக ஒழிக்கவும் சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுப்பேன்.

இங்கே குறிப்பிட்டுள்ள அனைத்தையும் நிறைவேற்றுவது எனது பிரதான கடமையாகும். - என்றார் பொன்சேகா. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா.ஜ.கவின் புதிய தலைவர் இன்று தேர்வு; திங்களன்று பதவி விலகுகிறார் அத்வானி

புதுடில்லி, டிச.19

பா.ஜ.கவின் தலைவர் பதவியை ராஜ்நாத் சிங் இன்று ராஜினாமா செய்வதைத் தொடர்ந்து புதிய தலைவராக நிதின் கட்காரி தேர்வு செய்யப்படுகிறார். மேலும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அத்வானி அடுத்த வாரம் ராஜினாமா செய்கிறார்.

பா.ஜ.கவில் முக்கிய பொறுப்புகளில் இளைய தலைமுறையினரை தேர்வு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில், கட்சியின் புதிய தலைவரை முறைப்படி தேர்வு செய்வதற்காக பா.ஜ.க. நிர்வாகிகளின் கூட்டம் இன்று (19 ஆம் திகதி) டில்லியில் நடைபெறுகிறது. பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் நடைபெறும் அந்தக் கூட்டத்தில் மூத்த தலைவர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்கின்றனர். அதைத் தொடர்ந்து மாலை 3 மணியளவில் பா.ஜ.க. நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறும்.

அந்தக் கூட்டத்தில், புதிய தலைவரை தேர்வு செய்வதற்கு வசதியாக தன்னுடைய ராஜினாமாக் கடிதத்தை ராஜ்நாத் சிங் அளிக்கிறார். அதன் தொடர்ச்சியாக மராட்டிய மாநில பா.ஜ.க. தலைவராக இருக்கும் நிதின் கட்காரி, அகில இந்திய தலைவராகத் தேர்வு செய்யப்பட இருக்கிறார். இந்தத் தகவலை, பா.ஜ.க. தலைமை அலுவலக நிர்வாகி சியாம் தெரிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, தலைவர் பதவியை தொடர்ந்து பா.ஜ.கட்சியின் நாடாளுமன்ற பதவிகளிலும் மாற்றம் செய்யப்பட உள்ளது. எனவே, எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து அத்வானி ராஜினாமா செய்கிறார். நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் கடைசி நாளான 21 ஆம் திகதி (திங்கட்கிழமை) பா.ஜ.க. எம்.பி.க்கள் கூட்டம் நடைபெறுகிறது.

அந்தக் கூட்டத்தில், தன்னுடைய ராஜினாமா அறிவிப்பை அத்வானி வெளியிட இருக்கிறார் என கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

# 2 மீனவரின் சடலங்கள் கரை ஒதுங்கின!

அறந்தாங்கி, டிச. 19

கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றபோது புயலில் சிக்கி படகு கவிழ்ந்து பலியான 2 மீனவர்களின் சடலங்கள் கரை ஒதுங்கின. அவர்களோடு சென்ற மேலும் ஒருவரின் கதி என்ன என்று தெரியவில்லை.

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் மீன்பிடி தளத்தில் இருந்து அந்தோணி (வயது - 19), வர்கீஸ் (வயது - 32), உத்தமனின் மகன் இளங்கோ (வயது - 24) ஆகிய 3 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றிருந்தனர்.

இலங்கை அருகே மையம் கொண்டிருந்த புயல் சின்னம் காரணமாக கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பில், அந்த 3 மீனவர்களும் சென்ற படகு சிக்கி கடலில் மூழ்கி, அவர்கள் 2 பேரும் இறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அந்தோணியின் கதி என்ன என்று தெரியவில்லை எனக் கூறப்படுகிறது.

# வந்தவாசி, திருச்செந்தூரில் இன்று கடும் பாதுகாப்புடன் வாக்குப்பதிவு

## மத்திய பொலிஸ் படை குவிப்பு

வந்தவாசி, டிசெ.19

வந்தவாசி, திருச்செந்தூர் தொகுதிகளில் பலத்த பாதுகாப்புடனும், வீடியோ பதிவுடனும் இன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

கடந்த 20 நாள்களாக அங்கு நடந்து வந்த அனல் பறக்கும் பிரசாரம், நேற்றுமுன்தினம் மாலை 5 மணியுடன் ஓய்ந்தது. இரு தொகுதிகளிலும் பாதுகாப்புப் பணிகளுக்காக, மத்திய பொலிஸ் படை மற்றும் துணை இராணுவப் படை குவிக்கப்பட்டுள்ளன.

இந்த இரு தொகுதிகளின் இடைத்தேர்தல் பிரசாரத்தின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் அரசியல் கட்சியினர் தீவிர வாக்கு வேட்டையில் ஈடுபட்டனர். தி.மு.க., வேட்பாளர் கமலக்கண்ணனுக்கு ஆதரவாக, துணை முதல்வர் ஸ்டாலின் சூறாவளிப் பிரசாரம் மேற்கொண்டார்.

அ.தி.மு.க. வேட்பாளர் முனுசாமிக்கு ஆதரவாக வடசென்னை மாவட்ட அ.தி.மு.க. செயலர் சேகர்பாபு எம்.எல்.ஏ. வாக்குச் சேகரித்தார். மாதிரி வாக்குப்பதிவு இயந்திரத்தை எடுத்துக் கொண்டு தெருத் தெருவாகச் சென்று வாக்குப் போடுவது எப்படி என்று கட்சியினர் செயல் விளக்கம் நடத்திக் காட்டினர்.

திருச்செந்தூரில் தி.மு.க. வேட்பாளர் அனிதா ராதா கிருஷ்ணனை ஆதரித்து மத்திய அமைச்சர் நெப்போலியன் வாக்கு வேட்டையில் ஈடுபட்டார். அ.தி.மு.க., வேட்பாளர் அம்மன் நாராயணனை ஆதரித்து, இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாநிலச் செயலர் வெங்கடேஷ் பிரசாரம் செய்தார்.

இரு தொகுதிகளிலும் பாதுகாப்புப் பணிகளுக்காக, மத்திய பொலிஸ் படை மற்றும் துணை இராணுவப் படை குவிக்கப்பட்டுள்ளன. வெளி மாவட்டங்களைச் சேர்ந்த அரசியல் கட்சியினர் நேற்றுமுன்தினம் மாலையுடன் இரண்டு தொகுதிகளையும் விட்டு வெளியேற வேண்டும் என்றும், தேர்தல் நடைபெறும் அன்று கடைகளை மூட வேண்டும் என்றும் தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

# ஈழ அகதிகளுக்கு தமிழகத்தில் தொழில் முனைவோர் பயிற்சி

ஒசூர், டிச. 19

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சிறப்பு முகாமில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு இலவச தொழில் முனைவோர் பயிற்சியை மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தொடக்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 4 லட்சத்து 21 ஆயிரம் ரூபா நிதியில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கெலவரப்பள்ளி அணை முகாமில் 60 மகளிர், பம்பாறு அணை முகாமில் 55 மகளிர், போச்சம்பள்ளி முகாமில் 30 மகளிர் என 145 மகளிருக்கு இத்திட்டத்தில் இலவச தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இதில் தையல் பயிற்சி, டிசைனிங் உள்ளிட்ட பயிற்சிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல் 45 நாள்களுக்கு அளிக்கப்படும்.

# தெலுங்கானா சிக்கலுக்குத் தீர்வு காண மத்திய அரசுதான் வழிகாட்ட வேண்டும்

## முதல்வர் ரோசய்யா கோரிக்கை

ஐதராபாத், டிசெ.19

தெலுங்கானா விவகாரத்தால் ஆந்திராவில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண மத்திய அரசு வழிகாட்ட வேண்டும் - என்று ஆந்திர முதல்வர் ரோசய்யா கோரியுள்ளார்.

இதுகுறித்து ஐதராபாத்தில் நேற்றுமுன்தினம் அவர் அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு -

தெலுங்கானா மாநிலம் அமைப்பது தொடர்பான பிரச்சினையில் ஆந்திராவில் பதற்றம் நிலவுகிறது.

இது ஆந்திராவுக்கும் மட்டுமே உரிய பிரச்சினை அல்ல. மத்திய அரசுக்கும் இது பிரச்சினைதான். இதற்குத் தீர்வுகாண எங்களுக்கு மத்திய அரசு வழிகாட்ட வேண்டும். மாநிலத்தில் சகஜ நிலை திரும்ப ஊடகங்கள் உட்பட எல்லாத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். தெலுங்கானா விவகாரம் உணர்வுபூர்வமான பிரச்சினை. அதனால், பதற்றம் அதிகமாக உள்ளது. இதற்குத் தீர்வு காண சிறிது காலம் எடுக்கும். அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டி முடிவெடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால், இந்தப் பிரச்சினையில் கட்சிகளிடம் ஒருமித்த கருத்து ஏற்படுவது கடினம் என்பதால் இது சாத்தியமல்ல.

போராட்டங்கள் காரணமாக கடந்த 20 நாள்களாக மாநிலத்தின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். அரசுக்கும் வருமானம் இழப்பு ஏற்படுகிறது.

இயல்பு வாழ்க்கை திரும்ப அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் ஒத்துழைப்புத் தர வேண்டும். எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா பற்றி முடிவு செய்ய வேண்டியது சபாநாயகர்தான் - என்றார்.

# 108 வருடங்களுக்குப் பின் கங்கண சூரியகிரகணம் வட இலங்கையிலும் தமிழகத்திலும் காணலாம்

## ஜனவரி 15 ஆம் திகதி தோன்றும்

சென்னை, டிச. 19

108 வருடங்களுக்குப் பின்னர் கங்கண சூரிய கிரகணம் தமிழ்நாட்டில் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி தோன்றும்.

சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே பூமி வரும்போது சந்திரன் மறைக்கப்படுகிறது. இதுவே சந்திர கிரகணம். அதுபோல சூரியனுக்கும் பூமிக்கும் இடையே சந்திரன் வருவது சூரியன் மறைக்கப்படுகிறது. இதுவே சூரியகிரகணம். உலகில் வருடத்திற்கு 3 முறை சந்திரகிரகணமும், 2 முதல் 5 வரை சூரிய கிரகணமும் ஏற்படுகிறது.

சூரியனை சந்திரன் நேருக்குநேர் மறைக்கும்போது அதிகபட்சமாக சூரியனை மறைத்தாலும் சூரியன் ஒரு வளையம்போல தெரியும். இதுவே கங்கண சூரியகிரகணம். அதுவும் உலகில் இது எல்லா இடத்திலும் கங்கண சூரியகிரகணமாக தெரியாது. கங்கண சூரியகிரகணம் ஒரு இடத்தில் தெரிந்தால் மீண்டும் அதே இடத்தில் தெரிய 108 ஆண்டுகள் ஆகும். அதுபோல 108 ஆண்டுகளுக்குப் பிறகு கங்கண சூரிய கிரகணம் தமிழ்நாட்டில் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி பகல் 11 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை தெரியும்.

இதற்கு முந்தைய கங்கண சூரிய கிரகணம் தமிழ்நாட்டில் 1901 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்டுள்ளது. இனி அடுத்த கங்கண சூரிய கிரகணம் 2010 ஜனவரி மாதம் வரவுள்ளது.

இந்தச் சூரிய கிரகணத்தை தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களிலும், கேரளாவின் தெற்கு பகுதிகளிலும் நன்றாகத் தெரியும்.

சென்னையில் 82 சதவீத சூரியன் மறைக்கப்படுவதை காணலாம். மத்திய ஆபிரிக்கா, மாலைதீவு, வடக்கு இலங்கை, பங்காளதேஷின் சில பகுதிகள், மியான்மர், சீனா ஆகிய நாடுகளில் நன்றாகத் தெரியும்.

கிரகணத்தை வெறும் கண்ணால் பார்க்கக்கூடாது. இதற்காக விற்கப்படும் கண்ணாடிகளை வாங்கி பார்க்கலாம். வெல்டிங் செய்யும்போது பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படும் கண்ணாடி மூலம் கிரகணத்தை பார்க்கலாம்.

# வார்ட் புயலால் ஒரு லட்சம் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை

வங்கக் கடலில் உருவான வார்ட் புயல், ஆந்திரா அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக நீடிக்கிறது. இதனால், டெல்டா மற்றும் கடலோர மாவட்டங்களில் 4 ஆவது நாளாக கனமழை பெய்கிறது.

மழை காரணமாக, நாகை மாவட்டத்தில் 25,000 ஏக்கர் சம்பா பயிர்களும், திருவாரூர் மாவட்டத்தில் அறுவடைக்குத் தயாராக இருந்த 31,000 ஏக்கர் சம்பா பயிர்களும் மழை நீரில் மூழ்கியுள்ளன.

கடல் சீற்றம் காரணமாக நாகை, திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை, காரைக்கால் மாவட்டங்களில் 8ஆவது நாளாக ஒரு லட்சத்து 25,000 மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. இதனால் மீன்பிடித் தொழில் முடங்கியுள்ளது. நாகை மாவட்டத்தில் மட்டும் தினமும் ரூபா ஒரு கோடி மீன் வர்த்தகம் பாதித்துள்ளது.


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 13.03.1932

மறைவு 19.11.2009

வேலுப்பிள்ளை சிதம்பரபிள்ளை

கடந்த 19.11.2009 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (19.12.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தியறிந்து நேரடியாகவும் தபால், தந்தி, தொலைபேசி ஊடாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர்வளையம் சாற்றியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பழம் வீதி,
ஆறுகால்மடம்.

மோகன் ([illegible])
[illegible]

(91559)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு பிரதேச ரீதியில் ஐவர் கொண்ட குழுக்கள்

## சமுதாய மருத்துவத்துறை கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ.19

சமூக நிறுவனங்களின் உதவியுடன் பிரதேச மட்டத்தில் ஐவர் கொண்ட குழுக்களை அமைத்து அவற்றின் ஊடாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்று முடிவுசெய்யப்பட்டுள்ளது.

டெங்குநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான பரந்த அளவிலான செயற்றிட்டத்தை முன்னெடுப்பது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட சமுதாய மருத்துவத் துறையினர் ஏற்பாடுசெய்த கலந்துரையாடலில் இந்த முடிவுஎடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் பல தரப்பட்டவர்களும் கலந்துகொண்டனர்.

அங்கு எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு -

*டெங்கு நோயின் பாரதூரத் தன்மை பற்றியும் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் தொடர்ந்து ஊடகங்களில் பிரசுரிக்க ஏற்பாடு செய்தல்.

*மாணவர்கள் கூடும் இடங்களில் விசேட கவனம் எடுத்தலும் பாடசாலை மாணவர்களைப் பிரசார நடவடிக்கைகளில் உள்வாங்குதல்.

*டெங்கு நோயின் அறிகுறி கண்டவர்களுக்கு உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலை சிகிச்சைக்கு வழி காட்டலும் ,அஸ்பிரின், புரூபன் போன்ற வில்லைகளை எடுத்தலை தவிர்க்க ஆலோசனை வழங்கலும்.

*இடம்பெயர்ந்து வந்துள்ள மக்கள் உள்ளிட்ட சமுதாயத்தின் நலிவுற்ற மக்களின் போசாக்கு தரத்தை உயர்த்துதலூடாக நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்தலுக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

*வாராந்தம் நடவடிக்கைகளில் ஏற்படும் முன்னேற்றத்தை அல்லது பிரச்சினைகளை ஆராயும் வகையில் பிரதி புதன்கிழமை தோறும் பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மருத்துவ பீட சமுதாய மருத்துவத் துறையில் ஒன்று கூடுதல். (ஒ-1)

## 'இந்து சாதனம்' மார்கழி இதழ் வெளிவந்துள்ளது




யாழ்ப்பாணம்,டிசெ.19.

சைவபரிபாலன சபையினரின் மாத வெளியீடான இந்து சாதனம் சஞ்சிகையின் மார்கழி மாத இதழ் வெளிவந்துள்ளது. ஈழத்துச் சிதம்பரத்தின் முகப்புப் படத்தையும், அக்கோவில் தொடர்பான கட்டுரைகளையும் முதன்மையாகக் கொண்டு அமைகிறது சஞ்சிகை. விநாயகர் விரதம், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு, ஆலயங்களின் நேர முகாமைத்துவம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் பணிகள், அர்ச்சனை, இந்தோனேசியாவில் இந்துத் தமிழர்கள், சரிக்கும் பிழைக்கும் ஒரே பலனா? மற்றும் கட்டுரைகள், கவிதைகளைத் தாங்கி இம்மாத இந்துசாதனம் பிரசுரமாகி உள்ளது. (அ)

## தொழிற்சங்கப் பிரமுகர் குமாரசாமி காலமானார்

கோப்பாய், டிசெ.19

குடாநாட்டில் பிரபல கூட்டுறவாளரும், ஆசிரியர் தொழிற்சங்க வாதியும், எழுத்தாளரும், அதிபருமான கோப்பாயைச் சேர்ந்த க.இ.குமாரசாமி நேற்று காலமானார்.

தமிழ் ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளராக நீண்டகாலம் பணியாற்றிய அவர் ஆசிரியர்களின் பல உரிமைகளைப் பெறுவதற்கு முன்னின்று உழைத்தவர். அதே போன்று குடாநாட்டில் கூட்டுறவுத்துறை வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றினார். இவர் எழுத்தாளருமாவார். பல நூல்களை வெளியிட் டவர். குடாநாட்டில் மிக மூத்த பிரஜைகளில் ஒருவராக விளங்கியவர்.

## கிளிநொச்சி, முல்லைத்தீவிலும் தனியார் போக்குவரத்துச் சேவை

### 23 ஆம் திகதி முதல் ஆரம்பிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.19

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் தனியார் போக்குவரத்துச் சேவையை எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநர் ஜி. ஏ.சந்திரசிறி இதற்கான அறிவித்தலை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் தனியார் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்க விரும்பும் தனியார் பஸ் உரிமையாளர்கள், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்கள் ஊடாக வடக்கு மாகாண ஆளுநருக்கு விண்ணப்பிக்குமாறு வடக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளர் தி. இராசநாயகம் அறிவித்துள்ளார்.

முதல் பதிபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பஸ்கள் சேவைக்கு விடப்படும் என்றும் பிரதிப்பிரதம செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ - 302)

## எயிட்ஸ் கருத்தரங்கு வியாழனுக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட சிகையலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட 'எயிட்ஸ்' தொடர்பான கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். ம. மரியதாசன் அறிவித்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கு எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும் என்று அவர் தெரிவித்தார். (ஒ-1)

## யாழ். மாநகரசபையில் நடைபெறவுள்ள கூட்டங்கள்

யாழ். மாநகரசபையின் மாதாந்த மற்றும் நிதி, சுகாதாரக் குழுக்களின் கூட்டங்கள் அடுத்தவாரம் நடைபெறவிருக்கின்றன என மாநகர ஆணையாளர் மு.செ.சரவணப அறிவித்துள்ளார்.

மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மாநகர முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறும்.

நிதிக்குழுக் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு மாநகர முதல்வர் தலைமையில் இடம்பெறும்.

சுகாதாரக் குழுவின் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு குழுத்தலைவர் அ.ம.மங்கள நேசன் தலைமையில் நடைபெறும்.(ஒ-1)

## அரச ஊடகங்களுக்கு எதிராக சரத் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு!

கொழும்பு, டிசெ. 19

சரத் பொன்சேகா அரசு ஊடகங்களுக்கு எதிராக நேற்றுத் தாக்கல் செய்திருந்த மூன்று அடிப்படை மீறல் மனுக்கள் மூன்று உயர் நீதிமன்றத்தின் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

தேர்தல் ஆணையாளருக்கு அரசமைப்பில் 17 ஆவது சட்ட திருத்தத்தின் கீழ் ஜனாதிபதித் தேர்தல் தருணத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ், தேர்தல் ஆணையரின் கவனத்திற்கு கொண்டு வருவார் என உயர் நீதிமன்றத்தில் தெரி வித்தார்.

இதன்படி தேர்தல் காலகட்டத்தில் அரச ஊடகங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை தெளிவுபடுத்தும் பணிப்புரையை அரச ஊடகங்களுக்கு அனுப்புவதற்கான கோரிக்கையை தேர் தல் ஆணையாளரிடம் தாம் முன்வைப்பார் என்பதையும் சட்டமா அதிபர் தெரிவித்தார்.

இதன்படி இந்த மூன்று மனுக்களின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன. பிரதம நீதியரசர் அசோக என்.டி சில்வா நீதியரசர்களான ஷிரானி திலகவர்த்தன, சலீம் மர்சூக், நிமால் காமினி அமரதுங்க, கே.ஸ்ரீபவன் ஆகிய 5 பேர் கொண்ட நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் இந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

## மீளக்குடியமர்ந்த சுகாதார தொழிலாளருக்கு சம்பள கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிசெ.19

செட்டிக்குளம் பிரதேச சபையினுடாக நலன்புரி நிலையங்களின் சுகாதார தொழிலாளர்களாகப் பணியாற்றி தற்பொழுது யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கான சம்பளம் வழங்கப்படவிருக்கிறது.

செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னரான சம்பளம் எதிர்வரும் 23ஆம் 24ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணி வரை யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும்.சம்பந்தப்பட்டவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் சமுகமளித்து சம்பளத்தைப் பெறலாம் என்று செட்டிகுளம் பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ - 1)

## வேட்பு மனுத் தாக்கல் ஒளிபரப்பு பாரபட்சம் எனக் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 19

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நிகழ்வை அரச ஊடகம் மிகவும் பக்கச்சார்பான விதத்தில் ஒளிபரப்புச் செய்ததாக சுதந்திரமான, நேர்மையான தேர்தலுக்கான பிரசார அமைப்பு (கபே) தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்காவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்வரும் பிரசாரங்களில் தனியொரு வேட்பாளர் அரச ஊடகங்களில் அளவுக்கதிகமான முக்கியத்துவம் பெறுவதைத் தடுக்குமாறும் கோரியுள்ள கபே அமைப்பு, அரச ஊடகங்களைக் கண்காணிப்பதற்குத் தகுதி வாய்ந்த அதிகாரியொருவரை நியமிக்குமாறும்கோரியுள்ளது.

கபே அமைப்பு தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் செய்யப்படும் நிகழ்வு 17 ஆம் திகதி இடம்பெற்றவேளை அது தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்ட விதம் குறித்து எமது கடும் எதிர்ப்பைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வை ஒளிபரப்புச் செய்யும்உரிமை அரசின் 'ரூபவாஹினி' அலைவரிசைக்கே வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை மிகவும் பக்கச்சார்பான விதத்தில் ஒளிபரப்புச் செய்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படும் நிகழ்வு நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்போது அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமான முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும்.

எனினும், வியாழக்கிழமை ஒரு வேட்பாளருக்கு மாத்திரம் முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

சில வேட்பாளர்களின் பெயர்களோ படங்களோ காண்பிக்கப்படாத அதேவேளை, சில வேட்பாளர்களின் பெயர்களுக்கும் படங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டமை, இந்த நிகழ்வு பக்கச்சார்பான விதத்தில் ஒளிபரப்புச் செய்யப்பட்டதை நன்கு புலப்படுத்துகின்றது.

மேலும் குறிப்பிட்ட ஒளிபரப்பின் போது அறிவிப்பாளர்கள் குறிப்பிட்ட ஒரு வேட்பாளரின் பிரசார கோஷத்தைப் பல முறை குறிப்பிட்டனர். இது பக்கச்சார்பற்ற ஊடக செயற்பாடுகள் தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விதிமுறைகள் மற்றும் மரபுகளுக்கு முரணானது.

வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நிகழ்வு முற்றுமுழுதாக பக்கச்சார்பான விதத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்டதை சுட்டிக்காட்ட விரும்பும் (கபே) அமைப்பு குறிப்பிட்ட ஒரு தொலைக்காட்சி அலைவரிசைக்கு மாத்திரம் உரிமை வழங்கப்பட்டதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றது.

இந்த நிலைக்கான பொறுப்பை தேர்தல் செயலகம் ஏற்கவேண்டும். மேலும் எதிர்காலத் தேர்தல் பிரசாரங்களில் தனியொரு வேட்பாளர் அளவுக்கதிகமான இடத்தைப் பிடிக்கும் நிலை ஏற்படுவதைத் தடுக்கவேண்டும்.

வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும் நிகழ்வை அரச ஊடகம் கையாண்ட விதம் அரச ஊடகத்தின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரை நியமிக்கவேண்டியதன் அவசியத்தைப் புலப்படுத்தியுள்ளது - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## உலக உணவுத் திட்ட நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.19

2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 11 க்குப் பின்னர் இடம்பெயர்ந்தோருக்கான நவம்பர் மாத உலக உணவுத்திட்ட நிவாரணம் கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங் கத்தினால் தற்பொழுது விநியோகிக்கப்பட்டு வருகிறது என்றும் இந்த நிவாரணத்தை எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் சகல பயனாளிகளும், பெற்றுக் கொள்ள வேண்டு என்றும் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## சடலங்களை இனங்காண உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ். ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இரு சடலங்களை இனங்காண உதவுமாறு ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யாழ். பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்ட சிவசுப்பிரமணியம் சற்குணவதி (வயது 57 - சென் ஆன் கோயில் வீதி, சுண்டுக்குளி) என்பவரின் சடலத்தையும் -

கடந்த 04 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் உயிரிழந்த முகவரி தெரியவராத என். நடராசா (வயது 65) என்பவரின் சடலத்தையும் அடையாளம் காண உதவுமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-1)

## ஜி.எஸ்.பி. வரிச்சலுகை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அரசு சாடியுள்ளது.

இந்த வரிச்சலுகையைத் நாம் கேட்பது உதவியாக அல்ல, இலங்கைப் பொருள்களை ஐரோப்பிய சந்தையில் விற்பனை செய்வதற்கான அனுமதியாகவே கேட்கிறது.

கொழும்பில் நேற்று நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துவெளியிட்ட அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கைக்கு 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையை வழங்குவதற்கு 24 நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனால், ஐரோப்பிய ஆணைக்குழு இதைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் இலங்கையில் இடம்பெறுகின்றன என்று ஐரோப்பிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அது தொடர்பில் இங்கு விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஆணைக்குழு கூறுகின்றது.

இங்கு மனித உரிமை மீறல்கள் எவையும் இடம்பெறவில்லை. அது தொடர்பில் விசாரணை நடத்த நாம் இடங்கொடுக்க மாட்டோம். ஒருபோதும் எமது நாட்டின் இறைமையில்கைவைக்க விட மாட்டோம்.

தற்போது யுத்தம் முடிவுற்றுள்ளது. முதலீட்டுக்கான வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. அகதிகளின் நிலைமை தொடர்பிலும் ஐரோப்பிய ஒன்றியம் திருப்தி வெளியிட்டுள்ளது. அதேபோல், சேர் ஜோன் ஹோம்ஸும் இது தொடர்பில் திருப்தி வெளியிட்டுள்ளார்.

இந்த நிலைமையின் கீழ் எமது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஐரோப்பிய ஆணைக்குழு எமக்கு உதவவேண்டும். எம்மைத் தாக்குவதற்கு 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையை ஐரோப்பிய ஆணைக்குழு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடாது.

ஐரோப்பிய ஆணைக்குழு எடுத்திருக்கும் தீர்மானம் சட்டவிரோதமானதாகும். இத்தீர்மானத்தால் இலங்கைக்குத் தீங்கிழைக்கப்பட்டிருந்தால் ஐரோப்பிய ஆணைக்குழுவிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் நாம் ஆலோசிப்போம். - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை, யாழ்ப்பாணம்.



# எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்தார் அத்வானி

## அந்த இடத்துக்கு சுஷ்மா சுவராஜ் தெரிவு

டில்லி, டிச. 19

நாடாளுமன்ற எதிர்க்கட்சித்தலைவர் பதவியிலிருந்து பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் எல்.கே.அத்வானி நேற்று ராஜினாமச் செய்தார்.

அவரைத் தொடர்ந்து அந்தப் பதவியை மற்றொரு மூத்த தலைவரான சுஷ்மா சுவராஜ் தொடர்வார் என பா.ஜ.க. அறிவித்துள்ளது.

இந்தியாவில் பாரதிய ஜனதா கட்சியின் செல்வாக்கை மக்கள் மத்தியில் வளர்த்த பெருமைக்குச் சொந்தக்காரரும், ரத யாத்திரை மூலம் இந்திய மக்களைச் சந்தித்து பா.ஜ.கவை ஆட்சியில் அமர்த்த காரணமாக இருந்தவருமான அத்வானி, பிரதமர் பதவியில் அமருவார் என்ற எதிர்பார்ப்பு சாத்தியமாகவில்லை.

பா.ஜ.கவின் வளர்ச்சியில் முக்கிய பங்கு பெற்ற அத்வானி நேற்றைய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் முடிந்ததும் எதிர்கட்சி தலைவர் பதவியில் இருந்து விலகினார்.

பிரசித்திபெற்ற பாபர் மசூதியை பாரதிய ஜனதா கட்சி ஆதரவாளர்களே இடித்தார்கள் என்றும் அதற்கு மூல காரணம் அத்வானியே என்றும் லிபரான் விசாரணை அறிக்கையில் கூறப்பட்ட விவரம் அண்மையில் இந்திய நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.

அதன் காரணமாகவே அத்வானி எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ராஜினாமச் செய்தார் என்று பரவலாகக் கருதப்படுகிறது.

(முன்னர் வந்த செய்தி 18 ஆம் பக்கத்தில்)

# படகுகள் மூலம் ஆஸி. செல்ல முற்பட்ட 108 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

கொழும்பு, டிச. 19

இலங்கையிலிருந்து சட்டவிரோதமான முறையில் படகுகளின் மூலம் ஆஸ்திரேலியாவிற்குச் செல்ல முற்பட்டவேளையில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 108 பேரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

படகுகளின் மூலம் சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவிற்குச் செல்ல முயற்சி மேற்கொண்ட 158 பேரில் 108 பேர் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் 106 பேர் தமிழர்கள் எனவும், இரண்டு பேர் சிங்களவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட குழுக்களில் 28 தமிழீழ விடுதலைப் புலி சந்தேகநபர்களும் அங்கம் வகிப்பதாகக் கூறப்படுகிறது. (சி)

## வடக்கு, கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு, கிழக்கில் அமைக்கப்படவுள்ள வாக்குச்சாவடிகள் பற்றிய முடிவுகள் முன்வைக்கப்படவுள்ளன.

வடக்கில் வாக்குச்சாவடிகள் அமைப்பது குறித்து ஏற்கனவே ஆராயப்பட்டு வந்தது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் தேர்தல் செயலக அதிகாரிகள் திரட்டிய தகவல்களுக்கு அமையவே இவ்வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளன என்று கூறப்பட்டது.


பொருளியல்
NB.கஜீதரன்
A/L 2011 -பிரிவு - 11
★ சந்தைச் சமநிலை மாற்றம் வரிவிதிப்பு, மானியம் வழங்கல்
♦ BPI (குருநகர்)
♦ SHAMROCK (ஈச்சமோட்டை)
♦ NEC (யாழ் நகர்)
♦ VICKNA (யாழ் நகர்)
♦ HAC (சித்தன்கேணி)
(ஆரம்பம் : இன்று (19.12.2009) -நேரம் அலுவலகத்தில்)
(91573)


## மூன்று எம்.பிக்களின் உறுப்புரிமையை நீக்க ஐ.தே.க. நடவடிக்கை

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இந்திக்க பண்டார நாயக்க, மயோன் முஸ்தபா ஆகியோரை கட்சியின் சகல பொறுப்புக்களிலில் இருந்தும் நீக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகாவை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கி அவருக்கு ஆதரவு வழங்குவது என ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ள நிலையில், இவர்கள் மூவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட்டதன் காரணமாக அவர்களை நீக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

## வருங்காலச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு -

இந்த நாட்டை முன்னேற்ற நாம் பிரபாகரனின் பெற்றோரிடம் பணம் கேட்க மாட்டோம். எமது விவசாயிகளின் உழைப்பால் நாட்டைக் கட்டியெழுப்புவோம்.

மக்களுக்கு நாம் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை நாம் நிறைவேற்றியுள்ளோம். யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டில் அமைதியை ஏற்படுத்தினோம். அதனால்தான் இன்று இத்தகைய அரசியல் கூட்டங்கள் அமைதியாக நடக்கின்றன - என்றார்.

அரசில் புதிதாக இணைந்துகொண்ட அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டே மற்றும் எஸ்.பி. திஸாநாயக்க உட்பட மற்றும் பல முக்கிய அரசியல் பிரமுகர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-சி)

# தேர்தலின்போது பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் குறித்து கண்காணிப்பு

## ரான்பெரன்ஸி சர்வதேச அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, டிச. 19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் குறித்து கண்காணிக்கப்படும் - என்று ரான்பெரன்ஸி சர்வதேச அமைப்பின் இலங்கைக் கிளை அறிவித்துள்ளது.

வரி செலுத்துவோரின் பணம் வீண் விரயமாக்கப்படுவதனைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் குறித்த அமைப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

அரச வாகனங்கள், ஹெலிகொப்டர்கள், கட்டடங்கள் மற்றும் ஏனைய சேவைகளை தேர்தல் நோக்கங்களுக்காக பயன்படுத்துதல் தவிர்க்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச ஊடகங்களால் மேற்கொள்ளப்படும் பக்கச் சார்பான பிரசாரங்கள் தொடர்பிலும் கண்காணிக்கப்படவுள்ளது.

அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல் தண்டனை விதிக்கப்படக் கூடிய குற்றச் செயல் என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அரச சொத்து துஷ்பிரயோகம் தொடர்பிலான கண்காணிப்பு நடவடிக்கைகள் நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்படும் என ட்ரான்பெரன்சி சர்வதேச அமைப்பின் இலங்கைக் கிளை நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.சீ. வெலியமுன தெரிவித்துள்ளார். (அ-சி)

## உலக வங்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவைகளைப் பூர்த்தி செய்தல், மற்றும் உள்ளூர் பாதைகளை சீரமைத்தல், உட்பட்ட வருமான மற்றும் விவசாய வேலைத் திட்டங்களுக்காக இந்த நிதி உபயோகிக்கப்படவுள்ளது.

அத்துடன் வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் வீதிகளை அபிவிருத்தி செய்யவும் இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது. (அ-சி)

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாள் தோறும் இந்த நேரஒழுங் கில் பஸ் சேவை இடம்பெறும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, வடமராட்சி சிற்றூர்திச் சேவை சங்கமும் பருத்தித்துறையிலிருந்து வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களுக்கான பஸ் சேவையை ஆரம்பிக்க ஆலோசித்து வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ - 236 - 16)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றி குறிப்பிட்ட பஸ் நிலையங்களில் இருந்தே புறப்பட்டுச் சென்றன. அனைத்து பஸ்களும் தொடரணி இன்றி வெவ்வெறு நேரங்களில் தனித்தனியாகப் புறப்பட்டுச் சென்றன.

அதேபோன்று வவுனியாவில் இருந்தும் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி பொதுமக்கள் யாழ்ப்பாணம் வர அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதுவரை காலமும் பயணிகளின் ஆளடையாளத்தை நிரூபித்து, தங்களின் பயணப் பொதிகள் அனைத்தையும் துருவித்துருவி சோதனையிட்ட பின்னரே போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டனர்.

ரயில் நிலைய வளாகம், சிங்கள மகாவித்தியாலயம் என வெவ்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று பின்னர் மணித்தியாலக் கணக்கில் கால் கடுக்க நின்றே பயணம் செய்ய நேரிட்டது. அதுவும் தொடர் அணியிலேயே பஸ்கள் சென்றன.

நேற்று இந்த நடைமுறைகள் எதுவுமின்றி பயணிகள் மிக இலகுவாக - வசதியாகத் தமது பயணத்தை மேற்கொண்டனர். ஏ-9 வீதியின் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே நேற்றுப் பயணிகளின் அடையாள அட்டைகள் பரிசோதனை செய்யப்பட்டன. அதுவும் எவரையும் பஸ்களில்இருந்து இறக்கப் படாமலேயே சோதனை இடம்பெற்றதாகப் பயணிகள் தெரிவித்தனர். (ஒ-1-204)

# 3 விக்கெட்டுக்களால் இலங்கைவெற்றி

நாக்பூர், டிசெ.19

இலங்கை இந்திய அணிகளுக்கிடையில் நாக்பூரில் நேற்று இடம்பெற்ற 2 ஆவது ஒருநாள் ஆட்டத்தில் இலங்கை 3 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

முதல் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 301 ஓட்டங்களை பெற்றது.

தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணி ரி.எம்.டில்சானின் அபார ஆட்டத்தால் 49.1 ஒவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. டில்சான் அபாரமாக ஆடி 123 ஓட்டங்களைக் குவித்தார்.

## ரெலோ அமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் என நாடாளுமன்ற உறுப்பின ரும் ரெலோவின் செயலதிபருமான செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியவை வருமாறு:-

எதிர்வரும் ஓரிரு தினங்களிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரை ஆதரிக்கும் என்ற முடிவை முன்வைக்கும். எமது கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு சென்றுள்ளமையால் முடி வெடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இப்படியான காலதாமதம் சர்ச்சைகளை உண்டுபண்ணலாம் என்ற கருத்தும் உண்டு.

தமிழீழ விடுதலை இயக்கத்தை (ரெலோவை) பொறுத்தவரை அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு என்றும் இணைந்திருப்பதுதான் எமது விருப்பம். இதற்கான அர்ப்பணிப்பை தமிழீழ விடுதலை இயக்கமும் செய்திருக்கிறது. சில விட்டுக்கொடுப்புகளைக் கொடுத்து இந்தக் கூட்டமைப்பை ஒன்றுபடுத்தியுள்ளோம்.

இந்த வகையிலே எமது மக்களின் எதிர்பார்ப்பு அதுவே. அவர்களால் உருவாக்கப்பட்ட இந்தக் கூட்டமைப்பு எங்களால் நிச்சயம் முன்னெடுக்கப்படும்.

கூட்டமைப்பிலிருந்து ரெலோ என்றும் விலகமாட்டாது. அதேபோல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உடையாது. அவ்வாறு ஒரு சந்தர்ப்பம் வந்தால் கூட்டமைப்பின் ஐக்கியத்தைக் காப்பாற்ற நாங்கள் முழுமூச்சுடன் தோள் கொடுப்போம் என்பதை உறுதியுடன் கூறுகிறேன் - என்றார். (அ-சி)


SM CONSULTANT SERVICE

UK STUDENT VISA
- யாழ் மாணவர்களுக்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் மக்களின் நன் மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்.
- ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான பிரவேசத்துக்குரிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களை சமர்ப்பித்து தற்போது அமுலில் உள்ள இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களை பெற்றுக்கொள்ளுங்கள்.
- சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக்கொள்ளுங்கள்!!!

STUDY IN MALASIYA
- குறைந்த கட்டணத்தில் மலேசியாவில் பட்டப்படிப்பு (3 வருடங்கள்).
- விரும்பின் 3ம் வருடம் லண்டனில் பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்யும் வாய்ப்பு.
- மலேசியாவில் கல்வி கற்கையில் பகுதி நேர வேலைவாய்ப்பு.
- மலேசியாவில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்தால் மத்திய கிழக்கு நாடுகளில் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் வேலை பெறும் வாய்ப்பு.

STUDY IN EAST EUROPE-UKRAINE-MBBS/MD
- Lugansk State Medical University(Ukraine) இல் இணைந்து சிறிலங்கா Medical Concil லினால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக நீங்களும் வர விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
- G.C.E. O/L தகமையுடன் 7 வருடங்கள் கற்கைநெறி.
- G.C.E. A/L தகமையுடன் 6 வருடங்கள் கற்கைநெறி.
- உணவு, விடுதி வசதி அனைத்தும் உட்பட.......

அனைத்து விபரங்கட்கும்
தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணிமுதல் மாலை 7.00 மணி வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம்.
அனைத்து சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

தொடர்புகளுக்கு:
0212223818, 0215673818, 0774528818
e.mail: mg1404_2009@yahoo.com
இல:148,கோவில் வீதி (முதல் ஒழுங்கை) யாழ்ப்பாணம்.



மணமகன் தேவை

யாழ்.கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவரும் தற்போது இங்கிலாந்து பிரஜாவுரிமையுடையவரும் லண்டனில் Qualified Nurse ஆக பணிபுரிபவருமான 35 வயதுடைய மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.

அதே துறையைச் சேர்ந்த அல்லது வேறு துறையில் தகைமை பெற்றவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0775982918 (இலங்கை), 00442086799274 (U.K.)
regi 174@hotmail.lo.uk.



LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=
(9/562626)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.